கலைமகள் வெளியீடு—அ.

உ
கணபதி துணை

ஸ்ரீ சென்னமல்லையர் இயற்றிய

சிவ சிவ வெண்பா

மூலமும் உரையும்

பதிப்பாசிரியர்:
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்
ஈசுவர ஞு மாசி மீ
1938

[*All Rights Reserved*]

உ

கணபதி துணை

முகவுரை

தமிழ்நாட்டில் பழையகால முதல் எழுந்த இலக்கிய நூல்களுள்ளே பலவகையாலும் சிறப்பெய்தியது திருக்குறளாகும். தமிழ்நூலாசிரியர்கள் யாவராலும் போற்றப்பெறுவது அது. சமய வேறுபாடின்றித் தமிழாசிரியர் பலரும் அந்நூலைப் பாராட்டுகின்றனர். திருக்குறட் கருத்துக்களையும் சொல்லமைதியையும் பெரும்பாலும் எல்லாத் தமிழ்நூல்களிலும் காணலாம்.

சிறந்த நீதிநூலாகிய அக்குறளைச் சார்ந்து பிற்காலத்தில் பலவகையான நூல்கள் உண்டாயின. அந்நூற்பாக்களைச் செய்யுட்களின் இடையிலும், இறுதியிலும் அமைத்துச் சில நூல்கள் இயற்றப்பெற்றுள்ளன. இங்ஙனம் ஒருநூலின் பகுதிகளைச் செய்யுளில் அமைத்துப் பாடுதல் வடமொழியிலும் உண்டு. வேதபாதஸ்தவம் போன்ற நூல்கள் அத்தகையனவே.

திருக்குறட்பாக்களுக்கு உதாரணமோ விளக்கமோ கூறி அதனோடு குறளையும் கொண்டு அமைந்த செய்யுட்களையுடைய நூல்களுள் சிவசிவ வெண்பா ஒன்றாகும். இதனைப் போன்ற சில நூல்கள் இதற்கு முன்னும் உண்டு; பின்னும் உண்டு. அவற்றுள் இப்பொழுது தெரிந்தவை வருமாறு:—

(1) சினேந்திர வெண்பா: இந்நூல் இரண்டாமடியின் மூன்றாஞ்சீர் சினேந்திரனே என்னும் விளியமைந்த வெண்பாக்களாலானது. இதனை இயற்றியவர் ஒரு சைனரென்பது சொல்லாமலே விளங்கும். ஒவ்வொரு குறளையும் ஈற்றடி இரண்டாகப் பெற்ற 1330 வெண்பாக்கள் இந்நூலில் உண்டென்று பலவருஷங்களுக்கு முன் வேதாரண்யத்திலிருந்த சைன நண்பர் ஒருவர் கூறினர்; இந்நூலிலிருந்து சில வெண்பாக்களையும் சொல்லிக் காட்டினர். இப்பொழுது இது கிடைத்தற்கரிது.

(2) இரங்கேச வெண்பா: பிறைசைச் சாந்தகவிராயரென்பவர் இயற்றியது. இரங்கேசா வென்னும் விளியமைந்தது. ஒவ்வோரதிகாரத்தினின்றும் ஒவ்வொரு குறளை யெடுத்தமைத்த வெண்பாக்களை உடையது. இது நீதிசூடாமணி யென்றும் பெயர் பெறும்; உரையோடு அச்சிடப்பட்டுள்ளது.

(3) தினகர வெண்பா: இது பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் தொண்டைநாட்டிலுள்ள கோவூரென்னும் ஊரில் வாழ்ந்திருந்த தினகரரென்ற சீர்கருணீகச் செல்வர் ஒருவரை முன்னிலைப் படுத்தி அதிகாரத்துக்கு ஒரு குறளாக எடுத்து வெண்பாவில் அமைத்துப் பாடப்பெற்ற நூல். இது சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்ஆராய்ச்சித்துறைத்தலைவர் ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது.

(4) வடமலைவெண்பா: காவை வடமலையப்ப பிள்ளையை முன்னிலைப்படுத்தி ஒவ்வோரதிகாரத்திலிருந்து ஒவ்வொரு குறளை எடுத்து அமைத்த வெண்பாக்களையுடையது; அச்சிடப் பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் பாகை அழகப்பனென்னும் புலவர்.

(5) திருமலைவெண்பா: திருமலைக்கொழுந்துபிள்ளையென்பவரை முன்னிலைப் படுத்தியது. ஓர் அதிகாரத்திற்கு ஒரு வெண்பா அமைந்தது.

(6) முதுமொழிமேல் வைப்பு: அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்றுக்கும் திருக்குறட் பாக்களையும், வீட்டுப்பால் என்ற பகுதிக்குச் சித்தாந்த சாத்திரமாகிய திருவருட் பயனிலுள்ள குறள்வெண்பாக்களையும் மேற்கோளாக உடையது; வெண்பாக்களாலானது; இது பதிப்பிக்கப்படவில்லை.

(7) திருப்புல்லாணி மாலை: திருப்புல்லாணியிற் (தர்ப்ப சயனத்திற்) கோயில் கொண்டெழுந்தருளிய திருமாலை முன்னிலைப் படுத்தி அதிகாரத்துக்கு ஒரு செய்யுளாகக் கொண்டு பாடப் பெற்றது. இது கட்டளைக்கலித்துறையில் அமைந்தது. மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரசுரமாக ஸ்ரீமான் திரு. நாராயணையங்காரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

(8) ஒவ்வொரு திருக்குறட்பாவையும் ஒவ்வொரு விருத்தத்தில் அமைத்து 1330 செய்யுட்களால் இயற்றப்பெற்ற நூல் ஒன்று உளதென ஸ்ரீமான் வையாபுரிப் பிள்ளையவர்கள் தினகர வெண்பா முகவுரையிலே எழுதியிருக்கின்றனர்.

(9) சோமேசர் முதுமொழி வெண்பா: தொண்டை நாட்டிலுள்ள குளத்தூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சோமேசரை முன்னிலைப் படுத்தித் திருவாவடுதுறை யாதீனத்து வித்துவான் ஸ்ரீ சிவஞானசுவாமிகள் இயற்றியது. இது 133 வெண்பாக்களால் ஆகியது.

(10) திருத்தொண்டர் மாலை: இது திருத்தொண்டர் வெண்பாவென்றும் சொல்லப்படும். குமாரபாரதி யென்பவரால் இயற்றப்

பெற்றது. இதில், குறளிலுள்ள வரிசைப்படி வெண்பாக்கள் அமையவில்லை. பெரியபுராணத்திற் கூறப்படும் நாயன்மார்களுடைய வரலாற்றின் நீதியாக ஒவ்வொரு குறளை இணைத்து அந் நாயனர் சரிதவரிசையிலே பாடப்பெற்ற 100 வெண்பாக்களையுடையது; அச்சிடப்பெற்றுள்ளது.

(11) வள்ளுவர் நேரிசை: காலஞ்சென்ற அரசஞ்சண்முகனர் இயற்றியது. நேரிசை வெண்பாக்களாலானது.

(12) முருகேசர் முதுநெறி வெண்பா: சிதம்பரம் ஈசானிய மடத்து இராமலிங்க சுவாமிகள் இயற்றியது; 133 வெண்பாவால் அமைந்தது; உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(13) திருக்குறட் குமரேச வெண்பா: தூத்துக்குடியிலுள்ள ஸ்ரீமான் ஜகவீரபாண்டியனவர்கள் ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு வெண்பாவாகக் குமரேசரை முன்னிலைப் படுத்திச் செய்யப்பெற்ற நூல். ஆசிரியரால் விரிவான உரையுடன் வெளியிடப்பட்டு வருகின்றது.

சிவசிவ வெண்பாவென்பது சிதம்பரம் பச்சைக் கந்தையர் மடத்துச் சென்னமல்லைய ரென்பவரால் இயற்றப் பெற்றது. இதனை அரங்கேற்றிய காலம் சகம் 1690 (கி. பி. 1767-8) என்று சிறப்புப்பாயிரம் தெரிவிக்கின்றது.

காப்பு, அவையடக்கம், உதாரணங்கள் கூறவேண்டுமென்பது என்னும் தலைப்போடுள்ள வெண்பாக்கள் மூன்றும், திருக்குறளில் அதிகாரத்துக்கு ஒன்ருக எடுத்த 133 செய்யுட்களையமைத்த 133 வெண்பாக்களும் உடையது இந்நூல். சிவசிவா என்ற முன்னிலை உடைமையின் இது "சிவசிவ வெண்பா" என்னும் பெயருடையதாயிற்று. இதனை இயற்றியவர் வீரசைவராதலின் இம்முன்னிலையை அமைத்தார். இதற்கு ஓர் உரையும் உண்டு. 98-ஆம் செய்யுளுக்கு மேல் இந்த உரை எனக்குக் கிடைக்கவில்லை.

இந்நூலாசிரியர் பல நூற்பயிற்சியுடையவர். இந்த நூலில் 13 வெண்பாக்களில் (7, 13, 15, 32, 43, 46, 50, 52, 63, 78, 80, 81, 106) தளை பிறழ்ந்திருக்கின்றது. கருவிளமென்னும் வாய்பாட்டையுடைய சிவசிவாவென்பதை இரண்டாம் அடியில் மூன்ருஞ்சீரில் அமைப்பதை நியமமாகக் கொண்ட இவர், அதற்கு ஏற்றபடி வெண்பாக்களெல்லாவற்றையும் நேரசையாகவே தொடங்கியிருப்பின் இவ்வழு நேர்ந்திராது. நூலியற்றும் ஆர்வமட்டும் உடையவர் இவரென்றும், அதற்கேற்ற பயிற்சியை இவர் மிகுதியாகப் பெற்றவரல்லரென்றும் தோற்றுகிறது. இவர் குறளுக்கு உதாரணமாகக் காட்டும் வரலாறுகள் இராமாயணம், பாரதம் முதலிய இதி

காசங்களிலிருந்தும் பல தல புராணங்களிலிருந்தும் எடுத்துக் கொண்டவை. அவ்வுதாரணங்களிற் சிலவற்றுக்கும் குறட் கருத்துக்கும் உள்ள பொருத்தம் தெளிவாகப் புலப்படவில்லை. இவர் பல சைவ புராண வரலாறுகளை உதாரணமாகக் காட்டியுள்ளாராயினும், பாரத பாகவத இராமாயண வரலாறுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. ஆதலின் வீரசைவராயினும் இவர்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் குறளின்படி ஒழுகுபவரென்று தெரிகிறது.

இதன் உரையாசிரியர் இன்னாரென்றும் இன்ன காலத்தவரென்றும் விளங்கவில்லை. இவர் சிவசிவ வெண்பாவிற் பொருத்தப்பெற்ற திருக்குறளுக்கு மாத்திரம் பரிமேலழகர் உரையை எடுத்தெழுதிவிட்டு, இன்னதற்குப் பிரமாணம் இன்னதென்று மேற்கோட்செய்யுளைக் காட்டுகின்றார். சிவசிவ வெண்பாவிலுள்ள வரலாற்றுக்கும் குறளுக்கும் உள்ள இயைபை விளக்கியிருந்தால் நலமாக இருக்கும்.

இவ்வுரையாசிரியர் மேற்கோளாகக் காட்டும் நூல்கள் வருமாறு:—அரிச்சந்திரபுராணம், அருணாசலபுராணம், இராமாயணம், உத்தரகாண்டம், உபதேசகாண்டம், கந்தபுராணம், கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி, காசிகாண்டம், கூவப்புராணம், சதகண்டசரித்திரம், சிதம்பரபுராணம் சிவபுண்ணியத் தெளிவு, செவ்வந்திப் புராணம், ஞானவாசிட்டம், தண்டகாரணியமகிமை, திருவாதவூரர் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், தீர்த்தகிரிப் புராணம், தேவாரம், நீதிவெண்பா, நைடதம், பாகவதம், பிரமோத்தரகாண்டம், புதுமொழி, பெரியபுராணம், யாளிசரித்திரம், விருத்தாசல புராணம், வில்லிபுத்தூரர் பாரதம் என்பன.

இவற்றுள் சதகண்டசரித்திரம், தண்டகாரணிய மகிமை, புதுமொழி, யாளிசரித்திரமென்பன இப்பொழுது காணப் படாத நூல்கள். சதகண்ட ராவணன் கதையென ஒன்று தமிழ் வசன நடையில் இருக்கின்றது. இக்கதையைச்சொல்லும் செய்யுள்நூலே சதகண்ட சரித்திரமென்று தோற்றுகின்றது. நீதி வெண்பாவை நீதிசாரமென்று இவ்வுரையாசிரியர் குறிக்கின்றார். புதுமொழி என்ற பெயரோடுள்ள செய்யுட்கள் இந்நூற் கருத்தை விளக்கும் பொருட்டு நூலாசிரியராலோ, அவரோடு பழகிய வேறொருவராலோ, அன்றி இவ்வுரையாசிரியராலோ இயற்றப்பட்டனவென்று கொள்ள இடமுண்டு.

உரையாசிரியர் குறளுக்கு உரையாக எழுதும் பரிமேலழகர் உரைப்பகுதியிலும், மேற்கோளாக எடுத்துக்காட்டும் பழைய

செய்யுட்களிலும் சில பாடபேதங்கள் உள்ளன. அவை ஏட்டில் உள்ளவாறே பதிப்பிக்கப்பெற்றன. அவற்றிற் சில இப்பொழு துள்ள பாடங்களிலும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன.

இந்நூல் மூலமட்டும், சோமேசர் முதுமொழி வெண்பா வோடு சேர்த்து 1901-ஆம் ௵ சிதம்பரம் அ. இரத்தினசபாபதி முதலியாரென்பவராற் பதிப்பிக்கப்பட்டது.

பலவருஷங்களுக்கு முன் இந்நூலும் உரையும் அடங்கிய ஏட்டுப் பிரதிகள் இரண்டு திருமழிசைச் சிவப்பிரகாசையரென்பவ ரிடமிருந்து எனக்குக் கிடைத்தன. அவ்விரண்டும் குறைப்பிரதி களே. அவற்றுள் ஒன்று மிகப்பழையது. அதில் 50 செய்யுட் களும் உரையுமே இருந்தன. மேற்கோட் செய்யுட்களுக்குத் தனியே தொகை அதிற் காணப்படுகின்றது. மற்றோர் ஏட்டில் 98 செய்யுட் களும் உரையும் இருந்தன. அதன் இறுதியில் 'சித்திரபாநு௵ அற்பிசிமீ ௨௨ சிவசிவ வெண்பா எழுதி நிறைவேறினது' என்ற வாக்கியம் காணப்படுகின்றது. இவற்றையன்றி வேறு சில மூலப் பிரதிகளையும் அவ்வப்போது பார்த்துப் பாடபேதம் குறித்துக் கொண்டதுண்டு.

பல பழைய செய்யுட்களின் நல்ல பாடம் வெளியாதல் கருதி யும், சில புதியசெய்யுட்கள் தெரிதலை எண்ணியும், திருக்குறளின் பால் சிறந்த புலமை யுடையாருக்கும் இல்லாதாருக்கும் உள்ள பேரன்பு இதனால் வெளியாகும் என்பதை நினைந்தும் இந்நூல் இப் பொழுது பதிப்பிக்கப் பெற்றது. உரையில்லாத வெண்பாக்களுக் குச் சுருக்கமான குறிப்புரை மட்டும் எழுதியமைத்திருக்கின்றேன்.

'கலைமகளி'ல் இதனை வெளியிட்டுதவிய அப்பத்திரிகையின் அதிபர் ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்கள் திறத்தில் நன்றி யறிவுடையேன். அவர்களுடைய தமிழன்பு பலவகையாக வெளிப் படுவதை யறிந்து பாராட்டுகின்றேன்.

இதனை ஆராயும்போதும் பதிப்பிக்கும்போதும் வழக்கப்படி உடனிருந்து உதவிசெய்தவர்கள் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிர மணிய ஐயரும் கலைமகள் துணையாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவார்கள்.

"தியாகராஜ விலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
12—2—38

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

சிறப்புப் பாயிரம்

ஆயிரத் தறுநூற் றெண்பது பத்தாம்
ஆண்டுசெல் சகாப்தநா ளதனில்
மாயிரு ஞாலத் ததிகமாந் தில்லை
மன்றில்வாழ் சென்னமல் லையர்
பாயிரு டரக்கும் பரிதிபோற் பாவப்
படரகற் றிடுஞ்சிவ வெண்பா
தீயவை போக்கிப் பரகதி சேரச்
செப்பினன் றெளிதவத் தவர்க்கே.

உ

சிவமயம்

சிவசிவ வெண்பா

காப்பு

1. [1] தெள்ளுலக நீதி சிவசிவா வென்றுதிரு
வள்ளுவர்வெண் பாவால் வழுத்துறவெற்—குள்ளதுணை
கந்தனிலீ ராறுன கைமே வியகருணைத்
தந்திமுகன் செம்பதுமத் தாள்.

அவையடக்கம்

2. [2] சிவசிவவென் றோதுவரிச் செய்யுட் டிறந்தேர்ந்
தெவர்களுமென் றஞ்சா திசைத்தேன்—கவிஞரியற்
பண்பா லுரைத்த பழமொழிமுன் னீதுமொரு
வெண்பா வெனவிளங்க வே.

உதாரணங்கள் கூறவேண்டுமென்பது

3. [3] ஆதிமுதல் வள்ளுவர்சொல் லாரணமாஞ் செந்தமிழ்கொண்
டோதுதமிழ்க் கோது முதாரணங்கள்—வேதமெனும்
காரணத்தாற் பாரதத்தைக் கன்மீதி லேபொறித்த
வாரணத்தின் தாட்டா மரை.

விநாயகர்துதியும் அவையடக்கமும் உதாரணங்கள் கூறவேண்டுமென்பதும் கூறப்பட்டன. திருவள்ளுவநாயனார், சகல ஆன்மாக்களும் இகபர சாதகமடையும் பொருட்டுச் சகல வேதாகம புராணசாரமாக ஆதியிலே ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள் வெண்பாவாகத் திருவாய் மலர்ந்து நூற்று முப்பத்து மூன்று அதிகாரமாக, தர்மார்த்த காமத்தின் பாலாகக் கட்டளையிட்டு, சற்குருவின் அனுமதியின் விளங்கினல் அதுவே மோட்சமென்று அனுக்கிரகித்தார். அந்தக் குறளுக்குப் பொரு

1. உலக நீதியை. கந்தனில் - கந்தனைப்போல; கம்தனில் - தலையி லென்பதும் ஒரு பொருள். ஈர் ஆறு ஆன கை—ஈரமாகிய மதவாறு உண்டாகிய கை; பன்னிரண்டாகிய கையென்பது வேறு பொருள்.

2. எவர்களும் சிவசிவ வென்று ஓதுவர்.

3. பாரதம் ஐந்தாம் வேதமென்று சொல்லப்படும். கல் - மேருமலை. வாரணம் - விநாயகர். தாமரை உதாரணங்களை ஓதும்; ஓதும் - எனக்கு அறிவிக்கும்.

ளுரைக்குமிடத்து [1]மாவலிபாற் குறள் வடிவுகொண்டு எழுந்தருளின மூர்த்தி வளர்ந்த திரிவிக்ரம அவசரம் அளவிட்டுச்சொல்ல முடியாததுபோல அநேக நூற்பொருள்களால் விளங்கும். அப்படியான தெய்விகத் தமிழ்கொண்டு சிவ சிவவெண்பா வென்று சொல்லப்பட்டது.

நூல்

கடவுள் வாழ்த்து

1. விற்பிரம்பான் மன்னர்செயன் மேவவுல கெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா—பொற்பின்
[2] அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்பதிலுள்ள குறட்கு உரை: அகரமாகிய முதலையுடையன, எழுத்துக் களெல்லாம்; அதுபோல ஆதிபகவனுகிய முதலை உடைத்து உலகமென்றவாறு.

அகரவுயிர்போல ஆதிபகவனுகிய பரமசிவனே உலகத்தில் வியாபித்து நின்றதற்குப் பிரமாணம்: வில்லாலும் பிரம்பாலும் அருச்சுனனும் பாண்டியனும் அடித்த அடி எங்கும் உற்றமையால் விளங்கும். அருச்சுனன் தவம் பண்ணுகையிற் சிவபிரான் வேடவடிவங்கொண்டு எழுந்தருளினபோது வில்லாலடித்தது பாரதத்தில் தவநிலைச் சருக்கத்தில் சொல்லப்பட்டது.

"விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்
விரிஞ்சன்முத லோருதிசூழ்
மண்ணிலுறை மானவரில் யாரடி படாதவர்
மனுக்கண்முத லோர்களதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்கள்
கட்செவி மகீபன்முதலோர்
எண்ணில்பல யோனியிலும் யாவடி படாதன
விருந்துழி யிருந்துழியரோ."
"வேதமடி யுண்டன விரிந்தபல வாகம
விதங்களடி யுண்டனவொரைம்
பூதமடி யுண்டன விநாடிகைமு தற்புகல்செய்
பொழுதொடு சவிப்பில்பொருளின்
பேதமடி யுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலர சன்றன்மகளார்

---

1. "மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுது நயந்தளந்தான் - வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து"
(திருவள்ளுவமாலை, 6.)

2. குறள், 1.

நாதனம லன்சமர வேடவடி வங்கொடு
நான்கையடி யுண்டபொழுதே."
(வி. பா. அருச்சுனன் தவநிலை. 107, 108.)

1செம்மனச் செல்விக்காக மண்சுமந்த சருக்கத்தில் சொல்லப்பட்டது:

"தார்மேனின் றிலங்குபுய வழுதி மேலுந்
தன்மனைமங் கையர்மேலு மமைச்சர் மேலும்
ஆர்மேலுஞ் சென்றுபொருஞ் சேனை மேலும்
அயன்மேலு மான்மேலு மறவோர் மேலும்
தேர்மேல்வெம் பகன்மேலு மதியின் மேலுஞ்
சிறந்துளவிந் திரன்மேலுந் தேவர் மேலும்
பார்மேலுங் கடன்மேலு மாங்கண் மேலும்
பட்டதரான் மெய்யிலடி பட்ட போதே."
(திருவாதவூரர் புராணம், மண்சுமந்த. 52.)

2 "இந்திரனை மவுலிதுகள் படவடித்தான் வழுதிமுன்னு
ளிறைவ னீன்ற
கந்தனயன் குட்டுவெளிப் படவடித்தான் றராந்தோடிக்
கண்ணன் றன்னை
நந்தன்மனை யடித்தனளிவ் வடிகளெல்லா மெவணுற்ற
நாதன் மீதே
இந்துகுல மைந்தனடி யிருதிறமு மெவ்வுலகு
மெய்திற் றன்றே."
(புதுமொழி)

இப்படி, பரிபூரணமான கடவுளை வணங்கும் உலகத்திற்குக் காரணம் மழையாதலின் மேலதிகாரத்தில் வான்சிறப்புக் கூறுகின்றார். (க)

வான் சிறப்பு

2. பூமலர்சொ ணேரியற்கும் பூவையர்க்கும் [3]பூமழைசெய்
தீமைநலங் கண்டோஞ் சிவசிவா—ஆமுற்
[4] கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

(எ - ரை.) பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று அவரவர் குற்றத்தால் கெடுப்பதூஉம் அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம் இவையெல்லாம் வல்லது மழை. எ - று.

---

1. செம்மனச்செல்வி - வந்தியென்னும் பிட்டுவாணிச்சி; திருவாத. மண்சுமந்த. 22.

2. "எண்கணனைக் குட்டியகுட் டெங்கேனும் பட்டதோ, மங்கையரி மேலடித்த மத்தடிபோய் - எங்கேனும், பட்டதோ வெங்கள் பசுபதிமேற் பட்டவடி, பட்டதே யெவ்வுயிர்க்கும் பார்" (வள்ளலார் சாத்திரம், உபதேச மாலை, 2.)

3. பூமழை - மண்மழை. செய்த தீமையையும் நலத்தையும்; நிரனிறை. 4. குறள், 15.

இதற்குப் பிரமாணம்:—

“மாவு மன்னனு மறைந்திடப் பொழிந்தமண் மாரி
காவி னின்றதண் மலரெலாம் பறித்துமுன் கவர்ந்த
பாவி யென்றிவன் விருப்பமா னதுகெடும் படிக்குப்
பூவி னுன்மறைத் திடுவது போன்றன புயல்கள்.”

“மேனி றைந்தெழ வருந்தியும் புனலிடை வீழ்ந்தும்
கூனி றைந்துகொண் டிரும்புனற் சுழிகளிற் சுழன்றும்
ஆனி றைந்திடு கொடியவர் திருவரு ளாலே
தானி றந்தில ளொழுகின ளுணுகின டடத்தை.”

(செவ்வந்திப் புராணம், உறையூரழித்த. 66, 70.)

“பாதலத்திற் சாரமுனி கொணர்ந்திடுசெவ் வந்திமலர்
பறித்து வேந்தன்
மீதணிந்தோர் மலர்தினமு மனைக்களிப்ப வவளஞ்சி
விமலன் செய்ய
பாதமலர்க் கணிந்துபணிந் தெழுநலனும் வேந்தனெனும்
பதகன் செய்த
தீதுமுறை யூரழித்த மண்மழையா லுலகமெல்லாந்
தெளிந்த தன்றே.” (புதுமொழி)

மேலதிகாரத்தில் நீத்தார் பெருமை கூறுகின்றார். (உ)

நீத்தார் பெருமை

3. நல்லசுக ருக்கன்றி [1]நாணுவதென் வேதமுனி
செல்ல மடவார் சிவசிவா—சொல்லின்
[2]உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

(எ - ரை.) திண்மை யென்னுந் தோட்டியால் பொறிகளாகிய யானை ஐந்தினையும் தத்தம் புலன்கள்மேற் செல்லாமல் காப்பான், எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டுநிலத்துக்கு ஒருவித்தாம். எ - று.

இதற்குப் பிரமாணம்: இளமையான சுகருக்கு நாணாமல் முதுமையான வியாதற்கு நதியிலாடும்பெண்கள் நாணினமை பாகவதத்திற் சொல்லப்பட்டது;

“நீடிய நதியி லாடு நேரிழை யரம்பை மாதர்
வீடறி சுகனைக் கண்டு மென்றுகில் வனைந்தி லாராய்
நாடிநான் மறைகள் சொற்ற நற்றவ வியாத னைக்கண்
டோடினர் கரைசென் றுற்று ருடுத்தனர் நாணித் தானே.”

“வரம்பிலா மறையை நான்கா வகுத்தவன் வனப்பு வாய்ந்த
அரம்பையர் தம்மை நோக்கி யரைக்கொரு துகிலி லாதான்.

1. செல்ல நாணுவது என். 2. குறள், 24.

நிரம்பிய வறிவன் சென்று நீங்கின பின்னர் யாழின்
நரம்பைவெல் சொல்லீர் சொல்லு நற்றுகி லுடுத்த தென்றான்."

"ஏடவிழ் கூந்தன் மாத ரிசைத்தவம் முனியை நோக்கி
ஆடவ ரிவர்கண் மற்றை யரிவைய ரிவர்க ளென்று
நாடுத லுனக்குண் டந்த நற்றவன் றனக்கீ தில்லைப்
பீடுசான் முனிவ வென்று பேசின ரகன்று போனார்."

(பாகவத. க. 3 : 4 - 6.)

"பிரமமய மெனவுலகைக் கண்டசுக னிளமைநலம்
பேணி நாணு
அரிவையர்கண் மறைமுனிக்கு நாணியுடை புனையவவ
னவரை நோக்கி
வரிவிழியீர் முதியனெனை நாணுவதென் னெனப்புலனை
மாற்று மாற்றற்
குரியனவ னினக்கிலதென் றறைந்தனர்தம் மனையகத்தி
னுற்றா ரன்றே."

(புதுமொழி)

நீத்தார் பெருமை கூறி மேலதிகாரங் கூறுகின்றார். (௩)

அறன் வலியுறுத்தல்

4. எய்தருமம் பாலுயிர்நீத் தெய்துபொழு துங்கருணன்
செய்தரும மீந்தான் சிவசிவா—உய்யுநெறி
[1]அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(எ - ரை.) யாம் இதுபொழுது இளையமாதலின் இறக்கும் ஞான்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க; அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்று உயிர் போங்கால் அதற்கு அழிவில்லாத துணையாம். எ - று.

இதற்குப் பிரமாணம்: பாரதத்திற் கர்ணன் பாணம் தைத்திருக்கும் அவசரத்தில் வந்து யாசித்த பிராமணனுக்குத் தான் செய்த தருமம் கொடுத்தவிடம்:

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணிய மனைத்து
முதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வா ழயனு நிகரல னென்றாற்
புண்ணிய மிதனினும் பெரிதோ."

1. குறள், 36.

" என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்சு
மிறைஞ்சலர்க் கெழிலியே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு னோக்கிக்
கைப்புன லுடன்றரு கென்ன
அன்னவ னிதயத் தம்பின்வா யம்பா
லளித்தலு மங்கையா லேற்றான்
முன்னமோ ரவுணன் செங்கைநீ ரேற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்."
(வி. பா. பதினேழாம். 240, 241.)

" விறல்கெழுபோர் விசயன்விடு வெங்கணைதைத் துயிரகலும்
வேலை தன்னில்
மறையவன்போல் வந்தவற்குத் தான்புரிபுண் ணியமனைத்தும்
வழங்கி யின்னும்
பிறவியுள தெனினுமில்லை யென்றவர்கட் கில்லையென்னுப்
பேறும் பெற்றான்
அறநெறிசேர் கொடையினுக்குக் கன்னனென வுலகமெல்லா
மறையு மன்றே." (புதுமொழி.)

தருமத்தைச் செய்யும்பொருட்டு மேலதிகாரத்தில் இல்வாழ்க்கை கூறுகின்றார். (ச)

இல்வாழ்க்கை

5. எய்து சவுபரிக்கன் றீன்றமக ளாரைமணம்
செய்யவர சீந்தான் சிவசிவா—துய்யதவர்
[1] ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

(எ - ரை.) தவஞ் செய்வாரையும் தத்தம் நெறியின்கண் ஒழுகப் பண்ணித் தானும் தன் தவத்திற் றவறாத இல்வாழ்க்கை, தவஞ்செய்வார் நிலையினும் பொறையுடைத்து. எ - று.

இதற்குப் பிரமாணம்: பாகவதத்தில் சவுபரிக்கு மனு தன் பெண்மக்களை அவர் நினைவின்படிக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்த சரித்திரம்;

சவுபரி பெண்களைக் கேட்க ராஜா பெண்களுக்குச் சமாதானம் பண்ணிக் கல்லியாணம் பண்ணிக்கொள்ள வேணுமென்று சொன்னார்:

" சொல்லக் கேட்ட சவுபரி தோன்றலே
நல்ல நீதி நவின்றனை கன்னியர்
வல்லை யேவர னென்ன வரித்திடின்
ஒல்லு மோவுனக் கீவ துரையென்றான்."

---

1. குறள், 48.

"கேட்ட லோடுங் கிளந்த முனிவனை
வேட்ட வைம்பது மெல்லிய லாரையும்
வாட்ட நீங்கிய மாதவன் காவினீர்
ஆட்டி நல்கின னன்புடை வேந்தனே."
(பாகவதம், இக்குவாகுவின் கதை, 19, 24.)

"கெண்டை யோடவ ணளவறு கிளைமுனங் கெழுமக்
கண்டு காதலாற் சவுபரி மனுவுடன் கழறித்
தண்ட லின்றியைம் பதின்மரைப் புணர்ந்துசந் தானம்
மண்ட லந்தனி லெவர்களும் புகன்றிட வுகுத்தான்." (புதுமொழி.)

அந்த இல்வாழ்க்கைத் துணைநலம் மேலதிகாரத்திற் கூறுகின்றார். (5)

வாழ்க்கைத் துணைநலம்

6. சத்தியந்தப் பாமலரிச் சந்திரற்குச் சந்த்ரமதி
சித்தமொரு மித்தாள் சிவசிவா—புத்தியுடன்
[1]தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(எ - ரை.) கற்பில் நின்றும் வழுவாமல் தன்னைக் காத்துத் தன்னைக் கைக்கொண்டவனை உண்டி முதலியவற்றாற் பேணி இருவர்மாட்டும் நன்மையமர்ந்த புகழ் நீங்காமற் காத்து மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினும் கடைப்பிடியுடையாளே பெண்ணாவாள். எ - று.

இதற்குப் பிரமாணம்: அரிச்சந்திர புராணம், விசுவாமித்திரன் செய்யுங் கொடுமைகளை ராஜாவுக்கு மந்திரி சொன்னவிடத்தில் சந்திரமதி சொல்லுகிறது;

"அனையவை யமைச்சன் கூற வரசனை யரிவை போற்றி
எனையிழந் தாலு மன்னு வென்வயிற் றுதித்த மைந்தன்
தனையிழந் தாலு மிந்தத் தலமிழந் தாலும் வெம்போர்
முனையிழந் தாலு நீதி முறையிழ வாதே யென்றாள்."
(அரிச்சந்திர. வேட்டஞ்செய். 97.)

அவளை வெட்டக் கொண்டுபோன இடத்தில் அவன் சொன்னது:

"பொருந்து நீத்தத்திற் புற்புத வாழ்வைநீ மெய்யென்
றருந்த வத்தையு மறத்தையு மெய்யையு மழித்து
வருந்தன் மன்னவா வெனவழித் தெய்வத்தை வாழ்த்தி
இருந்த பின்சுடர் வாடனை யீர்த்துச்சென் றெதிர்ந்தான்."
(அரிச்சந்திர. மயான. 134.)

"[2]முனியுமம் முனியா லரசிழந் தரச
முனிவனுக் குளபொருட் காகத்
தனையுமைந் தனையும் விலைப்படுத் தற்குந்
தன்மகற் குறுதுயர் தனக்கும்

---

1. குறள், 56. 2. முனியும் - கோபிக்கின்ற.

வனைதரு குடிலிற் காடுகோத் தற்கும்
வாரணு சியில்வரு துயர்க்கு
மனைநிலை பிறழா திருந்தன ளரசன்
மனைவியாஞ் சந்திர மதியே." (புதுமொழி.)

இப்படி, வாழ்க்கைத்துணைநலம் பெற்றவன் புதல்வரைப் பெற வேண்டுமென்று மேலதிகாரத்திற் கூறுகின்றார். (சு)

புதல்வரைப் பெறுதல்

7. மறலிசெயன் மாற்றி வயதரனுற் பெற்ற
திறன்மகப்பே றன்றோ சிவசிவா—[1]பெறுபே
[2]றெழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(எ - ரை.) வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பு ஏழின்கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா, பிறராற் பழிக்கப்படாத நற்குணங் களையுடைய புதல்வரைப் பெறுவானுயின். எ - று.

இதற்குப் பிரமாணம், காந்தம்: யமன் மார்க்கண்டன் மேல்வந்தது;

"மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்த னுயிர்வாங்கப்
பதைத்தா னென்னு வுன்னி வெகுண்டான் பதிமூன்றும்
சிதைத்தான் வாமச் சேவடி தன்னுற் சிறிதுந்தி
உதைத்தான் காலன் விண்முகில் போன்மண் ணுறவீழ்ந்தான்."

"புந்தி வெந்திடப் புலம்பி நாட்டநீர்
சிந்தும் வேளையிற் றிளைத்துச் சாம்பிய
தந்தை யன்னைதா டழுவித் தாழ்ந்திட
மூந்து மாகுல முழுது மாற்றினுன்."

(கந்த. மார்க்கண்டேயப். 253, 261);

"அறிவ னுமெனி லாயுண்மிக் கிலதென வவனைப்
பெறும தேநல னெனப்பெறு மகனாற் பேணி
மறலி தன்னையும் வென்றுதற் பயந்தவர் மகிழ
இறுத லின்றியெந் நாளுமுற் றிருந்தன னியல்பால்."

(புதுமொழி)

இப்படிப் புதல்வரைப் பெற்று வாழ்ந்திருந்தாலும் அன்பு வேண்டு மென்று மேலதிகாரத்திற் கூறுகின்றார். (எ)

அன்புடைமை

8. வேந்துரையாற் பூசைபுரி வேடன்மனை வெந்துமுன்போற்
சேர்ந்துபணி செய்தாள் சிவசிவா—ஓர்ந்தவிடத்
[3]தன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

1. இங்கே தளை பிறழ்ந்தது. 2. குறள், 62. 3. குறள், 80.

(எ - ரை.) அன்புமுதலாக அதன் வழிநின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவது. அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலால் போர்த்தனவாம்; உயிர் நின்றன ஆகா. எ - று.

இதற்குப் பிரமாணம், பிரமோத்தர காண்டத்தில் வேடன்மனைவி அக்கினியில் வீழ்ந்தும் அன்பினாலே உயிர்பெற்று வந்தவிடம்:

"இந்திரி யங்க ளைந்து மலராக வெனது காயம்
கந்தமார் புகையுட் கூட்டு மகிலாகக் கருத்து நீடும்
சுந்தர தீப மாகப் பிராணன்றுய்ப் பனவே யாக
அந்தநாற் கரண முற்று மருக்கிய மாகக் கொண்டே"

"செங்கய லனைய கண்ணாள் செழுந்தழற் பிழம்பு தன்னுட்
பங்கய மலரிற் செல்லுந் திருவெனப் பாய்ந்து மாயப்
பொங்கிய சாம்ப ராகக் கண்டனன் புளக மோங்கி
அங்கையி னடலை யேந்தி யீசனை யருச்சித் தானே"

"இறையவன் பூசை முற்றி யிறுதியிற் கழித்த வெல்லாம்
பிறைநுத லென்று மேற்கும் பெற்றிபோ லற்றைப் போது
மறைமுதல் பூசைச் சேடம் வாங்குவாள் வந்து தோன்றி
நிறையுடை னின்றாள் கண்டு நெடுந்தகை நினைவிற் றேர்வான்"

(வேடன் சிவபூசை. 30, 32, 35.);

"வில்வேட னரசன்மொழிப் படிபூசை புரியவுடல்
வெந்த சாம்பல்
இல்லாம லொருதினநொந் திருப்பவவன் மனைகனல்வீழ்ந்
திறந்து சாம்பல்
நல்காவங் கதுகொண்டன் பாற்பூசை புரியவென்று
நண்ணு மாபோற்
செல்லாமுன் னின்றனளன் பின்வழிய துயிரெனுநூல்
தெரியத் தானே" (புதுமொழி.)

அன்புடையராயினும் வந்தவிருந்தோம்பவேண்டுமென்று மேலதிகாரத்திற் கூறுகின்றார்.

விருந்தோம்பல்

9. அன்னமிடான் பொன்னு டடைந்துந் தனதுடலைத்
தின்னெனவே தின்றான் சிவசிவா—மன்னியயற்
[1] செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

(எ-ரை.) தன்கட்சென்ற விருந்தைப்பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான் மறுபிறப்பில் தேவனாய் வானினுள்ளார்க்கு நல்ல விருந்தாம். எ - று.

---

1. குறள், 86.

இதற்குப் பிரமாணம், தண்டகாரணிய மகிமையில் சுகேதுவென்னும் ராசா அன்னமிடாமையின் தன் உடம்பைத் தானே தின்றானென்னுங் கதை:

" அன்ன மீகலான் சுகேதுவென் பவன்விசும் படைந்தும்
தன்ன தாகிய வுடறினு மதுதவிர்ந் திடயாம்
மன்னி யன்னமீந் தனமவன் றருமணிக் கடகம்
உன்ன தாகவென் றிராகவற் ககத்திய னுதவ "

" வாங்கி மாதவன் சொற்றவை கேட்டக மகிழ்ந்து
பூங்க ழற்றொழு தருள்விடை கொண்டனன் போந்து
தேங்கு தண்புன லயோத்தியை நோக்கினன் சென்றான்
பாங்கர் சேனையுந் தலைவருங் குழீஇயினர் பரவ."

அப்படியிருந்தாலும் இனியவை கூறல் வேண்டுமென்னும் அதிகாரம் மேற்கூறுகின்றார். (௯)

இனியவை கூறல்

10. மலையெடுத்தோ னின்சொன் மகிழ்ந்தருளு மேருச்
சிலையெடுத்தா னென்பார் சிவசிவா—நிலையடுத்த
[1] இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(எ-ரை.) பிறர்கூறிய இன்சொல் தனக்குஇன்பம் பயத்தலை அனுபவித்தறிவான்; அது நிற்க, பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லுவதுஎன்னபயன் கருதி? எ - று.

இதற்குப் பிரமாணம், இராமாயணத்தில் இராவணன் கைலாயத்தை எடுத்தவிடம்:

" சகட்டுருளை யிற்றிரி பிறப்பிலி சலிப்பவெரு வுற்றதவசிப்
பகட்டிது வெனக்கரு திரக்கமி லரக்கனெோர் பழிப்பில்வரைமேல்
முகட்டெனது புட்பகம் விலக்குகயி லைக்கிரி முரிப்பனெனவோர்
துகட்டுகள் படக்கடிதெ டுத்தனன் மிசைத்தவர் துணுக்கமுறவே "

" மறைத்தவர் மறுக்கமு மடக்கொடி நடுக்கமு மனத்தி னினையாப்
பிறைச்சடை முடிப்பர னுறுக்கிய வடிப்பெரு விரற்றலையினால்
நெறுக்கென விழுத்திட வுடற்பொறை பதைப்பநிரு தர்க்கிறைவனும்
கறுத்தவுரு வத்தனு மறக்கரு மனத்தன்வெரு விக்கதறினான் "

" அவ்வழி யவனும் பாட வான்மகிழ்ந் தழைத்துக் கொண்டு
மூவ்வகை யுலக மாள மூன்றரைக் கோடி யாண்டும்
எவ்வகைப் படையும் வெல்லு மந்திர வாளு மீந்தான்
பொய்வகை நிருதன் பெற்று விடைகொண்டு போக லுற்றான் "

(உத்தர. வரையெடுத்த. 68, 71, 75.)

" செருக்கி னன்மலை யெடுத்தவன் மணிமுடி சிதற
நெருக்கி னனது பொருதுபா தலத்தினி னெடுநாள்

1. குறள், 99.

இருக்கு நாளினி லிருக்கெனு மின்சொலா விறைநெஞ்
சுருக்கி னனவன் வேண்டிய வரமெலா முதவ." (புதுமொழி.)

அப்படி இனியவை கூறல் வேண்டு மென்பதை யறிந்த பேரும் செய்ந்நன்றியறிதல் வேண்டுமென்பதை மேலதிகாரத்திற் கூறுகின்றார். (க0)

செய்ந்நன்றி யறிதல்

11. பூடணம்போல் வீடணன்மேற் போனவே லேற்றநன்றி
தேடமுடி யாதே சிவசிவா—நாடினெதிர்
[1]செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(எ - ரை.) தனக்கு முன் ஓர் உதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது. எ - று.

இதற்குப் பிரமாணம், ராமாயணத்தில் ராவணேசுரன் விபீஷணன் மேல் அனுப்பின வேல் வரும்போது இலக்குமணன் மார்பிலேற்ற இடம்:

"முன்னின் றூரெலாம் பின்னுறக் காலினின் முடுகி
நின்னில் யானிது விலக்குவ னெனவுரை நேரா
மின்னும் வேலினை விண்ணவர் கண்புடைத் திரங்கப்
பொன்னின் மார்பிடை யேற்றனன் முதுகிடைப் போக"

"இளவலை நோக்கி யைய விரவிதன் குலத்துக் கேற்ற
வளவித மடைந்தாற் றூங்கி மன்னுயிர் கொடுக்கும் வண்மை
துளவிய றெுங்க லாய்நீ யன்னது துணிந்தா யென்றால்
அளவிய தென்று செய்தற் கடுப்பதே யாகு மன்றே"

"புறவொன்றின் பொருட்டின் யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள்
அறவனு மைய நின்னை நிகர்த்தில னப்பா னின்ற
பிறவினி யுரைப்ப தென்னே பேரரு ளாள ரென்பார்
கறவையுங் கன்று மொப்பார் தமர்க்கிடர் காணி னென்றான்"
(கம்ப. வேலேற்றுப். 32, 48, 49);

"அரக்க னேவிய வேலின்வீ டணனுயி ரழியா
திரக்க முற்றதை யிலக்குவன் மார்பினி லேற்றான்
புரக்கு மாற்றல ரடைந்தவர்க் குறுதுயர் போகத்
துரக்கு நன்றியை யாவரே யளவையிற் றெருப்பார்" (புதுமொழி.)

செய்ந்நன்றி அறிவாராயினும் பாரபட்சமின்றி நடத்தல்வேண்டி நடுவுநிலைமை மேற்கூறுகின்றார். (கக)

நடுவுநிலைமை

12. நங்கையுமை சொல்லா னடுவிகந்த மாலுருவு
செங்கணர வானன் சிவசிவா - எங்கும்

1, குறள், 101.

[1] சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(எ - ரை.) முன்னே தான் சமனாக நின்று பின் தன்கண்வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாம்போல இலக்கணங்களால் அமைந்து ஒருபாற் கோடாமை சான்றோர்க்கு அழகாவது. எ - று.

இதற்குப் பிரமாணம், உபதேச காண்டத்தில் பார்வதி பரமேசுவரர் சூது விளையாடுமிடத்தில் நடுவுநிலையாமையால் நாராயணரைத் தேவி சாபம் சொன்ன இடம்:

"நோக்க நோக்குற விருந்தனை நோக்கின நுவலாய்
வாக்கி னொன்றுநின் மனத்தினொன் றுமென வலித்தாய்
பார்க்கு மப்புல னிழந்துவெம் பாந்தளி னுருவாய்ப்
போக்கு மூழ்பல கழித்தியென் றுரைத்தனள் பூவை"
(சிவவிரத. 347);

"வாட்ட முற்றமாற் கரும்பணி வடிவமு மாற்றி
நாட்ட முந்தருங் களிற்றணி வதனநா யகனும்
தோட்ட ருந்துழாய் வராகமித் தூநில மெடுத்த
கோட்டை முன்பறித் தருளயிற் குமரனுஞ் சூழ"
(சிதம்பரபுராணம், திருச்சிற்றம்பலச். 33);

"கடவுளுட னுமைகழக மெனும்விளையாட் டயர்பொழுதிற் கண்ண விங்கு
நடுவிகவா துறும்வெற்றி தோல்விதெரிந் துரையென்ன நாதன் செல்வி
வடுவுரையென் றுரையாது மறைத்துரைப்ப வுமைவெகுண்டு மலைய ராவாய்
விடுதியெனச் சபித்திடுஞ்சொற் கேட்டவர்க ணிலைகோடல் விரும்பிடாரே"
(புதுமொழி.)

மேல் அதிகாரத்தில் அடக்கமுடைமை கூறுகின்றார். (கஉ)

அடக்கமுடைமை

13. இறைமுருகன் முன்னின் றிசைத்தமொழி தேரான்
சிறையிருந்தான் மேனாட் சிவசிவா - புறவுறுப்பின்
[2] யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(எ - ரை.) தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நாவொன்றையும் காக்க; அதனைக் காவாராயின் சொற்குற்றத்திற் பட்டுத் தாமே துன்பமுறுவர். எ - று.

இதற்குப் பிரமாணம், காந்தத்தில் குமாரசுவாமி பிரமதேவனைப் பிரணவத்துக்கு அர்த்தம் சொல்லச் சொல்லிக் கேட்டவிடம்:

"தாம றைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை யெடுத்தனன் பகர்தலும் வரம்பில்

1. குறள், 118. 2. குறள், 127.

காமர் பெற்றுடைக் குமரவே ணிற்றிமுன் கழறும்
ஓமெ னப்படு மொழிப்பொரு ளியம்புகென் றுரைத்தான் "

" தாம றைக்கெலா மாதியு மந்தமுஞ் சொல்லும்
ஓமெ னப்படு மோரெழுத் துண்மையை யுணரான்
மாம லர்ப்பெருங் கடவுளு மயங்கின னென்றால்
நாமி னிச்சொல வறிந்தன மென்பது நகையே "

" எட்டொ ணாதவக் குடிலையிற் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலு மிதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மைய தோவெனச் செவ்வேள்
குட்டி னனய னான்குமா முடிகளுங் குலுங்க "

" மறைபு ரிந்திடுஞ் சிவன்றரு மதலையை வழுத்தி
உறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினா லுதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன ரைக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாச் சிலம்பில் "

(அயனைச் சிறைபுரி. 9, 13, 14, 15.)

"மறைமுடிவி லுறுபொருளோர் மழவுருவா யருள்புரிய வந்த நேர்மை
இறையெனுநான் முகனறியான் றிசைத்தமொழிப் பொருடெரியா திருந்து
சிறையிருந்தான் கலைமாது நாவிருந்தா ளிப்புதுமை தெரிந்த டங்கு [மாழ்கிச்
நிறையுடையோர் மொழிதவரு ரெனுமறைநூ னெறியுலகி னிகழு மன்றே."

(புதுமொழி)

மேலதிகாரத்தில் ஒழுக்கமுடைமை கூறுகின்றார். (கரு)

ஒழுக்கமுடைமை

14. தன்மதுரை சொன்னபழிக் கஞ்சித் தகவுரைத்தான்
தென்மதுரை நாதன் சிவசிவா - என்னின்
[1] ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

(எ - ரை.) மறந்தும் தீயசொற்களைத் தம் வாயிற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்கம் உடையவர்க்கு முடியா. எ - று.

இதற்குப் பிரமாணம், பழிக்கஞ்சின திருவிளையாடல்:

" தென்றமிழ்நா டுடையானே யறஞ்சொல் கோவே
தேவாதி தேவேநின் னருளால் வையம்
நன்றிபயந் திடக்காக்கு மடிமைக் கின்று
நாடறியப் பெரும்பழிவந் தடைந்த தெங்கும்
நின்றறிய வல்லாய்நீ யல்லா லுண்டோ
நினதடிமை வேண்டினறி வித்தி தோன்ற
என்றலுமஞ் சினவீச னகர்சோ தித்தற்
கெய்தெய்தி னறிவிப்ப லென்றா னன்றே "

1. குறள், 139.

" வழுத்த மைச்சரை நோக்கியின் றிங்கெனை
வரிசை கூரப் புகழுவ தென்கொனீர்
இழுக்க தாமிப் பழிக்கஞ்சி நீக்கினன்
யாவும் வல்ல வருட்சொக்க நாயகன்
அழித்தி யாவையு மாக்கவல் லான்றனை
தருளை வாழ்த்து மெனவாழ்த்தி யேத்தினர்
பொழிற்குள் வாழு மனிதருஞ் சுந்தரன்
பொருவி னீதிகண் டேத்திப் புகழ்ந்தனர் "

(திருவால. பழியஞ்சின. 9, 27);

தென்னன்மறை யவன்பழிவந் துற்றதற்கு மிகப்பயந்து
திருமு னெய்திச்
சொன்னமொழி கேட்டந்தப் பழிக்கஞ்சி யெனுநாமஞ்
சுந்த ரேசர்க்
கின்னமுறப் பெற்றறியார் போன்றவர்கட் கொழுக்கமுட
னிசைத்தா னென்றால்
நன்னெறியோ ரொழுக்கமுட னடந்திடுவ ரெனநூல்க
ணவிலு மன்றே " (புதுமொழி.)

மேல் பிறனில்விழையாமை கூறுகின்றார். (கச)

பிறனில் விழையாமை

15. வரமிழந்தான் சீதையினால் வாழ்விழந்தான் பத்துச்
சிரமிழந் தானே சிவசிவா—உரமாம்
1 எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்

(எ - ரை.) எத்துணைப் பெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும், காம மயக்கத்தால் தினையளவும் தம்பிழையை ஓராது பிறனுடைய இல்லின்கண் புகுதல். எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணம்:

" முக்கோடி வாணாளு முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வர் தாமே
எக்கோடி யானாலும் வெலப்படா யெனக்கொடுத்த
வரமு மேன்மைத்
திக்கோடு முலகனைத்துஞ் செருக்கடந்த புயவலியுந்
தின்று மார்பிற்
புக்கோடி யுயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்றன்
புங்க வாளி "

" வெள்ளெருக்கின் மலர்முடியான் வெற்பெடுத்த திரடோளாய்
மேலுங் கீழும்

1. குறள், 144.

எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு மிடனாடி
யிழைத்த வாறோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை வன்சிறையில்
வைத்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்பிளந்து தடவியதோ
வொருவன் வாளி "

(கம்ப. இராவணன்வதை. 198, 239);

" பிறன்மனை விழைத லறனல வெனநூல்
பேசுத லறிந்துவா ளரக்கன்
அறநிக ரிராமன் மனைவியை வவ்வி
அருஞ்சிறைப் படுத்திய வதனாற்
பெறலரும் வரமுஞ் சிரமும்வா ளாளும்
பிறங்கனே ரிருபது கரமும்
விறன்மிகு முரமும் வாழ்க்கையு மிழந்தான்
வியனிலத் தவரெலாம் விளம்ப " (புதுமொழி.)

மேலதிகாரத்தில் பொறையுடைமை கூறுகின்றார். (கரு)

பொறையுடைமை

16. ஐவரினு முன்னோ னரசவையி லேபொறுத்த
செய்கைபெரி தன்றோ சிவசிவா—வையத்
[1]தொறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(எ -ரை.) பிறரால் தமக்குத் தீங்குசெய்தவழிப் பொறாது அவரை ஒறுத்தாரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கொள்ளார்; அதனைப் பொறுத்தாரைப் பொன்னாகப் பொதிந்து கொள்ளுவர். எ - று.

இதற்குப் பிரமாணம், பாரதத்தில் திரௌபதையைத் துகிலுரியும் போது உள்ள செய்யுள் :

" வீமன் கதைமேற் கைவைக்க
வின்மேல் விசயன் விழிவைக்கத்
தாமம் புனைவோ ரிருவோரும்
தத்தங் கருத்திற் சினமூளத்
தூமம் படுசெந் தழலவியச்
சோனா மேகஞ் சொரிவதுபோல
நாமந் தரும னெனத்தக்கோன்
இளையோ ராற நவிலுற்றான் "

" தேம்போ தனைத்து மேசாயும்
சிலபோ தலருஞ் சிலபோது

1. குறள், 15.

வேம்போ தாங்கு வாழ்வதெல்லாம்
வெங்கா னுடனே வேவாவோ
ஆம்போ தாகு மஃதன்றி
யாய பொருள்க ளம்முறையே
போம்போ தீ ஈத்தும் போமுன்னம்
பொறுத்தீ ரின்னும் பொறுமென்றான் "

(வி. பா. சூதுபோர்ச். 229 - 30);

" துங்கவே லரசர் நெருங்குபே ரவையிற்
சுயோதனன் புரிகொடுந் துயராற்
செங்கனற் பிறந்த சேயிழை மாழ்கத்
திறன்மிகு மிளைஞர்நெஞ் சழன்று
பொங்கியங் கெழவே சினந்தணிந் துலகம்
பொறையினுக் கறன்மக னெனுஞ்சொல்
எங்கணும் விளங்க நிறுவினன் றரும
னெனும்பெயர் புனைந்தவ னன்றே " (புதுமொழி)

மேல் அதிகாரத்தில் அழுக்கருமை கூறுகின்றார். (கசு)

அழுக்காருமை

17. மேரு வுடனிகலி விந்தமலை வீறழிந்து
சேருநிலை னாடே சிவசிவா—ஓரின்
[1]அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(எ - ரை.) அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி தன்னை உடையானை இம்மைக்கட்செல்வத்தைக் கெடுத்து மறுமைக்கண் நரகத்தைச் செலுத்திவிடும். எ - று.

இதற்குப் பிரமாணம், காசிகாண்டத்தில் மேருவினிடத்திற் பொறாமையாய் விந்தமலை வளர்ந்ததைக் கூறுமிடம்;

" பொலனெடுங் கிரிக்குறு புகழ்ச்சி யாதவன்
வலம்வரு கின்றதால் வந்த தாமிவன்
செலவினைத் தடுப்பனென் றெண்ணித் தெண்டிரை
உலகளந் தவனென விசும்பி னோங்கிற்றே "

(விந்தவரையை நாரதர்கண்ட அத்தியாயம், 22);

அப்படி வளர்ந்த விந்தமலை அகத்தியருக்கு வணங்கினதைக் கூறுமிடம்:

" தன்றுணைத்தா டொழுதெழுந்த விந்தவரை முகநோக்கித்
தவத்து மிக்கோன்
இன்றுமுதற் பொதியவரை நீங்கியா னிவ்வுழிமீட்
டெய்து காறும்

1. குறள், 16.

உன்றனது பேருருவ மிவ்வண்ண மிருக்கவென
உரைத்துப் போனன்
தென்றலிளங் குழவியொடு தீந்தமிழு மினிதுலவும்
தென்பான் மன்னே"

(காசிகாண்டம், அகத்தியர் விந்தவரையை அடைந்த அத்தியாயம், 23);

"யாழ்முனி யுரைத்த மொழியினு லழுக்கா
றடைந்திகல் விந்தமிந் திரவி
சூழ்வரும் பெருமை மேருவுக் குருது
தொலைப்பதற் கெண்ணியா மினிமேல்
ஏழ்நிலத் தளவும் வளர்வமென் றெழயாம்
இவனுறு காறுநீ யெழாது
வீழ்கபா தலத்தென் றருந்தமிழ் முனிவன்
விடுத்தமை மதிப்பரே மேலோர்" (புதுமொழி.)

மேலதிகாரத்தில் வெஃகாமை கூறுகின்றார். (கஎ)

வெஃகாமை

18. வாசவனே ராசைகொள வந்த பலனையிந்தத்
தேசமறி யாதோ சிவசிவா—பேசுங்காற்
[1]சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(எ - ரை.) பிறரை வவ்விய பொருளால் தாம் எய்தும் நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தான் வரும் நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பார் எ - று.

இதற்குப் பிரமாணம், இராமாயணத்தில் அகலிகை நிமித்தம் தேவேந்திரன் வந்தபோது கௌதமர் சபித்த இடம்:

"சரந்தரு சாப மல்லாற் றடுப்பருஞ் சாபம் வல்ல
வரந்தரு முனிவ னெய்த வருதலும் வெருவி மாயா
நிரந்தர முலகி னிற்கு நெடும்பழி பூண்டா னின்றாள்
புரந்தர னடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போக லுற்றான்"

"தீயெழச் சினந்து நோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய
தூயவ னவனை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்
ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி யிவற்குண் டாகென்
றேயின னவையெ லாம்வந் தியைந்தன விமைப்பின் முன்னம்"

"எல்லையி லுண மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னேடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயும்

---

1. குறள், 173.

கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்"
(கம்ப. அகலிகைப். 77-9);

"ஆசையா லகலிகைதன் னருகுறவா சவன்முனிவன்
அணுக லோடும்
பூசையா யகல்வுழிவந் துறுதுயரு மவாயுணரப்
பொருந்து மன்னாள்
கூசமா முனியுரைத்த கொடுஞ்சாபத் துறுதுயரும்
குறிக்கின் வெஃக
மாசின்மா மனத்தவரு நினைவரோ நினையாரிவ்
வைய மீதே" (புதுமொழி.)

மேலதிகாரத்தில் புறங்கூறாமை கூறுகின்றார். (கஅ)

புறங்கூறாமை

19. குந்திமகார் பேறுரைத்த கொற்றவனுந் தன்வரவும்
சிந்தைசெயா துற்றான் சிவசிவா—நிந்தை
[1] பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளும்
திறன்றெரிந்து கூறப் படும்.

(எ-ரை.) பிறனொருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன்றன் பழிபலவற்றுள்ளும் உளையுந் திறமுடையவற்றைத் தெரிந்து அவனாற் கூறப் படும். எ-று.

இதற்குப் பிரமாணம், பாரதத்தில் பஞ்சபாண்டவர்களை அவரவர்கள் பிறந்த வரலாறு தூஷித்துக் கூறிய துரியோதனன் வரலாறு அவர்கள் கூற இவன் பேசாதிருந்த இடம்:

"மாசி றெய்விகத் தான்வரு மைவரை மதியான்
பேச வன்னவர் கொடுந்தொழி லரக்கனும் பெரிய
ஆசி னித்தருத் தழுவமுன் வந்தமை யறையக்
கூசி யுள்ளழிந் திருந்தன னரவவெங் கொடியோன்"

"அன்ன தேதெனிற் கண்ணிலான் பன்னியை யணைவான்
மன்னி யோனிரு தர்க்கிறை பலாவனம் வதிந்த
தன்மை கூறினன் வியாதனத் தருவணைந் தன்றோ
இந்நி லம்புகழ் மைந்தர்நூற் றுவரையு மீன்றாள்."

மேலதிகாரத்திற் பயனில சொல்லாமை கூறுகின்றார். (கக)

பயனில சொல்லாமை

20. மன்னவையிற் சொன்ன வசையாற் சிசுபாலன்
சின்னமுற்றா னன்றோ சிவசிவா—என்னின்
[2] பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

1. குறள், 186. 2. குறள், 196.

(எ - ரை.) பயனில்லாத சொற்களைப் பலகாலும் சொல்லுவானை மகனென்று சொல்லற்க; மக்களுட் பதரென்று சொல்லுக. எ - று.

இதற்குப் பிரமாணம், பாரதத்தில் கிருஷ்ணசுவாமியைச் சிசுபாலன் தூஷித்த இடம்:

“ திண்ணியநெஞ் சினனுய சிசுபாலன் றன்னெஞ்சிற்
  றீங்கு தோன்ற
எண்ணியமன் பேரவையி லியம்பியபுன் சொற்களெலா
  மெண்ணி யெண்ணிப்
புண்ணியர்வந் திறைஞ்சுமிரு பூங்கழலோன் வேறொன்றும்
  புகலா னாகிப்
பண்ணியதன் புரவிநெடும் பருமணித்தேர் மேற்கொண்டான்
  பரிதிபோல் வான் ”

“ ஏவிய திகிரி வீரரைத் துறக்கத் தேறவிட்
  டிடுமிர வியைப்போல்
மேவிய பகையா மைத்துனன் முடியை விளங்குகோ
  ளகையுற வீசி
ஆவியு முணர்வு மொன்றுபட் டிதயத் தமர்ந்துறை
  யாடகச் சோதி
தீவிய வமுத மமரருக் களித்தோன் றிருக்காஞ்
  சென்றுசேர்ந் ததுவே ” (வி. பா. இராசசூயச். 127, 139.)

மேலதிகாரத்தில் தீவினையச்சம் கூறுகின்றார். (உ0)

தீவினை யச்சம்

21. பாரமுடி பத்தும் பறித்தபழி சேதுவினிற்
றீருதலி னாலே சிவசிவா—சாருமிகற்
[1]றீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(எ - ரை.) தனக்கு இன்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் அஃது ஒழியத் துன்பம் பயத்தலான் அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனால் தீயினும் அஞ்சப்படும். எ - று.

இதற்குப் பிரமாணம் தீர்த்தகிரிப் புராணத்தில் ராமர் ராவணனைக் கொன்ற வினைதொடர்ந்த இடம்:

“ எரிந்த குஞ்சியும் வாயினு மிறங்கிய வெயிறும்
விரிந்த வேழ்கட லொலிநிகர் முழக்கமும் விடம்போற்
கரிந்த மேனியுங் குழிவிழிக் கனலுமாய்க் கடிதிற்
பரந்தி ராமனைத் தொடர்ந்தது ராவணன் பழியே ”

1. குறள், 202.

"தீய தானது வருதலுந் தசரதன் சிறுவன்
மாய மானது தவிர்ந்திட நினைத்தலு மனத்தா
காய மீதொரு மொழியிதன் கரையினிற் சிவன்பால்
ஆய வர்ச்சனை புரிந்திடி னகலுமென் றறைந்த"

(தீர்த்தகிரிப் புராணம், தண்டகவனச் சருக்கம், 9, 10);

இராமாயணம்:

"முனிவர் தம்மொழித் தோன்றலான் மறைமுறை மையினுல்
குனித ருஞ்சிலை யரக்கரைக் கொன்றவக் கொடுமைத்
துனிய கன்றிடும் படியினிற் கடற்கரைச் சுருதிக்
கனியெ னுஞ்சிவ லிங்கமாங் கடவுளைக் கண்டான்."

மேலதிகாரத்தில் ஒப்புரவறிதல் கூறுகின்றார். (உக)

ஒப்புரவறிதல்

22. தாயைத் தடிகவென்ற தந்தை மொழிதவருச்
சேயைப்போ லுண்டோ சிவசிவா—ஆயுமிடத்
[1] தொத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(எ - ரை.) உயிரோடுங்கூடி வாழ்வானுவான் உலக நடையினை அறிந்து செய்வான்; அஃதறிந்து செய்யாதவன் உயிருடையனே யாயினும் செத்தாருள் ஒருவனுக வைக்கப்படுவான். எ - று.

இதற்குப் பிரமாணம், பாகவதத்தில் தகப்பனுன சமதக்கினி, மகனுன பரசுராமனைத் தாயான ரேணுகையைச் சங்கரிக்கச் சொல்லச் சொன்னபடி செய்த இடம்:

"தன்னுரை கேட்ட மைந்தன் றனைநனி யுவந்து தாதை
உன்னுளம் விழைந்த தென்கொ லுதவுவன் பெறுதி யென்ன
இன்னெழிற் பரசி ராம னிறந்தவர் பிழைக்க வென்னின்
மன்னிய திறப்பென் றெண்ணு திருக்கநீ வரந்தா வென்றான்"

(பாகவதம், கூ: 13: 43);

"தாதைசொல் வழுவா தியற்றியன் னவனுற் சாவுறு நல்வர மேற்று
மூதுல கனைத்துந் தானமும் வழங்கி முடியுடை யரசரை முடித்து
நீதியிற் சையத் திருந்தனன் மடியா நெடுவரம் பெற்றுமா தவனும்
தீதறு சமதக் கினிவயி னுதித்த திறன்மழு வேந்திய செல்வன்"

(புதுமொழி.)

மேலதிகாரத்தில் ஈகை கூறுகின்றார். (உஉ)

ஈகை

23. தந்தைக் கிளமை தருபூ ருவைநிகராச்
சிந்திக்கி னெங்கே சிவசிவா—நிந்தித்

1. குறள், 214.

[1] திலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(எ - ரை.) யான் வறியேனென்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட் சொல்லாமையும் அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும் இவையிரண்டும் உளவாவன குடிப்பிறந்தார் கண்ணே. எ - று.

இதற்குப் பிரமாணம், பாகவதத்தில் யயாதி மகாராஜா இளமைப் பருவத்தை மக்களைக் கேட்க எல்லாரும் மறுக்கப் பூருவானவன் தன் இளமையைக் கொடுத்துத் தகப்பனுக்குச் சுகத்தைக்கொடுத்து வார்த்திகத்தைத் தான் வாங்கிக்கொண்ட இடம்:

"பூரு வாகிய மைந்தனம் மூப்புருப் பொருந்தி
ஏரு லாவுதன் னிளமையை யிறைவனுக் கீந்தான்
சீரு லாவிய மதனெனச் சிறந்தவவ் வேந்தன்
வாரு லாமுலை யவர்நல மாந்தினன் மாதோ"

"இளமை நல்கிய பூருவுக் கிசைத்தவா றிப்பார்
உளமு வந்தவன் காத்திட வொளிமுடி சூட்டி
வளமி குந்தநாற் றிசையையு மன்னவர் மன்னன்
அளவி றந்தசீ ரெதுமுத ஞல்வர்க்கு மளித்தான்"

(பாகவதம், க. 14: 27, 29.)

மேலதிகாரத்தில் புகழ் கூறுகின்றார். (உரு)

புகழ்

24. ஓடிவரு புட்கன் றுடலையரிந் தீந்தபுகழ்
தேட வரிதே சிவசிவா—நாடினதும்
[2] ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(எ - ரை.) வறியார்க்கு ஈக; அதனாற் புகழுண்டாக வாழ்க; அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதில்லையாகலான். எ - று.

இதற்குப் பிரமாணம் பாகவதம்:

"இறலுறு கின்ற பூத வுடம்பினு லிறுத்தல் செய்யா
உறுபுக ழுடம்பு கோட லுணர்ந்தவர்க் கன்றி யுண்டோ
புறவினுக் காக மற்றோர் பொன்னெடுங் திகிரி வேந்தன்
நிறைபுகும் வண்மை யின்று நிலத்தின்மே னின்ற தன்றே."

மேலதிகாரத்தில் அருளுடைமை கூறுகின்றார். (உச)

அருளுடைமை

25. அன்று மகப்பெறுவாட் கன்னைவடி வாகியரன்
சென்று துணை செய்தான் சிவசிவா—என்றும்

1. குறள், 223. 2. குறள், 231.

[1] அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(எ - ரை.) செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட செல்வமானது அருளான் வரும் செல்வம்; அஃதொழிந்த பொருளான் வரும் செல்வங்கள் இழிந்தார்கண்ணும் உளவாமாகலான். எ - று.

இதற்குப் பிரமாணம், செவ்வந்திப் புராணத்தில் இரத்தினாவதி நிமித்தம் சுவாமி தாயாகி வந்த இடம்:

"காய பண்டமு மெண்ணெயின் கலசமுங் கனகத்
தூய முத்தணி கலன்களும் விலையிலாத் துகிலும்
ஏய மங்கைய ரிருவர்மேற் சுமைகளா வெடுக்க
மாய வன்றனக் கரியவ ரெளியர்போல் வந்தார்"

"மற்றை நாளிலே யுதரநோந் தழுங்கிய மகளைப்
பெற்ற தாயெடுத் தணைத்துமேற் றயிலமும் பெய்து
முற்று மன்பினுன் மருத்துவத் தொழிலெலா முடித்தாள்
குற்ற மொன்றிலா மடந்தையும் பயந்தனள் குழவி"

"முன்னர் வந்திருந் தருளிய தாயெதிர் முகமாய்ப்
பின்னர் வந்ததா யிருந்தன ளதிசயம் பிறந்த
தன்னை யாவளென் றரதன வதிமருண் டணைந்தாள்
மின்னை நேரென விசும்பிலே மறைந்தனன் விமலன்"

(செவ்வந்திப் புராணம், தாயான சருக்கம், 32, 36, 41.)

மேலதிகாரத்தில் புலால்மறுத்தல் கூறுகின்றார். (உரு)

புலால்மறுத்தல்

26. புன்புலா லுண்ணாத புள்ளடைந்த நன்கறிவார்
தின்பரோ தின்னார் சிவசிவா—துன்புறாஉம்
[2] தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளு மருள்.

(எ - ரை.) தன்னூனைப் பெருக்கற்குத் தான்பிறிதூனினை உண்பான் எவ்வகையான் நடத்தும் அருளினை. எ - று.

இதற்குப் பிரமாணம், நாரை பேறுபெற்ற திருவிளையாடல்:

"இனியுயிர் செகுத்துண் ணேமென் றெண்ணிவெங் கொலைத விர்ந்து
புனலையே யுண்டு சூழ்ந்து பொய்கையுள் வாழு நாளில்
வினைதரு முன்னம் போகா வெம்பசி போகக் கண்டு
மனமகிழ்ந் ததுசி றந்த முனிவர்கள் வரத்தை வாழ்த்தி"

"முன்னைவா தனையை விட்டு முற்றிய வறிஞர் நெஞ்சிற்
பின்னொரு விகார மின்றி யிருப்பரிப் பிணப்பு லாலை
நன்னெறி யறிந்த நாமு நாவழி யொழுகிக் கெட்டேன்
தின்னவே நயந்தோ நம்போற் றீங்குளா ருண்டோ வென்றே"

1. குறள், 241. 2. குறள், 251.

"பிரிவறக் கொன்று தின்னுங் கடைப்படும் பிறப்பு நாரை
வரனுறு தேவ ராகி வான்றொழ விருப்பக் கண்டீர்
கருதினிங் கின்றும் பொல்லாக் கடையரா யினுங்கொல் லாமல்
அரனைவந் திப்ப ரேல்வா ளுள்வதற் கையமின்றே"

(திருவால. சுரு : 8, 17, 21.)

மேலதிகாரத்தில் தவம் கூறுகின்றார். (உசு)

தவம்

27. ஆடும் பரிசேவ லாறு னடற்சூரன்
தேடுந் தவத்தாற் சிவசிவா—நாடுங்கால்
[1] வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

(எ - ரை.) முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்களை வேண்டியவாறே பெறலாமாதலால், செய்யப்படுவதாய தவம் இம்மைக்கண் அறிவுடையோரால் முயலப்படும். எ - று.

இதற்குப் பிரமாணம், கந்தபுராணம்:

"மணிகிளர் வரைய தொன்று மரகதப் பிறங்க லொன்றும்
துணையடி சிறகர் பெற்றுச் சூற்புய லழிய வார்த்துத்
திணிநிலம் விசும்பின் மாட்டே சென்றெனச் சேவ லோடு
பிணிமுக வுருவாய் வந்து பெருந்தகை முன்னம் புக்கான்"

"அக்கண மெம்பி ரான்ற னருளினு லுணர்வு சான்ற
குக்குட வுருவை நோக்கிக் கடிதுநீ கொடியே யாகி
மிக்குயர் நமது தேரின் மேவினை யார்த்தி யென்னத்
தக்கதே பணியி தென்று வெழுந்தது தமித்து விண்மேல்"

"சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
ஊர்தியி னிருக்கை நீங்கி யுணர்வுகொண் டொழுகி நின்ற
சூர்திகழ் மஞ்ஞை யேறிச் சுமக்குதி நம்மை யென்னுப்
பார்திசை வான முற்றும் பரியென நடாத்த லுற்றான்"

(கந்தபுராணம், சூரபன்மன் வதைப். 493, 497, 499.)

மேலதிகாரத்தில் கூடாவொழுக்கம் கூறுகின்றார். (உஎ)

கூடாவொழுக்கம்

28. அட்டுநர ரூனிட் டரக்கன் பழிக்காசைத்
தெட்டிவழிக் கொண்டான் சிவசிவா—கிட்டியொரு
[2] பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

(எ - ரை.) தம்மைப் பிறர் நன்கு மதித்தற்பொருட்டு யாம் பற்றற்றே மென்றே சொல்லுவாரது மறைந்த ஒழுக்கு அப்பொழுது இனிதுபோலத்

1. குறள், 265. 2. குறள், 275.

தோன்றுமாயினும், பின் என் செய்தோம், என் செய்தோமென்று தாமே இரங்கும்வகை அவர்க்குப் பல துன்பங்களையும் கொடுக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம், பிரமோத்தரகாண்டம் கல்மாஷ பாதன் கதை:

"தென்புல வாணர்க் கோகை செய்யுநா ளிதுநா ளென்ன
மன்பதை புரக்கும் வேந்தன் வசிட்டனை வரித்துப் பூசித்
தன்பினூன் மிசைக வென்றூ னரக்கன்ற னெண்ணந் தீர்ப்பான்
நன்கலத் தமுதத் தோடு நரருடை யூனிட் டானே"

"உய்த்தவூன் மனித ரூனெனன் றுளத்திடை யோர்ந்து தூய
மெய்த்தவன் கனன்று சீறி வெய்யவன் வஞ்ச மோரான்
வைத்துறு சினத்தா லந்த மன்னனை யிதுநீ செய்தாய்
அத்தலை நரருன் றின்னு மரக்கனே யாதி யென்றான்"

(பிரமோத்தர. சிவதான மகிமை, 6, 7.)

மேலதிகாரத்திற் கள்ளாமை கூறுகின்றார். (உஅ)

கள்ளாமை

29. இல்வலன்வா தாவிகப டேதா யதுமலயச்
செல்வமுனி நோக்காற் சிவசிவா—சொல்லிற்
[1] களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(எ - ரை.) களவினால் உளதாகிய பொருள் அளவிறந்து ஆவதுபோலத் தோன்றித் தன் எல்லை கடந்து கெடும். எ - று.

இதற்குப் பிரமாணம், விருத்தாசல புராணத்தில் இல்வலன் சரித்திரம்:

"வம்பன் றமையன் வாதாவி வருக சுவாகா வெனநொடித்தான்
கும்ப முனிவ னதுகண்டு குலவுஞ் சிவனைத் தியானித்துத்
தம்பி தனையுந் தமையனையுஞ் சாம்ப ராகப் பொடிசெய்தான்
உம்பர் குழுவு முனிவர்களு மோதங் கிளர்ந்த தெனவார்த்தார்"

"நெருப்புக் குழியிற் புழுவிழுந்தா னீந்தா தென்ன நினைந்திலரே
அருப்ப வினைசெ காலத்தி லவல வறிவு மேவிடுமே
விருப்பு விந்த மலைகுறைத்து வேலைக் கடலை விழுங்கினரை
வருக்கப் புழுக்கள் சதிராலே வெல்ல வெண்ணி மடிந்தனரே"

(விருத்தாசலபுராணம், அகத்தியச். 10-11.)

மேலதிகாரத்தில் வாய்மை கூறுகின்றார். (உக)

வாய்மை

30. பொங்குபுகழ் வாய்மைப் புனிதவதி யார்க்கரனார்
செங்கனியை யீந்தார் சிவசிவா—அங்கம்
[2] மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

---

1. குறள், 283. 2. குறள், 295.

(எ - ரை.) ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்லு வானாயின் அவன் தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் சிறப்புடை யான். எ - று.

இதற்குப் பிரமாணம், காரைக்காலம்மைக்குப் பரமசிவன் மாங்கனி கொடுத்த இடம்:

"அம்மருங்கு நின்றயர்வா ரருங்கனிக்கிங் கென்செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே யவரருளாற் றாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்த ததிமதுரக் கனியொன்று"

"பாங்ககன்ற மனைவியார் பணியணிவார் தமைப்பரவி
ஈங்கிதளித் தருளீரே லென்னுரைபொய் யாமென்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலு மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே யதிசயித்து வாங்கினான்"

(பெரிய. காரைக்காலம்மை. (25, 30.)

மேலதிகாரத்தில் வெகுளாமை கூறுகின்றார். (௩O)

வெகுளாமை

31\. தாவு சினத்தாற் றலையிழந்தான் றக்கனுமா
தேவிமக ளாயுஞ் சிவசிவா—ஆவன்மிகும்
1 தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

(எ - ரை.) தன்னைத்தான் துன்பம் எய்தாமற் காக்க நினைத்தானாயின் தன்மனத்துச் சினம் வாராமற் காக்க; காவானாயின் அச்சினம் தன்னையே கெடுத்துத் துன்பங்களை எய்துவிக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம் பாகவதத்தில் தக்கன்வேள்வி யழித்த அத்தி யாயம்:

"வென்றிகெழு வீரனெடு வேள்விமறை வல்லோர்
வன்றகர் படுத்ததிற மானவுயர் தக்கற்
கொன்றுதலை யாங்கைமலர் கொண்டுதிரு காவத்
தென்றலை யழற்றிரண் மடுத்துநனி தீர்த்தான்"

"வெண்டிரைக் கடல்வாய் வந்து விளைத்தவெஞ் சீற்ற நஞ்சம்
உண்டுமுப் புரங்கள் வெந்தீ யூட்டிமூ வுலகங் காத்தோய்
அண்டநீ ளாக்கி யாடு மமலநீ யருள்செ யென்னப்
புண்டரீ கத்து வாழும் புராதனன் போற்றிச் சொன்னான்"

"தகரின்வன் றலையே தக்கன் பெறுந்தலை தடங்க ணற்ற
பகனொரு பரிதிக் கண்ணாற் பார்க்கபல் லுக்க வெய்யோன்

1\. குறள், 305.

நக்ரவேள் வியின்கண் மாவே நுங்கவி யங்கை யற்றோர்
திகழ்பரிப் பெயர தேவர் செங்கையாற் கொள்க வென்றான்''
(பாகவதம், தக்கன்வேள்வி. 50, 65, 67.)

மேலதிகாரத்தில் இன்னாசெய்யாமை கூறுகின்றார். (௩௧)

இன்னா செய்யாமை

32. புறம்பயத்து மின்னையுயிர் போக்கவந்தான் பட்ட
திறந்தெரிவார் நல்லோர் சிவசிவா—அறந்தான்
[1] பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

(எ - ரை.) துறந்தவர் பிறர்க்கு இன்னாதவற்றை ஒரு பகலது முற்கூற்றின்கட் செய்வாராயின் தமக்கு இன்னாதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாமல் தாமே வரும். எ - று.

இதற்குப் பிரமாணம் திருப்புறம்பயத்துத் தேவாரம்:

''குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்செய்த களவெலாம்
செற்றொருவரைச் செய்ததீமைக ளிம்மையேவருந் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன்மற வாதொழிமட நெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறி புறம்பயந்தொழப் போதுமே''

''உற்றார்போல் வருங்கொடியோன் புறம்பயத்தின் மடமயிலை
யொருநாட் கொண்டு
மற்றாரு மறியாது வல்லிரவி லவளையுயிர்
வாங்க வெண்ணிப்
பற்றாய விருபுறனுங் கூரிரலைக் கோடெறியப்
பதியா தீர்க்க
அற்றேவந் தவன்மார்பி லாழ்ந்திறந்தான் கொலைபுரிஞ
ரறியத் தானே'' (புதுமொழி.)

மேலதிகாரத்திற் கொல்லாமை கூறுகின்றார். (௩௨)

கொல்லாமை

33. மேவும் வனசரனோர் வேதியனைக் காத்தநலம்
தேவனறி வானே சிவசிவா—பூவுலகில்
[2] தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(எ - ரை.) அது செய்யாதவழித் தன்னுயிர் உடம்பின் நீக்கிப் போமாயினும், தான் பிறிதோர் இன்னுயிரை அதனுடம்பின் நீக்குந் தொழிலைச் செய்யற்க. எ - று.

இதற்குப் பிரமாணம் நீதிசாரத்திற் சொன்ன கதை:

'' அறிவன் பகையேனு மன்புசேர் நட்பாம்
சிறுவன் பகையாஞ் செறிந்தும்—அறிவுடைய

---

1. குறள், 319. 2. குறள், 327.

வென்றி வனசரனோர் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேங்கைக் குரங்கு" (நீதிவெண்பா, 3.)

"மாமணிகொண் டுறலறிந்த வனசரனுன் மறையோன்றுன்
மாழ்கி நெஞ்சம்
ஏமுறல்கண் டிவனகடு போழ்வமென வனவேடர்
எய்த விங்கன்
யாமுரைத்தல் விளையாட்டென் றறையவுமங் கவரடர்ப்ப
வவனுக் காகச்
சாமதுநன் றெனவயிறு பீறவிறந் தனனென்பர்
தகைமை யோரே" (புதுமொழி.)

மேலதிகாரத்தில் நிலையாமை கூறுகின்றார். (௩௩)

நிலையாமை

34. எங்கு மிறவா னிறந்ததொரு தூணினர
சிங்கத்தா லன்றோ சிவசிவா—தங்கிநிலை
[1] நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(எ - ரை.) நிலையுதலிலவாகிய பொருள்களை நிலைமையென்று கருதுகின்ற புல்லிய அறிவினை யுடையராதல் துறந்தார்க்கு இழிபு. எ - று.

இதற்குப் பிரமாணம் பாகவத புராணத்தில் இரணியசங்காரம் பண்ணின இடம்:

"கழைசுளி களிறன் னூனைக் கவானிடைக் கிடத்தி மாலைக்
குழவிவெண் டிங்க ளன்ன கூருகிர் நுதியிற் பைந்தேன்
பொழிமல ரலங்கன் மார்பம் போழ்ந்துசெங் குருதி யூறி
வழிபசுங் குடர்மென் கண்ணி வாளரி வனைந்த தன்றே"
(பாகவதம், இரணியனைக் கொன்ற. 88.)

இராமாயணம்:

"ஆயவன் றன்னை மாய னந்தியி னவன்பொற் கோயில்
வாயிலின் மிசைக்க வான்மேல் வயிரவா ளுகிரின் வானின்
மீயெழு குருதி பொங்க வெயில்விரி வயிர மார்பு
தீயெழப் பிளந்து நீக்கித் தேவர்தந் நடுக்கந் தீர்த்தான்."
(கம்ப. இரணியன்வதைப். 153.)

மேலதிகாரத்தில் துறவு கூறுகின்றார். (௩௪)

துறவு

35. பத்ரகரி மாதர்வசப் பட்டமன மீட்டதொரு
சித்ரகதை யன்றோ சிவசிவா—ஓத்துத்
[2] தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

---

1. குறள், 331. 2. குறள், 348.

(எ - ரை.) முற்றத் துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார்; அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட் பட்டார். எ - று.

இதற்குப் பிரமாணம்:

"இறைய ளித்திடுங் கனிதனக் கிருநிதி வழங்கி
மறைய வன்கையிற் பெறுமதை மனைவியர்க் குதவப்
பிறனை நச்சியங் கவடரும் பெற்றிகண் டன்றே
துறவை யுற்றனன் பத்திர கிரியெனச் சொல்வார்"

"தன்னி டத்துறு மாசையாற் றருங்கனி யுணாது
பின்னொ ருத்தனுக் குதவிய பெற்றிகண் டகன்றான்
அன்ன வற்கர னருடரு நாள்வர வதனால்
மின்ன னருள மறிகுவ தரிதரோ விளம்பின்."

(புதுமொழி.)

மேலதிகாரத்தில் மெய்யுணர்வு கூறுகின்றார். (௩௫)

மெய்யுணர்வு

36. சொற்சுவைசேர் வாசகத்திற் சொன்னபொரு ளீதென்றே
சிற்சபையே போனார் சிவசிவா—நற்கலைநூல்
[1] கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(எ - ரை.) இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டும் இப்பிறப்பின்கண் வாராநெறியை எய்துவர். எ - று.

இதற்குப் பிரமாணம் வாதவூரர் புராணத்தில் திருவடிபெற்ற சருக்கம்:

"அல்லலெனும் பிறவியிலா ரண்ணல்செயுஞ் செயல்யாவும்
சொல்லியபின் புலியூரர் தொழுதுமனங் களிகூர்ந்து
தில்லையிலெம் பெருமானைச் செப்பியவித் தமிழ்மாலை
நல்லவரும் பொருள்கூற வேண்டுமென நவின்றார்கள்"

"ஓங்குபுகழ்த் திருவாத வூருறையெம் பெருமானும்
தேங்கியமெய்ச் சிவஞானச் சிந்தையுடன் களிகூர்ந்து
பூங்கனகப் பொதுவெதிரே போய்ப்புகல்வ னெனப்போக
ஆங்கவர்முன் சென்றாரு மன்பொடுபின் சென்றார்கள்"

"நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனினம் பலமெய்தி
ஒன்றியவித் தமிழ்மாலைப் பொருளிவரென் றுரைசெய்து
மன்றதனிற் கடிதேக மறைந்தனரங் கவர்காண"

"செய்காட்டுங் கமுகடவித் தில்லையுளார் பொருள்கேட்கக்
கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தாரைப்

1. குறள், 356.

பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராக்கினுர்.''

(திருவடிபெற்ற. 26-9.)

மேலதிகாரத்தில் அவாவறுத்தல் கூறுகின்ருர். (௩௬)

அவாவறுத்தல்

37\. சாரங்க மீது சடபரதன் சிந்தைவைத்துச்
சீரங்கம் பெற்ருன் சிவசிவா—நேரும்
[1] அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(எ - ரை.) எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து அவாவென்று சொல்லுவர் நூலோர். எ- று.

இதற்குப் பிரமாணம் பாகவதத்தில் சடபரதர் சரித்திரம்:

"மின்னுழை மருங்கு லார்போல் விழித்திடு மிளமான் கன்று
தன்னுழை வளர மாலைத் தண்மதி புரையுந் தக்கோன்
இன்னவா ருெழுகி யாவி யிறந்திடு பொழுதம் மான்மேல்
மன்னிய நினைவு தன்ருன் மானுரு வாயி ஞனே"

"தெறிநடை மடமா ஞகப் பிறந்தமுற் பிறப்பிற் சேர்ந்த
அறிவுவிட் டகலா தாக வருவியஞ் சாரற் குன்றும்
எறிதிரை நதியு மாடிச் சிலபக லிறப்பத் துஞ்சி
மறைபயி லங்கி ராவின் வழியினிற் ருேன்றி ஞனே"

(ரு. 2: ௧௨-௩.)

மேலதிகாரத்தில் ஊழ்வினை கூறுகின்ருர். (௩௭)

ஊழ்வினை

38\. உற்ருளைப் பெட்டகத்திட் டோட்டிலங் கேசனைப்பின்
செற்ருள்வந் தென்பர் சிவசிவா—மற்ருேரின்
[2] ஊழிற் பெருவலி யாவுள மற்ருென்று
சூழினுந் தான்முந் துறும்.

(எ - ரை.) தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோர் உபாயத்தைச் சூழினும் தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்ருனும் வழியாக வந்து அச் சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; அதனுல் ஊழ்போல மிக்க வலியுடையன யாவை உள? எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணத்தில் உத்தரகாண்டம்:

"வாடா மலரோன் வரச்செருக்கால் வந்தென்னைக்
கூடா தனசொல்லிக் கூசாது தீண்டினையே

1\. குறள், 361. 2. குறள், 380.

ஏடா வுனக்கு மிலங்கைக்கு முன்கிளைக்கும்
கேடாகத் தோன்றுவன்யா னென்றாள் கிளர்சினத்தாள்"

"வானோர் மகிழ்ந்து மலர்மா மழைபொழிய
ஏனோர்க ளெல்லா மினிப்பிழைத்தோ மென்றியம்பக்
கானு ரருந்தவத்தோர் கண்டு வியப்பெய்தத்
தேனர் மொழிமடவாள் செந்தழலின் மூழ்கினாள்"

"செந்தழலின் மூழ்கியே வேதவதி தென்னிலங்கை
அந்தா மரைமலர்மே லெய்தியதோர்ந் தாங்கவனும்
நந்தாத பெட்டகத்தி லிட்டு நடுக்கடலில்
உந்த வவள்சனகன் மாமகளா யுற்றழித்தாள்"

(திக்குவிசயப். 17, 18, 19.)

மேலதிகாரத்தில் இறைமாட்சி கூறுகின்றார். (௩அ)

பொருட்பால்

இறைமாட்சி

39. பெற்றவைக்கென் போலிரண்டு பேரிலொரு வன்பிழைத்தாற்
சிற்றவைக்கா மென்றான் சிவசிவா—உற்ற
1 முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(எ - ரை.) தான் முறை செய்து பிறர் நலியாமற் காத்தலையும் செய்யும் அரசன் பிறப்பால் மகனேயாயினும் செயலால் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும். எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதம் நச்சுப்பொய்கைச் சருக்கம்:

"தாதைகூ றியமறை தனைக்கொண் டேசுதன்
ஏதமுற் றிடாவகை யிளைய தம்பியை
ஊதைவந் துள்புக வுணர்வு நல்கினான்
வேதமு நிகரிலா விரத வாய்மையான்"

"கண்டுநின் றறப்பெருங் கடவுள் வாயுவின்
திண்டிறன் மாமகன் றேவர் கோன்மகள்
மண்டழல் விடத்தினன் மடிய மாமருத்
தண்டர்நல் கிளவலை யழைத்த தென்னென்றான்"

"குத்திர மிலாமொழிக் குந்திக் கியானொரு
புத்திர னுளனெனப் புரிந்து நல்கினை
மத்திரைக் கொருமக வில்லை வல்லவர்
சித்திர மிஃதெனத் திகழு மேனியாய்."

(வி. பா. நச்சுப். 61-3.)

மேலதிகாரத்திற் கல்வி கூறுகின்றார். (௩௯)

---

1. குறள், 388.

கல்வி

40. பார்க்கவன்பாற் கல்வி பயின்றகசன் பார்க்கவனைய்
தீர்க்கவரம் பெற்றான் சிவசிவா—ஏற்கநன்றாக்
[1] கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

(எ - ரை.) ஒருவன் கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்க; அங்ஙனம் கற்றால் அக் கல்விக்குத் தக அவை செல்லுகின்ற நெறிக் கண்ணே நிற்க. எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதத்தில் சுக்கிரனிடத்தில் பிரகஸ்பதி மகன் வித்தை கற்க வந்த இடம்:

“பொன்ற ருங்கசன் பார்க்கவ னிருந்துழிப் போந்தே
என்ற னக்குநல் விஞ்சைநீ தருகென விறைஞ்ச
நன்றெ னப்பணி புரிந்திருந் தவன்றனை நண்ணார்
கொன்ற ரைத்தனர் நறவுடன் கரைத்தனர் கொடுத்தார்.”

“நறவுண்ட புகரகடு கிழியவிவன் புறத்துறவே
நம்பான் மேவும்
இறவுண்டே விவன்றவிர்ப்ப னிவனுயிர்நீந் தரியமறை
யிசைத்து மென்னு
அறவன்று னளித்திடலு மவன்புறம்போந் திவற்குதவ
அயர்வு நீங்கி
உறவன்பாற் புகரவனை வணங்கிமறை யுணர்ந்தோன்றன்
உலகஞ் சேர்ந்தான்.”

(புதுமொழி.)

மேலதிகாரத்திற் கல்லாமை கூறுகின்றார். (௪0)

கல்லாமை

41. புத்தர்மிக வாது புகன்றதுபோய் வாதவூர்ச்
சித்தர்முனே தாறார் சிவசிவா—ஓத்தநெறி
[2] கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(எ - ரை.) கல்லாதாரும் மிக நல்லவராவர், தாமே தம்மையறிந்து கற்றாரவையின்கண் ஒன்றனையும் சொல்லாதிருத்தல் கூடுமாயின். எ - று.

இதற்குப் பிரமாணம் திருவாதவூரர்புராணம், புத்தரை வாது வென்ற சருக்கம்:

“மைந்தர்மட வார்தமது வாக்கிறைவி நீயே
இந்தவகை பொய்ம்மொழி யியம்புவதென் னென்றே

1. குறள், 391. 2. குறள், 403.

அந்தமில வாகிய வருங்கலைகள் வல்லார்
முந்துகலை மாதினை முனிந்திது மொழிந்தார்"

"தொக்க நான்மறை சொல்லு நீயிவை சொல்வ தென்கலை மாதராய்
தக்கன் வேள்வியி லுன்ற ஞசி தடிந்த தின்று மறப்பதே
மூக்க ஞனரு ளில்லை யென்றிடு மூகர் நாவை யகன்றுநீ
நக்க ஞர்திரு வாணை போதென நாம டந்தையு மஞ்சினுள்"

"அஞ்சி வஞ்சகர் நாவி னின்று மகன்ற பின்பவர் தாமெலாம்
நஞ்சு தின்றனர் போலொ டுங்கி நடுங்கி மூகைய ராயினர்
நெஞ்ச நொந்துபி னீழ நாட னிறைந்தி டுஞ்சிவ ஞானநூல்
எஞ்ச வின்றிய செல்வர் பாத மிறைஞ்சி நின்றிது கூறுவான்."

(81-3.)

மேலதிகாரத்திற் கேள்வி கூறுகின்றூர். (சக)

கேள்வி

42. வெய்யமரப் பேருரைத்த வேடனும்வான் மீகியெனும்
தெய்வமுனி யானன் சிவசிவா—துய்ய
[1] செவியுணவிற் கேள்வி யுடைய ரவியுணவின்
ஆன்றூரோ டொப்பர் நிலத்து.

(எ - ரை.) செவியுணவாகிய கேள்வியினையுடையார் நிலத்தின்கண்ணாராயினும் அவியுணவினை யுடைய தேவரோ டொப்பர். எ - று.

இதற்குப் பிரமாணம் சப்தரிஷிகள் சொன்ன மொழி கேட்டு வேடன் வான்மீகரான சரித்திரம்:

"பராவரு முனிவரர் படரு மேல்வையிற்
கிராதர்தந் தொழிலினன் கீழி யற்றிய
ஒராவென நலனுற வுரைத்திர் நீரென
மராவினை யிதன்பெயர் வழங்கென் றேதினர்"

"அன்னவ னதன்பெய ருரைப்ப வன்னதே
நன்னெறி யிதனையே நவிறி யென்றனர்
சொன்னதே பன்னினன் சுரர்தொ ழுந்தவ
வன்மிக மாமுனி யான மாதவன்."

மேலதிகாரத்தில் அறிவுடைமை கூறுகின்றூர். (சஉ)

அறிவுடைமை

43. சனக னுலகநெறி தாவாத ஞான
தினகரனு மன்றே சிவசிவா—மனதினுடன்
[2] எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

---

1. குறள், 413. 2. குறள், 423.

(எ - ரை.) உலகம் யாதொருவாற்ருன் ஒழுகுவதாயிற்று; அவ்வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்ருன் ஒழுகுவது அரசனுக்கு அறிவு. எ - று.

இதற்குப் பிரமாணம் ஞானவாசிட்டத்தில் சனகர் கதை:

"காலமொரு கான்முடியா திதனிடையெண் ணுருண்டோர்
கணமு மில்லை
சாலவிது தனைமதித்து வெங்காத லிடைவீழ்ந்து
தளர்வ தேநான்
தூலமதி யாற்கெட்ட வெனைப்போல வீனரார்
சொல்லற் பாற்ருே
சீலமறு வாணுளைப் பெரிதாக நினைவதே
சிசீ யந்தோ"

"மண்ணுடி மன்னவரு மவர்தனமு மாண்டனநுண்
மணலை யொக்கும்
விண்ணுடி மிந்திரரு மவர்வாழ்வு மாண்டனவிண்
மீனை யொக்கும்
எண்ணுடி பிரமருமண் டமும்பூதங் களுமிறந்த
இலக்கங் கோடி
கண்ணுடி நீயெங்கே நின்வாழ்கை நிலையென்னே
கவலு நெஞ்சே"

"வாளாசித் திரம்போல நெடிதிருந்து சனகர்பிரான்
மாய்த்து நெஞ்சை
மீளாநல் லுபசாந்த நிறைநெஞ்சா லுலகியல்பை
மேவிப் பார்த்தான்
தாளாண்மை யாலியற்றும் பொருளேது கைக்கொள்ளத்
தக்க தேது
கோளான கற்பனையென் சுபாவவறி வாமெனக்குக்
குறிக்குங் காலே"

"வானேகு கதிரிரவி நாளியற்றும் வாறென்ன
வந்து வந்து
தானேதோன் றியதொழிலைப் பற்றின்றிச் செய்துமெனச்
சனக னெண்ணித்
தீனேய வருகாலஞ் செல்கால மிமையளவுஞ்
சிந்தை செய்யான்
ஊனேறு நிகழ்காலத் தோரிமைப்பி லேநகையோ
டுலாவ லுற்ருன்"

(சனகராசன் கதை, 17, 20, 30, 32.)

மேலதிகாரத்திற் குற்றங்கடிதல் கூறுகின்ருர். (௩௫)

குற்றங்கடிதல்

44 தன்மகனுன் கன்றினுக்குந் தான்மந் திரிக்குமென்ருன்
சென்மமன்றே சென்மஞ் சிவசிவா—உன்னுங்காற்

[1] றன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகு மிறைக்கு.

(எ - ரை.) முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப்பிறர் குற்றங் காண வல்லானாயின் அரசனுக்கு ஆகக்கடவ குற்றம்யாது? எ - று.

இதற்குப் பிரமாணம் பெரியபுராணத்தில் மனுச்சக்கரவர்த்தி புராணம்:

"என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செயநினைந்தே
அன்னியனோ ருயிர்கொன்றா லவனைக்கொல் வேனானாற்
றென்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்த்தை
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்"

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்"

"அந்நிலையே யுயிர்பிரிந்த வான்கன்று மவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியு முடனெழலும்
இன்னபரி சானென் றறிந்திலன்வேந் தனுமியார்க்கும்
முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளவோ."
(பெரிய. திருவாரூர்ச். 37, 44, 47.)

மேலதிகாரத்தில் பெரியாரைத் துணைக்கோடல் கூறுகின்றார். (சச)

45. வன்றொண்டர் சேரனையும் வாவென் றரனழைப்பச்
சென்றுதெரி வித்தார் சிவசிவா—என்றுமென்றும்
[2] தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(எ - ரை.) அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாரகத்தாம் அவர்வழிநின்று ஒழுகுதல், அரசர்க்கு எல்லாவலியுடைமையினும் தலை எ - று.

இதற்குப் பிரமாணம் பெரிய புராணத்தில் சேரமான் பெருமாள் சரித்திரம்:

"நின்றவன் றொண்டர் நீறணி வேணியார் நிறைமலர்க்
கழல்சாரச்
சென்று சேரலன் றிருமணி வாயிலின் புறத்தன
னெனச்செப்பக்

1. குறள், 436. 2. குறள், 444.

குன்ற வில்லியார் பெரியதே வரைச்சென்று கொணர்கென
வவரெய்தி
வென்றி வானவர்க் கருளிப்பா டெனவவர் கழறொழ
விரைந்தெய்தி''

"மங்கை பாகர்தந் திருமுன்பு சேய்த்தாக வந்தித்து
மகிழ்வெய்திப்
பொங்கு மன்பினிற் சேரனர் போற்றிடப் புதுமதி
யணிகின்ற
கங்கை வார்சடைக் கயிலைநா யகர்திரு முறுவலின்
கதிர்காட்டி
இங்கு நாமழை யாமனீ யெய்திய தென்னென
வருள்செய்தார்.''

(பெரிய. வெள்ளானைச். 44-45.)

மேலதிகாரத்தில் சிற்றினஞ் சேராமை கூறுகின்றார். (சுரு)

சிற்றினஞ் சேராமை

46. அறியவச மோகலைக்கோட் டந்தணனை மாதர்
செறியவச மானன் சிவசிவா—பிறிதென்
[1] மனநலம் மன்னுயிர்க் காக்க மினநலம்
எல்லாப் புகழுந் தரும்.

(எ - ரை.) நிலை பெற்ற உயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணத்தில் கலைக்கோட்டு மகாரிஷி வந்த இடம்:

"திருந்திழை யவர்சில தினங்க டர்ந்துழி
மருந்தினு மினியன வருக்கை வாழைமாத்
தருந்தருங் கனியொடு தாழை யின்பலம்
அருந்தவ வருந்தென வருளி னரரோ''

"இன்னணம் பலபக லிருந்த பின்றிரு
நன்னுதன் மடந்தையர் நவையின் மாதவன்
தன்னையெம் மிடத்தினுஞ் சார்தல் வேண்டுமென்
றன்னவர் தொழுதலு மவரொ டேகினன்.''

(கம்ப. திருவவதாரப். 43-4.)

"மடந்தையர் மொழியுங் கானமுன் சேட்டு
மன்னவன் மகன்முலை மணந்தான்
கடந்திரி கலையின் கோடுபெற் றுயர்ந்த
கருதருந் தவனெனல் கேட்டும்

1. குறள், 457.

படர்ந்தின மறிமான் வேட்டுவன் கானம் பகர்செவி
மடுத்தவன் வலைமேற்
கிடந்தன கண்டும் வெவ்விசை கேளேன் கேட்பது
நாமகீர்த் தனமே."

(புதுமொழி.)

மேலதிகாரத்தில் தெரிந்து செயல்வகை கூறுகின்றார். (சசு)

தெரிந்து செயல்வகை

47. பன்மறையோர்க் கானளித்த பாரரசன் கோம்பியெனும்
சென்மமெடுத் தானே சிவசிவா—உன்னின்மிகு
[1] நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

(எ - ரை.) வேற்று வேந்தர்மாட்டு நன்றான உபாயஞ் செய்தற் கண்ணும் குற்றமுண்டாம், அவரவர் குணங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கு இயையச் செய்யாவிடின் எ - று.

இதற்குப் பிரமாணம் [2]பசுத்தானம் பண்ணும் ராசா பச்சோந்தியான கதை:

"ஆபி ரம்பசுத் தினந்தின மறையவர்க் களிக்கும்
மாயி ரும்புவி காத்திடு மரசனை மறையோர்
காய்சி னத்தினு லோந்தியா கென்னவக் கணமே
எய்வி னன்னனன் கியற்றியு மோந்தியா யினனல்"

"அன்ன சாபமுற் றவனெடு நாளிருந் ததற்பின்
கன்னன் மாமொழி மதர்விழித் தேவகி கவினர்
பொன்ன வாந்தளிர் வயிற்றிடைப் போந்தவன் பொருந்தித்
தன்ம லர்க்கரத் தாலெடுத் தவன்றுயர் தவிர்த்தான்."

(புதுமொழி)

மேலதிகாரத்தில் வலியறிதல் கூறுகின்றார். (சஎ)

வலியறிதல்

48. நீச வுருவ நிலை டிரிசங்கு
தேசிகனாற் பெற்றான் சிவசிவா—பேசின்
[3] வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(எ - ரை.) தான் செய்யக் கருதிய வினைவலியையும் அதனைச் செய்து முடிக்கும் தன் வலியையும் அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும் இருவர்க்கும் துணையானவர் வலியையும் சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க எ - று.

---

1. குறள், 469. 2. பாகவதம், ௧௦ -ஆங்கந்தம், 36-ஆவது நிருகனுக் கருள்புரியத்தியாயத்தால் இவ்வரலாற்றை யறியலாம்.

3. குறள், 471.

இதற்குப் பிரமாணம் திரிசங்கு சரித்திரம்:

“சத்திய விரத னெனுந்திரி சங்கு சதுமறை வதிட்டனாற்
கான்போய்ச்
சித்தநொந் திகழும் பூரிய னாகிச் செய்தவக்
கோசிக னருளாற்
கொத்தலர் பசும்பொற் றலநிழல் குறுகக் குறுகவென்
றமரராங் குரைப்ப
வித்தக வீழுங் காலையம் முனிவன் விண்மிசை
நிறுத்தினன் வெகுண்டே”

“அன்னவ னாட்க ளோடு மமர்ந்தன னருந்த
வத்தோன்
சொன்னதை யிமையோ ராலும் விலக்கரி தென்றூற்
றாயோன்
பன்னருந் தவத்தான் மேவும் பான்மையீ தென்றூற்
பார்மேல்
முன்னையோர் வன்மை நாடி யொழுகுதன் முறைமை
யாமால்”

(புதுமொழி)

மேலதிகாரத்தில் காலமறிதல் கூறுகின்றார். (சஅ)

காலமறிதல்

49. யோகிருந்த கால முணரா துறுமதனன்
தேக மிழந்தான் சிவசிவா—ஆகி
[1] அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(எ - ரை.) அரசராற் செய்தற்கு அரிய வினைகளென்று சொல்லப் படுவன வுளவோ அவற்றை முடித்தற்காம் கருவிகளுடனே செய்தற்காம் காலமறிந்து செய்வாராயின் எ - று.

இதற்குப் பிரமாணம் காந்தத்தில் மன்மதனைக் காய்ந்த இடம்:

“விட்டவெம் பகழி யைந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டதுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை யெழுந்த தன்றே.”

“வில்லான்முப் புரமெரித்த பரம்பொருள்யோ கந்தவிர்க்க
வேண்டி விண்ணோர்
எல்லாரு மிறந்தாரோ வென்கணவா நீயோதா
னிலக்கா நின்றாய்

1. குறள், 483.

கொல்லாது போலவுனைக் கொன்றனரே யென்னுயிர்க்குங்
கொலைசூழ்ந் தாரே
பொல்லாத பேர்க்குநன்றி செய்வதுவுந் தம்முயிர்போம்
பொருட்டே யன்றோ''

"நேயமொடு மறைபயிலுந் திசைமுகனைப் புரந்தரனை
நின்னைத் தந்த
மாயவனை முனிவர்களை யாவரையு நின்கணையான்
மருட்டி வென்றாய்
ஆயதுபோன் மதிமுடித்த பரமனையு நினைந்திவ்வா
றழிவுற் றாயே
தீயழலின் விளக்கத்திற் படுகின்ற பதங்கத்தின்
செயலி தன்றோ''

"தண்பனிநீர் சிவிறிகொண்டு விளையாடி மலர்கொய்து தண்கா நண்ணி
எண்படுபூம் பள்ளிமிசைச் சிறுதென்றல் கவரிகளா வினிது செல்ல
வெண்பளித நறுஞ்சந்தச் சேறாடி யிருவருமா விழைந்து கூடிக்
கண்படைகொண் டமர்வாழ்வு பொய்யாகிக் கனவுகண்ட கதையா
[யிற்றே''

"இனைய கூறிநின் றிரதிவேண் டிடுதலு மிணைதீர்ந்த
புனித னல்லரு ளெய்தியே மங்கைநீ புலம்பாய்கேள்
வனைக ருங்குழற் கவுரியை மேவியாம் வரைபோதில்
உனது கேள்வனை யளிக்குதும் போதியென் றுரைசெய்தான்''

(கந்த. காமதகனப். 89, 103, 108-9 ; மோனநீங்கு. 28.)

மேலதிகாரத்தில் இடனறிதல் கூறுகின்றார். (சசு)

இடனறிதல்

50. வயத்திரத மேறி வருமபிமன் றன்னைச்
செயத்திரதன் கொன்றான் சிவசிவா—முயற்சியுடன்
[1] எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(எ - ரை.) தாம் வினை செய்தற்கு ஒத்த இடத்தினை அறிந்துசென்ற அரசர் அரணைப் பொருந்திநின்று அதனைச் செய்வாராயின் அவரை வெல்வதாக எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை இழப்பர் எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதத்திற் பதின்மூன்றாம் போரில் கதை:

"சரமறுத்தான் வில்லறுத்தான் கொடியறுத்தான் தேரறுத்தான்
சமர பூமி
உரமறுத்தான் முதற்பொருத வுதயதின கான்மைந்த
னுடன்று சீறிக்

1. குறள், 494.

கரமறுத்தா னடுப்பொருத கார்முகத்தின் குருவிசயன்
காளை தன்னைச்
சிரமறுத்தான் பின்பொருத செயத்திரத னிவன்வீரஞ்
செப்ப லாமோ" (134.)

"மாயனுந் திருமாமன் றனஞ்சயனுந் திருத்தாதை
வானோர்க் கெல்லாம்
நாயனும் பிதாமகன்மற் றொருகோடி நராதிபரா
நண்பாய் வந்தோர்
சேயனு மபிமனுவாஞ் சயத்திரதன் கைப்படுவான்
செயற்கை வெவ்வே
றுயநா ளவனிதலத் தவ்விதியை வெல்லும்வகை
யார்வல் லாரே"

(புதுமொழி)

மேலதிகாரத்தில் தெரிந்து தெளிதல் கூறுகின்றார். (௫0)

தெரிந்து தெளிதல்

51. அத்தன் பதத்தியற்று மாழி சலந்தரனைச்
சித்ரவதை செய்யுஞ் சிவசிவா—தத்தம்
[1] பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

(எ - ரை.) பிறப்புகுணம் அறிவென்பவற்றால் மக்கள் எய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது தாம் தாம் செய்யும் கருமமே பிறிதில்லை. எ - று.

இதற்குப் பிரமாணம் [2]காந்தத்தில் சலந்தரன் கதை:

"இதயமு முகமு மலர்ச்சிய தங்குற வெரிகிளர்
வதுவெனவெங்
கதமொடு கைகொடு புயனில றைந்தெழு கருதரு
வன்மையுடன்
மதமிகு மெவரு மெடுக்கரி தாகிய வளர்சுட
ரொளி விரிவாற்
சுதரிச னப்பெயர் நேமி யெடுத்துயர் தோளிடை
வைத்தனனால்"

"சக்கர மற்றவன் மற்புய மீது தரித்தன னேவிலையோ
அக்கண னிற்கொலை வச்சிர மக்கிரி யன்று பிளந்தெனத்
தக்க தவங்கள் வரங்க ளுரங்கள் சயங்க டணந்தவுணன்
மிக்க வுடற்சுமை யிருபிள வாயிரு வெற்பென வீழ்ந்தனவால்."

மேலதிகாரத்தில் தெரிந்து வினையாடல் கூறுகின்றார். (௫௧)

---

1. குறள், 505. 2. ததீசியுத்தரப். 254 - 67.

தெரிந்து வினையாடல்

52. சதமுகனை ராகவனுஞ் சானகியைக் கொண்டே
சிதையவதை செய்தான் சிவசிவா—இதயத்
[1] திதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

(எ - ரை.) இவ்வினையை இக்கருவியால் இவன்முடிக்க வல்லனெனக் கூறுபடுத்து ஆராய்ந்து மூன்றும் தம்முள் இயைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக எ - று.

இதற்குப் பிரமாணம் சதகண்ட சரித்திரம் :

"பண்டையிலும் பதின்மடங்கிற் கண்டனுள னெனவானிற்
பணித்த வாய்மை
கொண்டயில்வெங் கணையேந்தி வாருதியை மாருதிமேற்
கொண்டு நீந்தி
வண்டயிலு நறுங்கூந்தற் சானகியா லவனுயிரை
மாய்த்த மாயோன்
கண்டுயிலுங் கடலனைய கருணைமுகி லருணபதங்
கருது வோமே"

"ஊதா விசைவண் டறைமலர்ச்சில்
லோதி யசுர னுயிர்செகுத்து
நீதா விசைய மெனுமிறைசொற்
றலைமேற் கொண்டு நெடுஞ்சமர்க்குப்
போதா விசையம் பெய்துசத
கண்டன் மடியப் பொருதிட்ட
சீதா விசையம் புகலவருள்
புரிவ தவடன் றிறனாமால்"

மேலதிகாரத்தில் சுற்றந்தழால் கூறுகின்றார். (நிஉ)

சுற்றந்தழால்

53. அன்றுதம ருள்ள மறிந்தடைந்த வீடணற்குச்
சென்றுறுதி சொன்னான் சிவசிவா—ஒன்றும்
[2] உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(எ - ரை.) காரணமின்றித் தன்னிடத்தினின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தால்வந்த சுற்றத்தானை அரசன் அக்காரணத்தைச் செய்து வைத்து ஆராய்ந்து தழீஇக்கொள்க எ - று.

வருதற் காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும் போய்ப் பகையோடு கூடுமாதலின் இழைத்திருந்தென்றும், அன்பின்றிப் போய்ப் பின்னும் காரணத்தான்வந்தமையின் எண்ணிக்கொளலென்றும் கூறினார்.

---

1. குறள், 517. 2. குறள், 530.

இதற்குப் பிரமாணம் விபீஷணன் அடைக்கலப்படலம்:

" பகைப்புலத்தோர் துணையல்ல வென்றிவனைப் பற்றேமேல்
அறிஞர் பார்க்கின்
நகைப்புலத்தா ராமன்றே நற்றூய முளதாய
பற்றான் மிக்க
தகைப்புலத்தோர் தந்தைதாய் தம்பியர்க டமையரிவர்
தாமே யன்றோ
மிகைப்புலத்தின் விளைகின்ற வினைப்பொருளைக் காதலிக்கின்
விளிஞ ராவார் "

" மாருதி யினிய வார்த்தை செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
பேரறி வாள நன்று நன்றெனப் பிறரை நோக்கிச்
சீரிது மேலிவ் வார்த்தை சிக்கறத் தெரியு மென்னா
ஆரிய னுரைப்ப தானு மனைவரு மதனைக் கேட்டார் "

" இன்றுவந் தானென் றுண்டோ வெந்தையை யாயை முன்னைக்
கொன்றுவந் தானென் றுண்டோ வடைக்கலங் கூறுகின்றான்
தொன்றுவந் தன்பு செய்யுந் துணைவனு மவனே பின்னைப்
பின்றுமென் றாலு நம்பாற் புகழன்றிப் பிறிதுண் டாமோ "

" பிறந்தநாட் டொடங்கி யாருந் துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டோ வென்னைச் சரணென்று வாழ்கின் றானைத்
துறந்தநா ளகன்ற நாளாந் துன்னினுன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றோ வென்று மிருந்தநா ளாவ தென்றான்"

(கம்ப. விபீடணனடைக்கலப்படலம், 104, 106, 109-10.)

மேலதிகாரத்தில் பொச்சாவாமை கூறுகின்றார். (௫௩)

பொச்சாவாமை

54. இப்புவிமேற் கோயி லிழந்ததய னூர்மறந்து
செப்புதலா லன்றோ சிவசிவா—எப்பொழுதும்
[1] பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

(எ - ரை.) ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும், அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறு போல. எ - று.

நிச்சநிரப்பு - நாடோறும் இரவான் வருந்தித் தன் வயிறு நிறைத்தல்.

இதற்குப் பிரமாணம் அருணாசல மாகாத்மியம்:

" முண்டக வகந்தையின் மொழிந்தவுரை நன்றென
மொழிந்துநகை கொண்டவளவே

1. குறள், 532.

அண்டபகி ரண்டமு நடுங்கின வொடுங்கின
அடங்கின விடுஞ்சுடரெலாம்
கொண்டலு மறைந்தன செறிந்தன விறந்தன
குறைந்தன நிறைந்தனகுவால்
எண்டிசை திரிந்தன கரிந்தன பொரிந்தன
எரிந்தன விரிந்த தருவே"

"அழிந்தன னயனென வமர ரஞ்சினர்
குழிந்தது நிலமெனக் கொள்ளை யாமலர்
பொழிந்தனர் நெடியவற் குவகை பூத்தது
கழிந்தது மலரவற் கிடும்பைக் கங்குலே"

"ஆசையா லுருகுமவ் வரித னன்புகண்
டீசனும் பலவர மினிது நல்கினன்
வாசமா மலரவ னுனக்கு மண்ணின்மேற்
பூசையுங் கோவிலும் போக வென்றனன்"

"கைதையே யிவனுடன் கரவு நீயுரை
செய்தையே தீண்டலை யென்று செப்பினன்
எய்திய முனிவுகண் டேங்கி நான்முகன்
மெய்தரை யுறப்பதம் வீழ்ந்து போற்றினன்"

(அருணசல. திருமலைச். 65, 66, 68, 69.)

மேலதிகாரத்திற் செங்கோன்மை கூறுகின்றார். (ருச)

செங்கோன்மை

55. மங்காத மங்குறனை மாறன்விலங் கிட்டதவன்
செங்கோன் மகிமை சிவசிவா—எங்கேனும்
1 வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

(எ - ரை.) மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவன் எறியும் வேல் அன்று; கோல்; அஃதும் அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின். எ - று.

இதற்குப் பிரமாணம் அருணசல புராணம், பாண்டியன் மேகத்தை விலங்கிட்ட கதை:

"படையிற் றேற்ற வரசரைப் பல்சிறை
இடையிற் போட்டன னென்கை வியப்பதோ
கொடையிற் றேற்றிடுங் கொண்டலை யுஞ்சிறை
இடையிற் போட்டன னென்ப திருக்கவே"

(அருணசல. வச்சிராங்கத. 10.)

மேலதிகாரத்திற் கொடுங்கோன்மை கூறுகின்றார். (ருரு)

---

1. குறள், 546.

கொடுங்கோன்மை

56. தாதை சிறையிருக்கத் தங்கையழக் கஞ்சனுறும்
தீதையெவர் சொல்வார் சிவசிவா—மேதினியில்
[1] அல்லற்பட் டாற்று தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(எ - ரை.) அரசன் முறை செய்யாமையாற் குடிகள் துன்பமுற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே, அவன் செல்வத்தைக் குறைக்கும் எஃகு ? எ - று.

எஃகு - ஆயுதம்.

இதற்குப் பிரமாணம், பாகவத புராணத்தில் கஞ்சன்வதை யத்தியாயம்:

"கோதைவேற் கஞ்சன் றானுங் கொடுந்திறற் கால நேமி
ஆதலின் முனிவன் கூற்று லறிந்தனன் முனிந்து பாண்வண்
டூதவாய் விரிந்த பூந்தா ருக்கிர சேன னென்னும்
தாதைபே ராசு மாற்றித் தனியர செய்தி னானே"

"இன்றளிர்ப் படலை மாலை யாதவ ரிரிய நூறி
வென்றியங் களிநல் யானை விறல்வசு தேவ னோடு
சென்றுயர் குழைதோ யுண்கட் டேவகி தன்னை யாங்கு
வன்றளைப் படுத்திப் பெற்ற மகவெலாந் தொலைத்திட் டானே"
(10-ஆம். திருவவதார. 22-3);

"பஞ்சி யூட்டிய பங்கயச் சீறடி மடவார்
அஞ்செஞ் சாந்தணி யலர்முலைக் களிற்றொடும் பொருத
மஞ்சு தோய்வரை மார்பொடு மணிப்புய நெரிந்து
தஞ்சி னன்கடுங் கஞ்சன்வெஞ் சோரிவாய் சொரிய"
(கஞ்சனைக்கொன்ற. 48.)

மேலதிகாரத்தில் வெருவந்த செய்யாமை கூறுகின்றார். (ருசு)

வெருவந்த செய்யாமை

57. வண்ணமக னோவ வருகீச கன்மடிந்தான்
திண்ணமிது வன்றோ சிவசிவா—எண்ணின்
[2] வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்.

(எ - ரை.) குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனுமாயின், அரசன் ஒருதலையாகக் கடுகிக் கெடும். எ - று.

வெங்கோல னென்பது ஈண்டு வாளா பெயராகி நின்றது.

இதற்குப் பிரமாணம் பாரதத்தில் கீசகன் வதைச் சருக்கம்:

---

1. குறள், 555. 2. குறள், 563.

"வருகநீ யருகுற மதுர வாசகம்
தருகநீ யிருசெவி தழைக்க வுள்ளநின்
றுருகநீ தழுவுக வுடலந் தேமுறப்
பருகநீ வழங்குக பவள வாயெனு"

"கிடந்தவ னெழுந்தொரு கேடு வந்துறு
மடந்தையைத் தழுவுவான் வந்து சார்தலும்
விடந்திகழ் விழியினு ளோட வேட்கையாற்
றொடர்ந்தன னறிவிலாச் சோரன் றானுமே"

"குறியவன் றனக்கு நேர்ந்த கொடியவெங் கொலைவேற் கண்ணாள்
தறிபொரு களிற்றி னன்ன சமீரணன் மகனை யெய்திச்
செறிவொடக் காளை யோடு செப்பிய யாவுஞ் செப்பிப்
பிறிதொரு கருத்து மின்றிப் பெரும்பக லாற்றி னாளே"

"மாற்றினு னவன்பெரு மைய லாவியைக்
கூற்றினர் கைக்கொளக் கொடுத்துத் தன்சினம்
ஆற்றினு னத்திற லார்கொல் வல்லவர்
காற்றினுல் வருதிறற் காளை யல்லதே"

(வி. பா. கீசகன்வதை. 27, 28, 59, 80.)

மேலதிகாரத்தில் கண்ணோட்டம் கூறுகின்றார். (௫எ)

கண்ணோட்டம்

58. முப்புரத்தை நீறுக்கி மூவரையுங் காத்தநலம்
செப்பமுடி யாதே சிவசிவா—லுப்பில்
[1]கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(எ - ரை.) முறைசெயலாகிய தம் தொழில் அழியாமற் கண்ணோட வல்ல வேந்தர்க்கு உரித்தாந் தன்மையுடைத்து இவ்வுலகம். எ - று.

இதற்குப் பிரமாணம் கூவப் புராணம்:

"தன்மனை யிரத மாகத் தன்மகன் வலவ னாகத்
தன்மகன் பேர னோடு தனக்குமைத் துனன்கா லாகத்
தன்மல ரணைநா ணாகத் தானெடும் பகழி யானன்
தன்மன மிடங்கொண் டுற்ற சங்கரன் றனக்கு மாயன்"

(திரிபுரதகனச். 86);

"செய்யமணித் தேரிவர்ந்து செல்லுமிறை யமரருளச்
செருக்கை யோர்ந்து
துய்யவிடை யேறிநகை புரிந்தருள முப்புரமுந்
தொலையுங் காலை
வெய்யதழ லிடையிருந்த மூவரைமுக் கட்டுளியால்
விரைந்து காத்தான்

1. குறள், 578.

தெய்விகமா மப்புனலிற் பிறந்ததன்றே வக்கமணி
தெரிக்குங் காலே"

"வன்றிரிபு ரன்புரியும் வாதைதனை நோக்கி
அன்றுவிடை மேலரனு மம்பிகையும் வந்து
வன்றிறன் முராரியயன் வானவரை நோக்கி
மென்றுளிகள் முக்கணினும் வீழ்ந்தவெமை வாழ"

(புதுமொழி.)

மேலதிகாரத்தில் ஒற்றாடல் கூறுகின்றார். (ருஅ)

ஒற்றாடல்

59. வந்தசுக சாரன் வடிவை நிருதனன்றிச்
சிந்தைசெய்தார் காண்பார் சிவசிவா—பந்தம்
[1] துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

(எ - ளை.) முற்றத் துறந்தோராயும் விரதவொழுக்கினராயும் உள் புகற்கு அரிய இடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந்து அறிந்து ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத்துன்பமும் செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான். எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணம்:

"அகனுறப் போந்த வள்ளல் கருணையா லமுத கண்ணர்
நகநிறை கானின் வைகு நம்மினத் தவரு மல்லர்
தகைநிறை வில்லா வுள்ளத் திராவணன் றந்த வொற்றர்
சுகனிவ னவனுஞ் சார னென்பது தெரியச் சொன்னுன்"

"கல்விக்கண் மிக்கோன் சொல்லக் கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ் வானரர் வலியை நோக்கி
வெல்விற்கை யரிதென் றெண்ணி வினையத்தா லெம்மை யெல்லாம்
கொல்விக்க வந்தான் மெய்மைக் குரங்குநாங் கொள்க வென்றார்"

"கள்வரே காண்டி யென்று மந்திரங் கருத்துட் கொண்டான்
தெள்ளிய தெளிக்குந் தெவ்வர் தீவினை செகுத்த லோடும்
துள்ளிய விரதந் தோய்ந்து தொன்னிறங் கரந்து வேறாய்
வெள்ளியோ டிருந்த செம்பு மாமென வேறு பட்டார்"

(கம்ப. ஒற்றுக்கேள்விப். 29-31.)

மேலதிகாரத்தில் ஊக்கமுடைமை கூறுகின்றார். (ருகூ)

ஊக்கமுடைமை

60. நல்லதின மென்றே நாகனிறா நானுலகிற்
செல்லவரம் பெற்றான் சிவசிவா—வல்லமைசேர்

---

1. குறள், 586.

[1] உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(எ - ரை.) ஊக்கமில்லாத அரசர் இவ்வுலகத்தாருள் யாம் வண்மையுடையே மென்று தம்மைத் தாம் மதித்தலைப் பெறார். எ - று.

ஊக்கம் இல்லையாகவே முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலிற் செருக்கெய்தாரென்றார்.

இதற்குப் பிரமாணம் கண்ணன் நரகாசுரனைச் சங்கரித்த வரலாறு:

"கண்ணனுடன் பொருதநர காசுரன்றன் றலையிறைவன்
அரிந்த காலை
எண்ணினினை யொப்பவரா ரெண்ணிரண்டா யிரமாசர்
கன்னி மாரைத்
திண்ணமிகு மணிமாடத் திருத்தினனங் கவரையெதிர்
சென்று காணேன்
அண்ணனினக் காமவரை மணம்புணர்தி யரசரையும்
அகற்றல் செய்வாய்"

"என்மகற்கு மரசுரிமை யீதியெனை நீசெகுத்த
இந்நா ளிந்த
நன்னிலத்தி லிக்காலை நானமா டினர்கங்கை
நதியின் மூழ்கும்
அன்னபல னவர்க்காமென் றெருருவரீ யளித்தியென
அளித்தான் கண்ணன்
இந்நிலத்தில் யாவருமந் நாள்விரத மாகமகிழ்ந்
தியற்றி னனே"

(புதுமொழி.)

மேலதிகாரத்தில் மடியின்மை கூறுகின்றார். (சூ0)

மடியின்மை

61. தந்தையுள நோக்கித் தவமே வியதுருவன்
சிந்தைவலி தன்றோ சிவசிவா—நந்தும்
[2] மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு.

(எ - ரை.) தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும் மடியில்லாத அரசன் ஒருங்கே எய்தும். எ - று.

தாவியதென்பது இடைக் குறைந்து நின்றது.

இதற்குப் பிரமாணம், பாகவதத்தில் துருவன் சரித்திரம்:

"இழைபுரை மருங்கு றேய்க்கு மிளமுலை மடந்தை மாற்றம்
அழல்விட முகுத்தா லென்ன வஞ்செவி நுழைத லோடும்

1. குறள், 598. 2. குறள், 610.

விழிமலர் சிவப்ப நெஞ்சில் வெகுளிவந் தரும்ப மைந்தன்
மழைமதக் களிற்று மன்னன் வாண்முக நோக்கி னானே"

"செஞ்சிலைத் தடக்கை வேந்தன் றிருமுகத் தருளுங் காணான்
அஞ்செவி வெதுப்ப நங்கை யறைந்ததற் காற்ற னாகிக்
கஞ்சநாண் மலரை வென்ற கண்ணிணை மாரி கால
மஞ்சனுங் கன்னை பாற்போய் மணியிதழ் துடிப்ப நின்றான்"

"குதலைதெள் ளமுதிற் றேனிற் கொண்டமென் பவளச் செவ்வாய்
மதலைநல் வினையி லாதேன் வயிற்றகம் பொருந்தி வந்தாய்
விதலையுற் றிரங்கல் வேண்டா விளைந்ததண் ணளியிற் காக்கும்
முதலைவாய்ப் பட்ட வேழ முறையிட வுதவி னானே"

"காடங் கவிழ்த்த கலுழிமதக் கடவுட் களிறு மொளிறுகதிர்
சொரியு மருமா மணிச்சூட்டுத் துத்தி யரவுஞ் சுமந்தநிலம்
இருபத் தாறு யிரம்பருவ மெழில்வெண் கவிகை தனிநிழற்றித்
துருவப் பதநீ யடைதியெனத் தளவ முதல்வ னகன்றனனால்"

(துருவன் பதம்பெற்ற. 8, 9, 12, 44.)

மேலதிகாரத்தில் ஆள்வினையுடைமை கூறுகின்றார். (சுக)

ஆள்வினையுடைமை

62. எய்தா திராமற் கிலக்குவன்போ லென்றுரைக்கச்
செய்தா னடிமை சிவசிவா—நொய்தேனும்
1 இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(எ - ரை.) தனக்கு இன்பத்தை விரும்பானாகி வினைமுடித்தலையே விரும்புவான் தன்கேளிராகிய பாரத்தின் துன்பத்தினை நீக்கி அதனைத் தாங்கும் தூணாம். எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணம்:

"மேவு கான மிதிலையர் கோமகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாது மிலார்க்கியை யாதவே"

"என்று சிந்தித் திளையவர்ப் பார்த்திரு
குன்று போலக் குவவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலென்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்"

(கம்ப. சித்திரகூடப். 52-3);

---

1. குறள், 615.

" கண்ணி னீர்ப்பெருந் தாரைமற் றவன்சடைக் கற்றை
மண்ணு நீத்தமொத் திழிதரத் தழீஇநின்று மைந்த
எண்ணி னீக்கரும் பிறவியு மென்னெஞ்சி னிருந்த
புண்ணு நீக்கினை தமையனைத் தொடர்ந்துடன் போந்து"

(ஷை. மீட்சிப். 126.)

மேலதிகாரத்தில் இடுக்கணழியாமை கூறுகின்றார். (சுஉ)

இடுக்கணழியாமை

63\. இரணியனார் செய்த விடும்பைதனை மைந்தன்
திரணமதாய்க் கண்டான் சிவசிவா—மரணம்
1 அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும்.

(எ - ரை.) இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும் தன்னுள்ளக் கோட்பாடு விடாதான் உற்ற இடுக்கண்தாம் இடுக்கணிலே பட்டுப் போம். எ - று.

இதற்குப் பிரமாணம் பாகவதம்:

" அல்லவை குரவ னேனு மறைந்திடக் கேட்க லாகா
நல்லவை யாவ ரேனு நவின்றிடக் கேட்க லாமால்
சொல்லுவ னுமக்கு மெய்ந்நூ ருடையல்யாழ் முனிவன் கூறல்
வல்லிதிற் கேண்மி னென்ன மருவுமம் மைந்தர் சொல்வார்"

(இரணியனைக்கொன்ற. 52);

" பொன்னாட் டவருக் கெழுந்தந்தர வாணி போந்து
சின்னாட் கழியிற் சிறுவன்றனை வைது சீறும்
அந்நாட் டிருமா லவுணன்றனை மாய்க்கு நீவிர்
இன்னாத் தவிர்மி னெனவானவ ரேகி னாரே" (ஷை. 28);

இராமாயணம்:

" தாயின் மன்னுயிர்க் கன்பினன் றன்னையத் தவமெனுந் தகவில்லோர்
ஏயெ னுந்துணை மாத்திரத் தெய்தன வெறிந்தன வவையெல்லாம்
தூய வன்றனைத் துணையென வுடையவ னொருவனைத் துன்னுதார்
வாயின் வைதன வொத்தன மற்றவர் மழுவொடு கொலைவாளும்"

" எறிந்த வெய்தன வெற்றின குத்தின வீர்த்தன படையாவும்
முறிந்து நுண்பொடி யாயின முடிந்தன முடிவிலன் முழுமேனி
சொறிந்த தன்மையுஞ் செய்தில வாயின தூயவன் றுணிவொன்று
அறிந்த நாயகன் சேவடி மறந்தில னயர்த்தில னவனுமம்".

(கம்ப. இரணியன்வதைப். 82-3.)

மேலதிகாரத்தில் அமைச்சுக் கூறுகின்றார். (சுங)

1\. குறள், 625.

அமைச்சு

64. போயவர சாளி புகவெழக்கண் டாளியுடல்
தீயினமைச் சிட்டான் சிவசிவா—ஆயிற்
[1]றெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

(எ - ரை.) ஒரு காரியச்செய்கை பலவாற்றால் தோன்றினால் அவற்றுள் ஆவதாராய்ந்து அறிதலும் அது செய்யுங்காலம் வாய்க்கும் திறன் நாடிச் செய்தலும் சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்தற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலதென்று துணிவு பிறக்கும்வகை சொல்லுதலும் வல்லவன் அமைச்சனாவான். எ - று.

இதற்குப் பிரமாணம் [2]யாளிசரித்திரம்:

"கணிதநூ லினின்யாளி கைம்மையா யிரவரைத்தான்
கலத்த லெண்ணி
அணிமையின்வைத் தகன்றுபர காயமுறுந் தொழிலாதி
யாவு மாய்ந்தோன்
மணிமுடிமன் னவனொருவ னுயிரரைப் பிரிந்திறந்த
மடிவா லன்னோர்
பிணியுழத்த னேக்கியர சுடற்புகுந்தாங் கவர்துயரம்
பிரியச் செய்தான்."

"ஆயிரரு மகிழவர செழுந்தனனங் கதையமைச்சன்
அறிவா லெண்ணி
மாயுமுட லெழவொருவன் புகுந்ததனை லவனுடலை
மயானத் திட்ட
தீயிலிட நினைந்துகொணர்ந் திடவாளி யதுகண்டு
திகைத்துப் பின்னர்
ஓயுமனத் தினனாகி யரசுடல்புக் காங்கவரோ
டுறைந்தா னன்றே."

மேலதிகாரத்திற் சொல்வன்மை கூறுகின்றார். (சுச)

சொல்வன்மை

65. என்றும் பதினா றெனவரனை ரோதியசொற்
சென்றதே யின்றுஞ் சிவசிவா—நன்றிபெறச்
[3]சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(எ - ரை.) தாம் சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதொரு சொல்லாய் வெல்லவல்லதொரு சொல்லில்லாமை அறிந்து பின் அச்சொல்லைச் சொல்லுக. எ - று.

1. குறள், 634. 2. ஞானமிர்தம், 33. 3. குறள், 645.

இதற்குப் பிரமாணம் மார்க்கண்டர் சரித்திரம்:

"குன்றவில்லி யடிபணிந்து கூற்றனிவற் காயுணீ
கொடுத்த தோர்ந்து
சென்றுதொடர்ந் தனனெனீ சினந்தனையொண் பிறைமவுலித்
தேவே யென்னக்
கன்றுகுனி லாவெறிந்தான் காண்பரிய வருண்மூர்த்தி
கால வென்றும்
ஒன்றுமவற் காயுள்பதி னறெனயா முரைத்ததென
விசைந்த மன்றே."

"கேட்டலுமே யமன்வணங்கி யறிவிலியே னருமறையும்
கிளக்க வொண்ணுத்
தாட்டுணைபெற் றேனுய்ந்தேன் ருணுவே யெனப்புவிமேற்
ருழ்ந்து போற்றி
மோட்டெருமைப் பெரும்பகடூர்ந் துலகணைந்தா னெம்பெருமான்
மொழிந்த சொல்லே
சூட்டரவின் மேற்கிடந்த வுலகமுதன் மூன்றுலகும்
சொல்லு மன்றே." (புதுமொழி)

மேலதிகாரத்தில் வினைத்தூய்மை கூறுகின்ருர். (கூடு)

வினைத்தூய்மை

66. மைந்தன்முடி மண்ணிலிட்டான் மாள்கவெனக் கைவிரித்த
சிந்துபதி பட்டான் சிவசிவா—தந்தம்
[1]சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

(எ - ரை.) அமைச்சன் தீயவினைகளாற் பொருள்படைத்து அதனல் அரசனுக்கு ஏமஞ்செய்தல், பசிய மட்கலத்துள்ளே நீரைப் பெய்து அதற்கு ஏமஞ்செய்ததனேடு ஒக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதத்தில் பதினலாம் போர்:

"எண்சிறந்த மகன்றலையை நிலத்திட்டான் றலைதுகளா
கென்று நாடித்
தண்சமந்த பஞ்சகமென் ருெருமடுவி லிவன்ருதை
தருப்பிக் கின்ருன்
ஒண்சரங்கொண் டிவன்றலைமற் றவன்காத்திற் போய்விழநீ
உடற்று கென்று
திண்சயங்கொள் விசயனுக்குச் சிந்துபதி தனைக்காட்டித்
திருமால் சொன்னுன்."

1. குறள், 660.

"வரத்தினின்முன் பெறுசாபம் வாங்கிவிசை யனுஞ்சிந்து
மகிபன் மோலிச்
சிரத்தினிலெய் தலுந்துணிந்த தொருசரத்தாற் றுணிதலுமச்
சிரம்வீ ழாமற்
சரத்தினைமேன் மேலேவித் தடத்திருந்து தருப்பிக்கும்
தாதை தன்பொற்
கரத்திடையே வீழ்வித்தா னவனதனை நிலத்திட்டக்
கணத்தின் மாய்ந்தான்."

"முன்பட்டா னருக்கனென வெளிப்பட்டான் வெளிப்பட்டு
முடிவிற் சிந்து
மன்பட்டான் மாமாயன் மாயமிதென் றறியாமல்
மகன்போய்ப் பட்ட
பின்பட்டா னவன்றந்தை யினிப்பட்டா ரெவருமெனப்
பிழைபட் டான்போல்
என்பட்டா னரவுயர்த்தோ னெரிப்பட்டான் விசயனென
வெண்ணி நின்றான்."

(166, 168 - 9.)

மேலதிகாரத்தில் வினைத்திட்பம் கூறுகின்றார். (கூகூ)

வினைத்திட்பம்

67. எய்து முருவறிந்து மேந்திழையாள் பாவனையே
செய்தபடி யாச்சே சிவசிவா—வையத்தில்
[1]எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(எ - ரை.) தாம் எய்த எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர். எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கண் திண்மையுடையராகப் பெறின். எ - று.

இதற்குப் பிரமாணம் பிரமோத்தரகாண்டம் :

"சுழிபடு கங்கைச் சடிலவா னவன்றன் சோமவா ரத்தினிற் றெருக்க
பழிபடு தீமை முனிந்தவே தியரைப் பன்னிய ரோடுபன் முறையால்
வழிபடு மமையத் திவர்களை நோக்கி மைந்தரிங் கிவரென மதித்துப்
பொழியருட் கண்ணு ணகைமுகங் கோட்டிப் பொருக்கென மறைத்தித
[செய்தாள்."

"எத்திறத் தானு மடைந்தவ ரெல்லா மீசனு முமையுமே யென்னு
அத்திர விழியாள் வேதநூன் முறையு மாகம முறையுமா வெடுத்துப்
பத்திசெய் பூசை விதிமுறை புரிந்து பால்பழந் தேன்கழை தீம்பால்
சித்திரக் கனக வள்ளத்தி லேந்திச் சிற்றுண்டி யடிசிலோ டளித்தாள்."

1. குறள், 666.

"அன்னவ ளுமையு மீசனு மென்ன வருச்சனை புரிந்தபா வனையால்
தன்னிக ரிலாத சாமவா னெடுத்த கோலம்போற் றளிரிய லாளுன்
முன்னநா மைந்த னென்பது மறந்து மொய்குழ லாமென முயங்கத்
தன்னொடு நெறியிற் போதருஞ் சுமேதாத் தனைமுக நோக்கிநின்
[றுரைக்கும்."
(பிரமோத்தர. சீமந்தனி பாவனை, 22, 23, 25.)

"கொழுநனுயி ரிறவாது சோமவா ரத்தரிவை
கூறும் வண்ணம்
பழுதறுபூ சனைபுரிசீ மந்தனிபா வனையின்வலி
பங்க யத்தோன்
எழுதுமெழுத் தினையகற்றி மறைச்சிறுவன் பெண்ணுருவம்
இயையச் செய்தாள்
மழவிடையோ னன்பர்புரி பாவனையை யளவைபெற
வகுக்க லாமோ." (புதுமொழி)

மேலதிகாரத்தில் வினைசெயல்வகை கூறுகின்றார். (சுஎ)

வினைசெயல்வகை

68. மங்கைமுலைக் கச்சவிழ்க்க வந்த சயந்தனொரு
செங்க ணிழந்தான் சிவசிவா—எங்கும்
[1]முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(எ - ரை.) வினை செய்யுங்கால் அது முடிதற்கு உளதாம் முயற்சியும், அதற்கு வரும் இடையூறும், அது நீங்கி முடிந்தால் தானெய்தும் பெரும் பயனும் சீர்தூக்கிச் செய்க. எ - று.

இதற்குப் பிரமாணம் [2]சயந்தன் கதை:

"வீழி வாய்மடக் கிளியொடு மிராகவன் விரும்பும்
சூழி ரும்பொழி லிடைவரு சயந்தன்முன் றோன்றும்
தாழி ருஞ்சிறைக் காகமா யலகினுற் சனகி
வாழி மாமுலைக் கச்சினை நெகிழ்த்திட வள்ளல்"

"ஒருச ரந்திரித் ததன்விழி கொளவுருத் தெய்ய
வரும ருந்துய ருழந்தனன் மீண்டும்வந் தெய்தித்
திருவி ஞயக னருளினு லொருவிழி சிதைந்தும்
இருக ணுக்கொரு விழியென விலங்கிய தன்றே." (புதுமொழி)

மேலதிகாரத்தில் தூது கூறுகின்றார். (சுஅ)

தூது

69. சானகியைக் கண்டரக்கன் றுணிகலி வாலிலிடும்
தீநகரி லிட்டான் சிவசிவா—ஊனுக்

---

1. குறள், 676. 2. கம்ப. சூளாமணிப். 77-81.

[1]இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

(எ - ரை.) அவ்வார்த்தை தன்னுயிர்க்கு இறுதி தருமாயினும் அதற்கு அஞ்சி ஒழியாது தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனுவான். எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணம்:

"ஆரைநீ யென்னையிங் கெய்து காரணம்
ஆருனை விடுத்தவ ரறிய வாணையாற்
சோர்விலை சொல்லுதி யென்னச் சொல்லினன்
வேரொடு மமரர்தம் புகழ்வி ழுங்கினன்."

"ஈட்டிய வலியு மேனு ளியற்றிய தவமும் யாணர்க்
கூட்டிய படையுந் தேவர் கொடுத்தநல் வரமுங் கோப்பும்
தீட்டிய வாழ்வு மெய்தத் திருத்திய பிறவு மெல்லாம்
நீட்டிய பகழி யொன்றுன் முதலொடு முடிக்க நின்றான்."

"அன்னவற் கடிமை செய்வே னுமமு மனும னென்பேன்
நன்னுத றன்னைத் தேடி நாற்பெருந் திசையிற் போன
மன்னரிற் றென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மக னவன தேவற் றூதன்யான் றமிய னென்றான்."

(கம்ப. பிணிவீட்டு. 73, 76, 82.)

மேலதிகாரத்தில் மன்னரைச் சேர்ந்தொழுகல் கூறுகின்றார். (சுக)

மன்னரைச் சேர்ந்தொழுகல்

70. அன்றரசோ டேரண்ட னுடுமுரை யாலவமே
சென்றுயிரை யீந்தான் சிவசிவா—நன்றிபெற
[2]வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றும்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(எ - ரை.) பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங் களை அவன் கேட்டிலனுயினுஞ் சொல்லி எஞ்ஞான்றும் பயனிலவாயவற் றைத் தானே கேட்டாலும் சொல்லாது விடுக. எ - று.

இதற்குப் பிரமாணம்:

"பொன்னி வார்புனல் சுழிவழி பாதலம் போந்த
தென்னை யென்றுவந் தேரண்ட முனிவனை யிறைஞ்சச்
சென்னி கேளர சாயினுஞ் செழுந்தவ ரேனும்
துன்னி யாங்குவீழ்ந் திறந்திடி னென்னெறி தொலையும்."

"என்று சொற்றது கேட்டர சதனின்வீழ்ந் திறந்தான்
சென்று பாய்ந்தது செழும்புன லிவ்வகை தெரித்தான்

---

1. குறள், 690. 2. குறள், 697.

வென்றி மாதவ னென்றன ரிப்பழி விரைவிற்
பொன்றி னீங்குமென் றதனின்வீழ்ந் திறந்தனன் புகழோன்."

மேலதிகாரத்திற் குறிப்பறிதல் கூறுகின்றார். (எ௦)

குறிப்பறிதல்

71. வென்றி யிராமனெடு வில்லைமுனி வன்குறிப்பாற்
சென்று வளைத்தான் சிவசிவா—மன்றிற்
[1]குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

(எ - ரை.) தம் குறிப்பு நிகழுமாறு அறிந்து அதனாற் பிறர் குறிப்பறியும் தன்மையாரை அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவதொன்றனைக் கொடுத்தாயினும், தமக்குத் துணையாகக் கொள்க. எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணம்:

"நினைந்தமுனி பகர்ந்ததெல்லா நெறியுன்னி யறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்ததனை நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்."

"பொழிந்தநெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கன லென்ன வெழுந்தான்
அழிந்தது வில்லென விண்ணவ ரார்த்தார்
மொழிந்தன ராசிகண் முப்பகை வென்றார்."

(கம்ப. கார்முகப். 25 - 6.)

மேலதிகாரத்தில் அவையறிதல் கூறுகின்றார். (எக)

அவையறிதல்

72. மன்றிற் பரசமய கோளரிமுன் வல்லமணர்
சென்றநிலை யென்னுஞ் சிவசிவா—துன்றுதிரை
[2]ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்ன மிழுக்கு.

(எ - ரை.) வீடெய்தற்பொருட்டு நன்னெறிக்கண் நின்றானொருவன் அந்நெறியினின்றும் நிலைதளர்ந்து வீழ்ந்தாலொக்கும், அகன்ற நூற்பொருள்களை உட்கொண்டு அவற்றின் மெய்ம்மை யுணரவல்லானொருவன் சொல் விழுக்குப்படுதல். எ - று.

இதற்குப் பிரமாணம் பெரிய புராணம்:

"மன்னவன் மொழிவா னென்னே மதித்தவிக் காய மொன்றில்
வெந்நர கொருபா லாகும் வீட்டின்ப மொருபா லாகும்

---

1. குறள், 703. 2. குறள், 716.

துன்னுநஞ் சொருபா லாகுஞ் சுவையமு தொருபா லாகும்
என்வடி வொன்றி லூற்றே னிருபுறத் தியலு மென்பான்.''

''வெந்தொழி லருகர் தோற்றீ ரென்னைவிட் டகல நீங்கும்
வந்தெனை யுய்யக் கொண்ட மறைக்குல வள்ள லாரே
இந்தவெப் படைய நீங்க வெனக்கருள் புரிவீ ரென்று
சிந்தையாற் றொழுது சொன்னான் செல்கதிக் கணிய னானான்.''

(திருஞானசம்பந்த. 768 - 9.)

மேலதிகாரத்தில் அவையஞ்சாமை கூறுகின்றார். (எஉ)

அவையஞ்சாமை

73\. முத்தமிழ்ச்சங் கத்தவரை மூதுரையால் வள்ளுவரும்
சித்தமகிழ் வித்தார் சிவசிவா—எத்தனையும்
[1]கற்றாரிற் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(எ - ரை.) கற்றா ரெல்லாரினும் இவர் நன்கு கற்றாரென்று உலகத்தாராற் சொல்லப்படுவோர் கற்றாரவைக்கண் அஞ்சாதே தாம் கற்றவற்றை அவர் மனம் கொள்ளும்வகை சொல்லவல்லார். எ - று.

இதற்குப் பிரமாணம் திருவள்ளுவ நாயனார் கதை:

''வேதமொழி தமிழுருவத் தளித்ததிரு வள்ளுவனார்
விரைந்து சங்கத்
தோதுதமிழ்ப் புலவர்மொழிக் கெதிர்மொழியான் மனமகிழ
வுரைத்துச் சொக்க
நாதர்மொழி தனக்குமொரு நவையுரைக்கு மவர்களெதிர்
நாட்டு நன்னூல்
மேதினியி லருந்தவருஞ் சமயருங்கொண் டருண்ஞானம்
விளங்கி னாரே.''

''வல்லதமிழ் வள்ளுவனை வள்ளுவரேற் குலக்குநெறி
வருமோ வென்னச்
சொல்லியசங் கத்தவரை நிலைகுலைத்துத் தாமுரைத்த
தூய நன்னூல்
செல்லவுல கினினிறுத்திச் சமயரெவர் களுந்தமது
சிரமேற் கொள்ளப்
பல்வகைய நூலினுமீ தினியதென வருள்புரிந்தார்
பாரின் மீதே.''

(புதுமொழி)

மேலதிகாரத்தில் நாடு கூறுகின்றார். (எங)

1, குறள், 722.

நாடு

74. பொன்னியென வேதமுனி பொற்கரக நீர்கவிழ்த்த
சென்னிவள நாடே சிவசிவா—நன்று
[1]டிருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(எ - ரை.) கீழ்நீர், மேல்நீரெனப்பட்ட தன்கண் நீரும் வாய்ப்புடைத் தாய மலையும் அதனினின்றும் வருவதாய நீரும் அழியாத நகரியும் நாட்டிற்கு அவயவமாம். எ - று.

இதற்குப் பிரமாணம் சிதம்பரபுராணம்:

"பொன்னிவளந் தருநாடே நாடிந்தப் புவனத்துட்
புகலந் நாடு
தன்னிலருந் தவந்தானம் யாகமிக வும்பயனைத்
தருவ வேதச்
சென்னியுறை பரானந்தத் திருவுருவத் தொருகடவு
தென்பா னோக்கி
மின்னனைய கன்னியுடன் பொன்னவையி னின்றாடல்
விளங்க லாலே."

(சிதம்பர. சமாதிச். 12.)

"இந்திர னமைத்த காவிற் கெய்திய பொன்னி சையத்
தைந்துமா கரத்தான் கும்ப முனிகரத் தரிய கன்னல்
தந்திடச் செய்தா னேரி மலையினன் றருமச் செங்கோல்
உந்தினு னந்த நாட்டிற் குவமையா ருரைக்க வல்லார்."

(புதுமொழி.)

மேலதிகாரத்தில் அரண் கூறுகின்றார். (எச)

அரண்

75. காத்தா னசலக் கருணா கரன்கலிங்கம்
சேர்த்தான் றிறத்திற் சிவசிவா—பார்த்தால்
[2]எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்க ணில்ல தரண்.

(எ - ரை.) அரண், மேற்சொல்லப் பட்ட மாட்சியெல்லாம் உடைத் தாயவிடத்தும் வினைசெய்தற்கண் மாட்சிமையில்லாதார் மாட்டு அவை இலதாம். எ - று.

இதற்குப் பிரமாணம் கலிங்கத்துப்பரணி:

"காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த கலவி மகளிர் கழற்சென்னி
காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த களப்போர் பாடத் திறமினோ."

(கடைதிறப்பு, 40.)

---

1. குறள், 737. 2. குறள், 750.

"கணிகை மாதராற் கலங்கியே கலிங்கரா னவர்செய்
பிணியி னூற்சிமிழ்ப் புணவருஞ் சோழனும் பெரியோன்
துணிவி னூற்கரு ணாகரத் தொண்டைமா னியற்றும்
பணியி னூற்கலிங் கந்திறை கொண்டனன் பார்மேல்."

(புதுமொழி)

மேலதிகாரத்திற் பொருள் செயல்வகை கூறுகின்றார். (எரு)

பொருள் செயல்வகை

76. கொண்டான் வடகிரியிற் கூட லரசுபொருள்
செண்டா லடித்தே சிவசிவா—தண்டாமல்
[1]ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை யிரண்டு மொருங்கு.

(எ - ரை.) நெறியான் வரும் பொருளை இறப்பமிக்ப் படைத்தார்க்கு மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாம். எ - று.

இதற்குப் பிரமாணம் திருவிளையாடல்:

"மற்றதன் சாரன் மாட்டோர் வளநகர் மேவி யங்கண்
உற்றதா னையையி ருத்தி யோங்கிய திறலி னோடும்
முற்றிர விற்சென் றீசன் மொழிந்தன மொழிந்து நிற்பச்
சற்றுண ராமை கொண்டு சாடினான் கையிற் செண்டால்."

"அங்கது சுழன்று கம்பித் தமரர்மெய் புனைந்து வந்து
செங்கணே றனைய மன்னன் றிண்மைகண் டதிச யித்தின்
றிங்கியா னுரைப்ப தொன்றுண் டென்னுடை யுருவஞ் சாற்றிற்
சங்கம மென்றொன் றுண்டு தாபர மென்றொன் றுண்டால்."

"மன்னிய சங்கம வடிவ மாமிது
முன்னிய தாபர வடிவ முன்னரிம்
மின்னிய வெற்பகத் துனக்கு வேண்டுசெம்
பொன்முறித் தேகெனப் புகழ்ந்து சொன்னதால்."

"முற்றிகழ் தச்சரான் முறித்தி லங்குசெங்
கற்படு வரையென வெடுத்துக் காஞ்சனம்
அற்புதச் சிகரிபண் டார மாகவே
கொற்றவன் றன்கயற் குறிபொ றித்தனன்."

(மேருவிற் கயல் செண்டு பொறித்த. 12-5.)

மேலதிகாரத்திற் படைமாட்சி கூறுகின்றார். (எசு)

படைமாட்சி

77. பார்த்திவனைக் கட்டவிழ்த்துப் பத்ராயு வன்பகையைத்
தீர்த்தொருவ னின்றான் சிவசிவா—ஆர்த்தங்

---

1. குறள், 760.

[1]கொலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(எ - ரை.) எலியாகிய பகை திரண்டு கடல்போல ஒலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும்? அந்நாகம் உயிர்த்த துணையானே அதுதானே கெடும். எ - று.

இதற்குப் பிரமாணம் பத்திராயுவின் கதை:

"சோதைபுனே வேன்மகதர் கோமானையுமவன்றன்
காதலுறு மைந்தரையுங் காவற் றளைப்படுத்தித்
தாதைசிறை நீக்கியவன் ருடொழுது தங்குலத்துக்
கோதுபழி தீர்த்தா னுயர்வெண் குடையானே."

"தந்நிகரில் சேனு பதிக டமைவிடுத்து
மன்னுடனே நீவிர் வளநகரத் தெய்துகெனச்
சொன்னமொழி கேட்டுத் துயர்தீர் தசானனர்கோன்
அந்நிலையே யார்வநிறைந் தாங்கவனைப் பார்த்துரைத்தான்."

(பிரமோத்தர. பத்திராயுவின் கதையுரை. 26-7.)

மேலதிகாரத்திற் படைச்செருக்குக் கூறுகின்ருர். (எஎ)

படைச்செருக்கு

78. உரமிறந்து போகாத வுள்ளத் தராவான்
சிரமறுந்து நின்ருன் சிவசிவா—தரமாய்
[2]விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னுளை யெடுத்து.

(எ - ரை.) தனக்குச் சென்ற நாள்களை எடுத்து எண்ணி அவற்றுள் விழுப்புண் படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன். எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதத்தில் களப்பலிச் சருக்கம்:

"அடியனே னிருக்க நீயே யரும்பலிக் கிசைவாய் போரில்
மடியநே ரலரைக் கொன்று வாழ்விவர்க் களிக்க நின்ருய்
கடியநேர் பலிதந் தாலுங் காயமர் சிலநாட் கண்டியான்
முடியநே ரலர்வெம் போரின் முடிவெனக் கருளு கென்ருன்."

(6)

மேலதிகாரத்தில் நட்புக் கூறுகின்ருர். (எஅ)

நட்பு

79. உற்ற குசேலனல முற்றிருத்தற் காவுவந்தோர்
சிற்றுணவு கொண்டான் சிவசிவா—சுற்றம்
[3] உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு.

---

1. குறள், 763. 2. ஷை. 776. 3. ஷை. 788.

(எ - ரை.) அவையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி அவ்விளிவரல் களையுமாறு போன்று நட்டவனுக்கு இடுக்கண் வந்துழி அப்போழுதே சென்று உதவி அதனைக் களைவதே நட்பாவது. எ - று.

இதற்குப் பிரமாணம் பாகவதம்:

“உருகு காதலன் பைப்பய வொல்கினன் வருதல்
முருகு விம்மிய முளரியஞ் செங்கணு னோக்கி
எரிபொற் சேக்கைநின் றெழுந்தெதிர் சென்றிவண் வருக
வருக வென்றுபொன் மார்புறத் தழீஇயினன் மன்னோ.”

“பயிற்று நான்மறைக் குரவன்மா மனையவள் பணியால்
வெயிற்கு வெம்பிய கானிடை விறகினுக் கேகிப்
புயற்க சைந்தொரு பொதும்பரி னிரவுநா மிருந்த
தயர்த்தி போலுமென் றளவளா யுரைத்தன னன்றே.”

“முளைத்த வெண்ணிலா முறுவல்வாண் முகத்தின னாகி
அளிப்ப மற்றெனக் கென்கொடு வந்தனை யன்ப
ஒளிப்ப தென்னைநீ யுதவுகென் றுள்ளரக் கூட்டும்
தளிர்க்கை யாற்றுகில் வாங்கினன் றாமரைக் கண்ணன்.”

“பொருள்வி ழைந்திவன் போற்றல னமையொரு நாளும்
திருவி ழைந்திவன் றிருமனைக் கிழத்திசெல் கென்ன
வரவு வந்தனன் மற்றிவற் களித்துமென் றள்ளி
விரைக மழ்ந்தபூந் துளவினன் பாசவன் மிசைந்தான்.”

(குசேலற்கருள்புரிந்த. 7-11.)

மேலதிகாரத்தில் நட்பாராய்தல் கூறுகின்றார். (எக)

நட்பாராய்தல்

80. துருவதனட் பாயான் றுரோணனடி யார்செய்
செருவினிற்கட் டுண்டான் சிவசிவா—வருவதன்முன்
[1] ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(எ - ரை.) குணனும் செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்பதும் பலகால் ஆராய்ந்தும் பலவற்றானாய்ந்தும் ஒருவனோடு நட்புக் கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்கு ஏதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளைக்க வேண்டாமல் தானே விளைக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதம்:

“மாவின் பாலே யன்றி மரபுக் குரிய மைந்தன்
ஆவின் பால்கண் டறியா னதனால் வருந்தி யந்தக்
கோவின் பாலே குதலுங் கோமான் யார்நீ யென்ன
நாவின் பாலா னடுங்கி நானுன் னன்ப னென்றேன்.”

---

1. குறள், 792.

" மன்னன் யானீ முனிவன் மரபா லெனக்கு முனக்கும்
என்ன நண்புண் டென்ன வேசி நகைசெய் திகழ்ந்தான்
அன்ன துருபன் றன்னை யவையி லரசர் கேட்பச்
சொன்ன வாய்மை நீயே சோர்ந்தா யானே சோரேன்."

" புகன்ற படிநீ யாளும் புவியிற் பாதி கொள்வேன்
இகன்ற சமரி லுன்னை யிரதத் துடனே கவர்வேன்
அகன்ற மெய்ம்மை யுடையா யறிதி யென்றே னென்று
சுகன்றன் ஞானம் பெற்ற துரோணன் சொல்லக் கேட்டான்."

" தகப்படுஞ் சராசனத் தனஞ்சயன்கை யம்பினால்
அகப்படுந் தராதிபன்ற னற்றவில்லி ஞாணினால்
மிகப்படுந் தடங்கொடேர் மிசைப்பிணித்து விசையுடன்
நகப்படுஞ் செயற்கைசெய்து குருவின்முன்னர் நண்ணினான்."

(வாரணவதச். 43-5, 80.)

மேலதிகாரத்திற் பழமை கூறுகின்றார். (அ0)

பழமை

81\. குறித்தரசு கன்னனுடன் கோதைவிளை யாட்டுள்
தெறித்த மணியுஞ் சிவசிவா—பொறுக்கும்
[1]அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

(எ - ரை.) நட்டார் தமக்கு அழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர் மாட்டு அன்பு ஒழியார், அன்புடனே பழையதாய் வந்த நட்பினை யுடையார் எ - று.

இதற்குப் பிரமாணம்:

[2] " கன்னனுந்தன் மனையாளுஞ் சூதுவிளை யாட்டயருங்
காலை மன்னர்
மன்னன்வரக் கண்டரிவை யெழும்போதங் கவனீர்த்த
மாலை சோர
அந்நிலையே யரசனிருந் தன்பினுடன் மணிபொறுக்கி
அளித்தான் யார்க்கும்
பன்னரிய புரிந்தாலும் பழமைகுறித் தேபொறுப்பர்
பரிவி னோரே."

(புதுமொழி)

மேலதிகாரத்தில் தீநட்புக் கூறுகின்றார். (அக)

தீ நட்பு

82\. பொன்மானன் றாசைகொண்ட பொன்னனையார் பட்டதுயர்
சென்மாந்தபாவஞ் சிவசிவா—சொன்னோம்

1. குறள், 807. 2. வி. பா. கிருட்டினன்தூது. 255.

[1] கனவினு மின்னாது மன்னோ மனம்வேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

(எ - ரை.) வினையுஞ் சொல்லும் ஒவ்வாது வேறு வேறாய் இருப்பார் நட்பு நனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணும் இன்னாது. எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணம் :

" காணா விதுகை தவமென் றுணராள்
பேணா நலங் கொடுபே ணினளால்
வாணா ளையிரா வணன்மா ளுதலால்
வீணா ளிலறம் புவிமே வுதலால்."

" ஆணிப் பொனினா கியகாய் கதிராற்
சேணிற் சுடர்கின் றதுதிண் செவிகால்
மாணிக் கமயத் தொருமா னுளதாற்
காணத் தகுமென் றனள்கை தொழுவாள்."

" முன்னமு மகவாய் வந்த மூவரி லொருவன் போனான்
அன்னமா ரீச னென்றே யயிர்த்தன னவனை யைய
இன்னமுங் காண்டி வாழி யேகென விருகை கூப்பிப்
பொன்னனாள் புகுந்த சாலை காத்தொரு புறத்தி னின்றான்."

" ஆசை நீளத் தரற்றினன் வீழ்ந்தவந்
நீசன் மேனியை நேருற நோக்கினான்
மாசின் மாதவன் வேள்வியில் வந்தமா
ரீச னேயிவ னென்பதுந் தேறினான்."

(மாரீசன் வதைப். 217, 219, 239, 249.)

மேலதிகாரத்தில் கூடாநட்புக் கூறுகின்றார். (அஉ)

கூடா நட்பு

83\. தாய்போல் வருமலகை தன்னட் பறிந்துமவள்
சேய்போ லிருந்தான் சிவசிவா—மாயனெதிர்
[2]நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொல்
ஒல்லை யுணரப் படும்.

(எ - ரை.) நட்டாரைப் போன்று நன்மை பயக்கும் சொற்களைச் சொன்னாராயினும் பகைவர்சொற்கள் அது பயவாமை அச்சொல்லிய பொழுதே அறியப்படும். எ - று.

இதற்குப் பிரமாணம் பாகவதம் :

" காலவிட முறுமொரு கட்செவியை யந்தண்
மாலையென வங்கையி னெடுப்பதனை மான
ஆலிலையும் வேலையு மகன்றலகு போற்றக்
கோலமுறு கோவலர் கொழுந்தினை யெடுத்தாள்."

1\. குறள், 819. 2. ஷை. 826.

" அறிந்துநகை யாடிமுலை யங்கைகொடு பற்றி
மறங்குலவு வஞ்சமகண் மாமுலை மணிக்கண்
திறந்தொழுகு பாலினொடு செய்யதளி ரென்னப்
பிறங்குகனி வாய்முகில் பிழிந்துயிர் குடித்தான்."

" ஊறுமுலை தந்திளைய ருள்ளுயிரை யெல்லாம்
ஈறுபுரி பூதனை யிறந்துருவு வேரூய்
நீறுபட யோசனையி னின்றமர மெல்லாம்
வீறுயர் நிலம்புக விழுந்தனளோர் குன்றின்."

(பூதனை வீடுபெற்ற. 3, 5, 6.)

மேலதிகாரத்திற் பேதைமை கூறுகின்றார். (அரு)

பேதைமை

84. தன்றலைமேற் கைவைக்கத் தான்றொடர்ந்தாற் சீந்தபலன்
சென்றொளிக்க லாச்சே சிவசிவா—என்றென்றும்
[1] பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

(எ - ரை.) செய்யும் முறைமை அறியாத பேதை ஒரு கருமம் மேற் கொள்வனாயின் அதுவும் புரைபட்டுத் தானும் தளை பூணும். எ - று.

இதற்குப் பிரமாணம்:

" தவமுய லசுரன் கேட்டநல் வரங்கள்
தருவதற் கெய்திய விறையைப்
புவனமீ திறைஞ்சிப் பகைவரை யெதிரும்
பொழுதினி லெனக்கவர் தலைமீ
....
....
திவர்தருங் கடவுள் கருணையோ டளித்தான்
............................."

" பெற்றநல் வரத்தா லிறைவனைத் தொடரப்
பேதைய னென்றிறை மறைந்தான்
கற்றையங் கதிர்கா னேமிவா னவனக்
கயவனை யுன்கையா லுனது
கொற்றமார் முடியின் வைத்தறி குவதே
குணமெனக் குணமிலி தன்மேற்
பற்றவைத் தனனக் கணத்தினே பொடியாய்ப்
பாரின்வீழ்ந் திறந்தனன் பதகன் "

(புதுமொழி)

மேலதிகாரத்திற் புல்லறிவாண்மை கூறுகின்றார். (அசு)

---

1. குறள், 836.

புல்லறிவாண்மை

85. மாற்கு மதுவுங் கயிடவனும் வாழ்நாளைத்
தீர்க்கவர மீந்தார் சிவசிவா—பார்க்கின்
[1]அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் றவம்.

(எ - ரை.) புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின் அதற்குக் காரணம் பெறுகின்றவன் நல்வினையே; வேறொன்றும் இல்லை. எ - று.

இதற்குப் பிரமாணம் விருத்தகிரிப் புராணம்:

" காதி ரண்டினிற் குறும்பியிற் கண்ணர்பா லிரண்டு
பேத மாகிய மதுவுடன் கயிடவன் பிறந்து
சீத ரன்றனைப் பொருதனன் சீதரன் றோற்று
யாது செய்குவ மெங்ஙனம் வெல்குவோ மென்று."

" தேற்ற மாய்வரங் கேளுமி னென்றனன் றிருமால்
தோற்ற நீவா மென்கொலோ தருகுவை சொல்லாய்
ஏற்ற மாகிய வெங்களைக் கேள்வர மென்றார்
மாற்ற மென்கையான் மாயுமி னென்றனன் மாயன்."

" மாயன் கையினுன் மதுவுடன் கயிடவன் மடிந்தான்
தோய மீதினின் மேதையைத் தூர்த்தனர் புவிக்கு
மேய நாமமு மேதினி யாயது விரிஞ்சன்
நேய மேதினி யிறுகிடச் சிவன்பத நினைந்தான்."

(கிரிச்சருக்கம், 13-5.)

மேலதிகாரத்தில் இகல் கூறுகின்றார். (அரு)

இகல்

86. தாயடிமை வானமுதந் தந்தகற்றச் சார்வயின
தேயனைமால் வென்றான் சிவசிவா—ஏய
[2]இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

(எ - ரை.) தம்முள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை ஏற்றுக் கொள்ளாது சாய்ந்தொழுக வல்லாரை வெல்லக் கருதும் தன்மையார் யாவர்? எ - று.

இதற்குப் பிரமாணம் காசி காண்டம்:

" அலகில் சூழ்ச்சியால் வெல்லுத லன்றிமற் றவனை
விலகி வில்லுமிழ் படையினுல் வெலற்கரி தென்ன
உலகெ லாம்வயிற் றொருபுடை கிடத்திய வுரவோன்
கலுழன் முன்னர்வந் தெய்திமற் றினையன கழறும்."

---

1. குறள், 842. 2. குறள், 855.

" வயிர வாட்படை யுழவனை வென்றுவா ளமரிற்
செயிரி லின்னமு தெடுத்தனை போகிய திறலாற்
பயில்கொ டுஞ்சிறைக் கலுழயா மூவந்தனம் பகர்தி
இயையு மோர்வரந் தருதுமென் றிசைத்தன னெடியோன்."

" கேட்ட நல்வர மளிப்பல்யான் கிளத்தென வென்னைத்
தோட்ட டத்தினிற் சுமப்பதோர் வரமமிழ் தரவிற்
கூட்டி டாதவை யொழிப்பதோர் வரமென முகுந்தன்
வேட்டி ரத்தலு மளித்தனன் வெஞ்சிறைக் கலுழன்."

" மாய வன்கொள வரமிரண் டினிதினின் வழங்கிக்
காய்சி னத்தவா ளரவொடுங் கத்துரு வுவப்பத்
தூய தீஞ்சுவை யமிழ்தினைத் துணைவினிற் கொடுபோய்த்
தாயின் வெஞ்சிறை விடுத்தனன் றடஞ்சிறைக் கலுழன்."

(கடோற்காதித்தன். 30, 31, 33, 34.)

மேலதிகாரத்திற் பகைமாட்சி கூறுகின்றார். (அசு)

பகைமாட்சி

87. ஐங்கரனென் றோரா வரக்கன் றலைமோதிச்
செங்கரங்க ளோந்தான் சிவசிவா—அங்கவ்
[1] வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.

(எ - ரை.) ஒருவன் நீதிநூல்களை ஓதான் அது விதித்த தொழில்களைச் செய்யான் தனக்கு வரும் பழியைப் பாரான் தான் பண்புடையனல்லன்; அவன் பகைவர்க்கு அப்பகைமை இனிது. எ - று.

இதற்குப் பிரமாணம் பிரமோத்தர காண்டம்:

" மறையோனென் றுளநினைந்து மடமையினு லிதுசெய்தேன்
பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே பிழைசெய்தேன்
இறையோனே பொறுப்பதுனக் கியல்பென்றென் றிரந்தேத்தப்
பொறையோடு முமைபுதல்வன் புவியிலரக் கனைவிடுத்தான்."

" நிருதர்குலத் திகல்வேந்தே நினதுபிழை யாம்பொறுத்தாம்
இருபதுசெங் கரத்தாலு மெழின்மலரோன் முன்கவித்த
ஒருபதுமா முடித்தலையு முறப்புடைத்தி யெனலோடும்
குருதிநிறங் கொளப்புடைத்துக் குனித்தாடி யுவப்பித்தான்."

" அன்னதுகண் டேவந்தருளி யைங்கரத்தோ னன்றுமுதல்
என்னதரு ணலம்வேண்டி னினைப்போல விருகரத்தால்
சென்னியுறப் புடைத்தவர்பாற் சிந்தைமகிழ் வேமென்னு
மின்னின்மறைந் தனனிருதன் வேலையிலங் கையிற்புக்கான்."

(சிவதான மகிமை, 57 - 9.)

மேலதிகாரத்திற் பகைத்திறந்தெரிதல் கூறுகின்றார். (அஎ)

---

1. குறள், 865.

பகைத்திறந் தெரிதல்

88. ஐங்கரனைக் கண்டுநகைத் தாவணிநா லாந்திதியிற்
றிங்கள்பகை யானன் சிவசிவா—எங்கும்
[1] பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

(எ - ரை.) பகையென்று சொல்லப்படும் தீமைபயப்பதனை ஒருத்தன் விளையாட்டின்கண்ணும் விரும்புதல் இயற்கைத்தன்று என்றது நீதிநூல். எ - று.

இதற்குப் பிரமாணம் உபதேசகாண்டம்:

"தூங்கு பண்டியுந் தொளைபடு துதிக்கையுங் காத்துத்
தாங்கு பண்டமுந் தண்டைபம் பியகுறுந் தாளும்
ஆங்கு நோக்கின னகைத்தன னம்புலிக் கடவுள்
தேங்கு சீற்றமிக் கெழுந்தனன் கரிமுகச் சிறுவன்."

"என்னை நோக்கினை நகைத்தனை திங்கண்மற் றிதுநாள்
உன்னை நோக்கின ருருப்பழி பாதக முற்றருங்
கின்ன லங்கடற் படிந்திட ரொழிந்தில ராகித்
தொன்னி லத்தவர் நகைதரக் கறங்கெனச் சுழல்வார்."

(சிவவிரதமான்மியச். 353-4.)

மேலதிகாரத்தில் உட்பகை கூறுகின்றார். (அஅ)

உட்பகை

89. வென்றிபுனை சம்பரனை வென்றதவ னில்லிருந்தே
தென்றலெனுந் தேரோன் சிவசிவா—என்றும்
[2] அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொருத
உட்பகை யுற்ற குடி.

(எ - ரை.) முன்வளர்ந்து வந்ததாயினும், உட்பகை யுண்டாய குடி அரத்தாற் பொரப்பட்ட இரும்புபோல அதனாற் பொரப்பட்டு வலி தேயும். எ - று.

இதற்குப் பிரமாணம்:

"மதனனை யன்றி யொருவரா லிறவா
வரம்பெறுஞ் சம்பரன் வாழ்நாள்
இதமுரைக் குவன்கே ளென்றுநா ரதனிற்
கெதிரிலை யெனினுமம் மதனைச்
சதியொடுங் கொணர்ந்து கொலைபுரிந் திடினின்
றனையெவர் வெல்குவ ரென்னத்
துதிசெயு முனிவ னகன்றபின் மதனைத்
துணையொடுங் கவர்ந்தனன் சூரன்."

1. குறள், 871. 2. குறள், 888.

"வருபிர தியைத்தன் மடைத்தொழிற் கமைத்து
மதனையோர் கல்லிடைப் பிணித்துத்
திரையொடு கடற்கண் வீழ்ப்பவங் கவனைச்
சென்றொரு மீன்விழுங் கியதாற்
குரைகடற் கரைவாழ் பரதவன் வலையிற்
கொண்டர சனுக்கது கொடுப்ப
இரதியை யிதனைச் சமைத்திடென் றுதவ
விருந்திடு மதனையங் கெடுத்தே."

"பாதலத் தறைசெய் திருத்தியக் கயவன்
பணிபுரிந் திருந்திடு நாளிற்
றீதிழைத் திடுமவ் வசுரனுக் கிறுதி
சேருநாள் வெளிப்படை யாக
மோதமர்க் களத்தின் மடிதரப் பொருது
முழுமதிக் குடையவ னிருந்தான்
ஓதிடிவ் வுலகி னுட்பகை கடத்தல்
ஒருவரான் முடிந்திடா தன்றே."

(புதுமொழி)

மேலதிகாரத்திற் பெரியாரைப் பிழையாமை கூறுகின்றார். (அகூ)

பெரியாரைப் பிழையாமை

90. வந்தமுனி வோரை வணங்கா வரன்பேறு
சிந்தைசெய வேணுஞ் சிவசிவா—முந்தும்
[1]பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்.

(எ - ரை.) ஆற்றல்களாற் பெரியாராயினுரை வேந்தர் நன்கு மதியாது அவமதித்து ஒழுகுவாராயின் அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு என்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம் அருணசல புராணம்:

"முன்னமகத் தியன்முதலா முனிவர்களெம் பதின்மர்வர
முனிபாற் சென்றார்
அன்னவன்றன் றவமதிப்பா லவமதிப்பா யிருந்திடலும்
அவனை நோக்கிப்
பொன்னனைய தவமுனிவர் வெகுண்டுரைப்பா ரெமையிகழ்ந்த
புன்மை யாலே
உன்னரிய கருங்கடவா யினிப்பிறக்கக் கடவாயென்
றுளையச் சொன்னார்."

---

1. குறள், 892.

'அருந்தவரைம் பதின்மருமன் றுரைத்தமொழிக் கொடுமையைக்கண்
டச்ச மாகி
இருந்தவா னெழுந்துபணிந் தெனதுபிழை பொறுத்தருள்வீர்
என்று னந்தப்
பெருந்தவான் புடனுரைப்பார் மயிடமுகத் தவுணனெனப்
பிறந்து பின்னர்த்
திருந்தவா னிடம்வேண்டித் தவம்புரியு முமைகணத்திற்
றீர்ப்பா ளென்றார்."

(இடப்பாகம் பெற்ற. 46 - 7.)

மேலதிகாரத்திற் பெண்வழிச் சேறல் கூறுகின்றார். (கூ0)

பேண்வழிச் சேறல்

91. ஓது கனிபொருந்து முங்கண் மனத்தினுள
சேதிசொலி னென்றான் சிவசிவா—ஆதலினால்
[1]இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்றும்
நல்லாரு ணாணுத் தரும்.

(எ - ரை.) ஒருவன் இல்லாண்மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம் அஃதிலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதம், பழம் பொருந்தின சருக்கம்:

"பெண்மொழி கேளா ரென்றும் பெரியவ ரெனக்கொண் டிந்த
மண்மொழி வார்த்தை பொய்யோ வருத்தநீ ருற்ற வெல்லாம்
எண்மிக வெண்ணின் முன்ன மென்பொருட் டன்றோ வென்று
கண்மல ரருவி சோரக் கனற்பிறந் தாளுஞ் சொன்னாள்."

"திண்மையா லுயர்ந்த நீவிரா விருமித்
தீயிடைப் பிறந்தசே யிழையும்
உண்மையா னெஞ்சி னிகழ்ந்தபட் டாங்கீண்
டுரைத்திடக் கோட்டின்மீண் டொன்றும்
வண்மையா லுயர்ந்தீ ரென்றுசெம் பவள
வாய்திறந் தருளினன் மாயோன்
தண்மையார் கருணைத் தாாபதி முதலோர்
சாற்றுவார் தம்மனத் தியல்பே."

"வெல்லுக வறமு மெய்ம்மையும் பொறையும்
மேகமே னியனும்வெல் லாமற்
செல்லுக பாவம் பொய்ம்மொழி கோபம்
தயித்தியர் குலமெனத் தெளிவுற்

---

1. குறள், 903.

றல்லும்வெம் பகலு மென்மன நிகழும்
அலகையா மன்னையை முன்னம்
கொல்லுதல் புரிந்தோ யென்றனன் முரசம்
கோட்டிய கொற்றவெங் கொடியோன்.''

''பிறர்மனை யவரைப் பெற்றதா யெனவும்
பிறர்பொரு ளெட்டியே யெனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமையன் றெனவும்
பிறர்துய ரென்றுய ரெனவும்
இறுதியே வரினு மென்மனக் கிடக்கை
எம்பிரா னிவையென வுரைத்தான்
மறலியு மடியு மாறுமல் லியற்கை
வலிமைகூர் வாயுவின் மைந்தன்.''

''ஊனமே யான வூனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூணும்
மானமே புரப்ப தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தோற்றமு மரபும்
ஞானமே யான திருவடி வுடையாய்
ஞாலமுள் ளளவுநிற் றலினால்
ஈனமே யுயிருக் கியற்கையா தலினால்
என்றனன் வீமனுக் கிளையோன்.''

''குலமிக வுடைய ரெழின்மிக வுடையர்
குறைவில்செல் வமுமிக வுடையர்
நலமிக வுடைய ரென்னினுங் கல்வி
ஞானமற் பமுமிலா தவரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்
சலமிகு புவியி லென்றனன் வாகைத்
தார்புனை தாரைமா வல்லான்.''

''ஒருமொழி யன்னை வரம்பிலா ஞானம்
உற்பவ காரண னென்றும்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நலனுறு தாரம்
அரியதிண் பொறையே மைந்தன்மற் றிந்த
அறுவரு மல்லதா ருறவென்
றிருவரி லிளையோன் மொழிந்தனன் றன்பே
ரிதயமா மலர்க்கிடை யெடுத்தே.''

''ஐம்புலன் களும்போ லவரும் பதிகள்
ஆகவு மின்னம்வே றொருவன்
என்பெருங் கொழுந னுவதற் குருகும்
இறைவனே யெனதுபே ரிதயம்

அம்புவி தனிற்பெண் பிறந்தவ ரெவர்க்கும்
ஆடவ ரிலாமையி னல்லால்
நம்புதற் குளதோ வென்றனள் வசிட்டன்
நல்லற மனைவியே யனையாள்.''

''அறுவரு மிவ்வா றுண்மையே யுரைத்தார்
ஆதலா னிரைநிரைப் படியே
மறுவணி துளப மார்பனுங் கேட்டான்
மாமுனிக் கோதன மான
நிறைசுவை யமுத நெல்லியங் கனியும்
நின்றகொம் பணைந்ததா லென்றும்
பெறுமுறை பெறுமே யுள்ளவா றுரைத்தாற்
பெரியவர் பேசும்வா சகமே.''

(12, 15-22.)

மேலதிகாரத்தில் வரைவின் மகளிரைக் கூறுகின்றார். (கக)

வரைவின் மகளிர்

92. போச னுரைக்கிசைந்த புண்ணியனை வேசிகொன்றாள்
தேசமறி யாதோ சிவசிவா—பேசுமிடத்
[1]தன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியார்
இன்சொ லிழுக்குத் தரும்.

(எ - ரை.) ஒருவனை அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர் அது கையுறுந்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல் லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும். எ - று.

இதற்குப் பிரமாணம்:

''போசனுள மகிழ்காளி தாசன்விலை மடந்தையரைப்
பொருளென் றன்னோர்
ஆசைவலைப் பட்டவர்கட் கருநிதியந் தினந்தேடி
அளிக்கு மந்த
நேசமொரு சற்றுமனத் தெண்ணாதங் கவன்கவியால்
நிதியங் கொள்வான்
நாசமவற் கியற்றியசொ லுலகுரைக்கு மெனினவரை
நயக்க லாமோ.''

(புதுமொழி)

மேலதிகாரத்திற் கள்ளுண்ணாமை கூறுகின்றார். (கஉ)

கள்ளுண்ணாமை

93. சுக்கிரனார் சாபத் தொடர்பறிந்தோர் கள்ளிருந்த
திக்கினடப் பாரோ சிவசிவா—மக்களென்பார்
[2]கள்ளுண்ணப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

---

1. குறள், 911. 2. குறள், 930.

(எ - ரை.) கள்ளுண்டான் ஒருவன் தான் அஃதுண்ணுது தெளிந் திருந்த பொழுதின்கண் உண்டுகளித்த பிறனைக் காணுமன்றே; காணுங்காற் ருனுண்ட பொழுதுளதாம் சோர்வினை அவன் சோர்வால் அதுவும் இற்றென்று கருதான் போலும். எ - று.

சோர்வு - மனமொழிமெய்கள் தன்வயத்த வல்லவாதல்.

இதற்குப் பிரமாணம் :

"குருமகனை யரைத்துநற வுடனளித்த கொடியர்செயல்
குறித்து வெள்ளி
அருமறையு மாகமமு முரைத்தபஞ்ச பாதகத்தொன்
ருகி யார்க்கும்
புரைநெறிக டருநறவை யுணநினைந்தோர்க் கருநரகம்
புகுத்தும் பாவம்
வருகவெனச் சபித்தனனென் றறிந்தாரந் நெறிநடக்க
மனம்வை யாரே."

(புதுமொழி)

மேலதிகாரத்திற் சூது கூறுகின்றூர். (சுரு)

சூது

94. வெற்றிநளன் சூதாடி வீடுவிட்டுக் கானுறைந்தான்
சிற்றிடையுந் தானுஞ் சிவசிவா—சுற்றும்
[1]உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்தும்
அடையாவா மாயங் கொளின்.

(எ - ரை.) அரசன் சூதினைத் தனக்கு விநோதத் தொழிலாக விரும்பு மாயின் அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென்றிவ் வைந்தும் அடையாவாம். எ - று.

இதற்குப் பிரமாணம் நைடதம், சூதாடு படலம்:

"சீலநற் றருமமெய் சிதைக்குந் தெண்டிரை
வேலைமுற் றிருநிலக் கிழமை வீழ்த்திடும்
மாலுறுத் திடுங்கவ ருடன் மன்னகேள்
கோலிழுக் கரசர்தங் கொள்கைத் தென்பவே."

"ஐயநீ யாடுதற் கமைந்த சூதமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்."

"கழைசுளி புகர்முகக் களிறு தேர்பரி
இழைதவ ழிளமுலை மகளி ரீட்டிய
விழுநிதிக் குப்பைகள் வேலை சூழ்புவி
முழுவதுந் தோற்றனன் முழவுத் தோளினன்."

(19, 21, 27.)

---

1. குறள், 939.

"கருந்தடங் கண்ணிதன் னுள்ளங் காமுறத்
திருந்துவேற் றடக்கையான் றுகிலிற் சேர்த்தலும்
பொருந்திய துகிலொடும் வஞ்சம் பூண்டெதிர்
இருந்தபுள் ளந்தரத் தெழுந்து போயதே."

(கான்புகுபடலம், 10.)

மேலதிகாரத்தில் மருந்து கூறுகின்றார். (கச)

மருந்து

95. மாதவரூண் மாமருதின் மங்கையர்க்கு முற்பிறப்பின்
சேதிதெரி விக்குஞ் சிவசிவா—ஆதலினால்
[1]மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு.

(எ - ரை.) அம் மூவகை மாறுகோளும் இல்லாத உணவைத் தன் உள்ளம் வேண்டிய அளவினால் அன்றிப் பிணிவாரா அளவினால் ஒருவன் உண்ணுமாயின் அவனுயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல்உண்டாகாது. எ - று.

இதற்குப் பிரமாணம் திருவிடைமருதூர்க் கதை:

"திருவிடை மருதிற் றபோதனன் பயிக்கந்
திரிந்துகொண் டுண்டொரு கவளம்
தருமதை ஞமலி யுண்டபுண் ணியத்தாற்
றராபதி மகளெனப் பிறந்து
வருமதை யறிந்து பலியுண வயின்று
மருவுமோ பிறப்பென மகிழ்ந்து
மருதநா யகனம் மடந்தைதன் னுருவின்
மருவவங் கருள்புரிந் தனனே."

(புதுமொழி)

சிவபுண்ணியத் தெளிவு :

"பாச மகற்றுந் தேசிகன்மெய்ப்
பரிவா லருந்து மிச்சேடம்
ஈச னருளா னேசமுடன்
இன்புற் றருந்து மேலோர்கள்
ஓசை வடிவாஞ் சண்டேசன்
ஒப்புற் றுறைவ ரஃதல்லால்
பேச வரிய பாதகமும்
பிரிப்ப ரிவைசத் தியமாமால்." (45)

மேலதிகாரத்திற் குடிமை கூறுகின்றார். (கரு)

குடிமை

96. தந்தை வதுவை தவிராது வீடுமன்போய்ச்
சிந்தைதெளி வித்தான் சிவசிவா—நந்தா
[2]நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

---

1. குறள், 945. 2. குறள், 960.

(எ - ரை.) ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவனாயின் தான் நாணுடையனாதலை வேண்டுக. குலனுடைமையை வேண்டுவனாயிற் பணிய வேண்டுவோர் யார்மாட்டும் பணிதலை வேண்டுக. எ - று.

இதற்குப் பிரமாணம் பாரதம், சந்தனுமகாராசன் கதை:

"கேட்டவக் கணத்திற் கடற்புறத் தரசைக்
கேண்மையோ டடைந்திள வரசும்
பாட்டனீ யெனக்குப் பெற்றதாய் தானும்
பகிரதி யல்லணின் மகளே
நாட்டமின் றுனக்கிங் கியாதது நிலையிஞ்
ஞாலமு மெம்பியர் ஞாலம்
நீட்டமற் றின்றே திருமண நேர்வாய்
நீதிகூர் நிருபனுக் கென்றான்."

"விரதமுற் றியவா றனைவருங் கேண்மின்
மெய்யுயிர் வீடுமென் றளவும்
சரதமுற் றியமெய்த் தாதுவு மூலத்
தழலுடன் மீதெழுந் தகைத்தே
இரதமுற் றியசொன் மகப்பெறு தவருக்
கில்லையென் றியம்புநற் கதியும்
சுரதமுற் றியவென் றந்தைபே ரருளாற்
பெறுவலென் றின்னதுஞ் சொன்னான்."

(வி. பா. குருகுலச். 97-8.)

மேலதிகாரத்தில் மானம் கூறுகின்றார். (கூசு)

மானம்

97. அன்றொருவை வேந்த னரிவைதனக் காயமர்க்குச்
சென்றுயிரை யீந்தான் சிவசிவா—துன்றும்
[1]மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

(எ - ரை.) தன் மயிர்த்திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர் வாழாக் கவரிமாவையொப்பார், உயிர் நீக்கத்தால் மானமெய்தும் எல்லை வரின், அதனைத் தாங்காது இறப்பர். எ - று.

இதற்குப் பிரமாணம் இராமாயணத்தில் சடாயு சரித்திரம்:

"அதிசய மொருவரா லமைக்க லாகுமோ
துதியறு பிறவியி னின்ப துன்பந்தான்
விதிவழி யென்பது மேற்கொ ளாவிடின்
மதிவலி வாள்வலி யென்ன வல்லமோ."

---

1. குறள், 969.

"பொங்குவெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கு மாய்கதிர்த்
திங்களு மொருமுறை வளருந் தேயுமால்."

"பிள்ளைச்சொற் கிளியன் ஞானப் பிரிவுற லுற்ற பெற்றி
தள்ளுற்ற வறமுந் தேவர் துயரமுந் தந்த தேயால்
கள்ளப்போ ரரக்க ரென்னுங் களையினைக் களைந்து வாழ்தி
புள்ளுக்கும் புலனில் பேய்க்குந் தாயன்ன புலவு வேலோய்."

"வடுக்கண்வார் கூந்த லாளை யிராவணன் மண்ணி னோடும்
எடுத்தன னேகு வானை யெதிர்ந்தென தாற்றல் கொண்டு
தடுத்தன னவ தெல்லாந் தவத்தரன் றந்த வாளால்
படுத்தன னிங்கு வீழ்ந்தே னிதுவின்று பட்ட தென்றான்."

(கம்ப. சடாயுவுயிர்நீத்த. 193, 196, 199, 200.)

மேலதிகாரத்திற் பெருமை கூறுகின்றார். (கூஎ)

பெருமை

98. நல்லூழி நான்குமனு நாரியுட னண்ணவரி
செல்வமக வானான் சிவசிவா—ஒல்லும்
[1]பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல்.

(எ - ரை.) அவ்வாற்றாற் பெருமையுடைவாராயினர் தாம் வறியராய வழியும் பிறர் செய்தற்கரியவாய தஞ்செயல்களை விடாது அவை செய்யும் நெறியாற் கடைபோகச் செய்தலை வல்லராவர். எ - று.

இதற்குப் பிரமாணம்: சதகண்ட சரித்திரம்.

"நீதி சான்மனு நைமிசத் தருகினு நெடுநாள்
மாதவம்புரி காலையின் வண்டுழாய் மவுலி
நாத னங்கெழுந் தருளவந் தடிதொழ நவிறி
ஏது நின்னுளத் தெண்ணிய தெனமனு விசைப்பான்."

"ஊழி நான்குநீ மகவென வுதித்திட வேண்டி
ஆழி யங்கையாய் புரிந்ததித் தவமென வறைய
வாழி மன்னவ வருதுநின் மனைவியு நீயும்
பாழி மாநிலத் திம்முறை வருகெனப் பணித்தான்."

"இருந்த வச்சம தக்கினி ரேணுகை யிமையோர்
மருந்தெ னத்தகு கோசலை தயாதன் மதிகால்
திரிந்து நல்வசு தேவனற் றேவகி சுசீலை
பொருந்து சோமக னெனவரு வீர்களிப் புவிமேல்."

மேலதிகாரத்தில் சான்றாண்மை கூறுகின்றார்.[2] (கூஅ)

1. குறள், 975.
2. கிடைத்த ஏட்டுப்பிரதியில் உரை இதுவரையிலே தான் உள்ளது.

J

சான்ருண்மை

99. தாரு வனமுனிவர் தம்பிழைநோக் காதருளே
சேரநடஞ் செய்தான் சிவசிவா—ஒருமவர்
[1]இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

குறிப்பு: தாருகாவனத்து முனிவர்கள் கர்மவாதிகளாய் இறைவனைப் பழித்து யாகம் செய்து இறைவன்மேற் பல பொருள்களை ஏவ, அவற்றை யெல்லாம் ஏற்றுக் கொண்டு திருநடஞ் செய்தானென்பது புராண வரலாறு. இதனைக் கந்தபுராணம், ததீசி யுத்தரப்படலத்திற் காணலாம். (கூகூ)

பண்புடைமை

100. பாந்தட் பகைமுயலைப் பற்றுதலா னென்றுமதி
தேர்ந்துமதை நீக்கான் சிவசிவா—கூர்ந்த
[2]அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

குறிப்பு: பாம்பினது பகை தனக்கு உண்டாதற்குக் காரணம், அப் பாம்பு தன்பாலுள்ள முயலை விரும்பி அதனைப் பிடிக்க எண்ணித் தன்னை யும் சேர்த்துப் பிடிப்பதேயாகும் என்பதைச் சந்திரன் அறிந்தும் அதனை நீக்கவில்லை. இது கவி தற்குறிப்பேற்ற அணிவகையாற் கற்பித்தது. (க00)

நன்றியில் செல்வம்

101. நல்விசயன் கண்ணன்வர நன்மைபுரி யாமறையோன்
செல்வமிருந் தென்னுஞ் சிவசிவா—தொல்லுலகில்
[3]நச்சப் படாதவன் செல்வ நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

குறிப்பு: விசயன்-அருச்சுனன். கண்ணன்-கிருஷ்ணன். (க0க)

நாணுடைமை

102. சாரும் பதியிலராய்த் தாருவன மாதர்தமைச்
சேரவிறை சென்முன் சிவசிவா—பாரின்மிசை
[4]நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று.

குறிப்பு: தாருவனமாதர்-தாருகாவனத்து முனிவர் மனைவியர். இறை - சிவபெருமான். தாருவனமாதர் நாணிலரென்றபடி; இவ்வரலாற்றைக் கந்த புராணம், ததீசி யுத்தரப் படலத்தில் காணலாம். (க0உ)

1. குறள், 987. 2. குறள், 997. 3. குறள், 1008.
4. குறள், 1020.

குடிசெயல்வகை

103. துய்ய பகீரதனுந் தொல்லரச ரல்லலறச்
செய்தவமென் சொல்வாஞ் சிவசிவா—வையமதில்
[1]நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

குறிப்பு: பகீரதன் கங்கை கொணரத் தவஞ்செய்த வரலாறு வெளிப்படை; கம்பராமாயணம் முதலியவற்றிற் காணலாம். தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல்-தான் பிறந்த குடியினை ஆளுந் தன்மையைத் தனக்கு உளதாக்கிக் கோடல்; 'குடியினையாளுந் தன்மை, குடியிலுள்ளாரை யுயரச் செய்து தன் வழிப்படுதல்' என்று பரிமேலழகர் எழுதுவர். பகீரதன் தன் குடியிற்பிறந்த முன்னோர்களைக் கங்கைப்புனல் பாய்த்திச் சுவர்க்கம் புகச்செய்தமையின் இல்லாண்மையாக்கிக் கொண்டானாயினன். (கoரு)

உழவு

104. வள்ளிபுனங் காத்திருந்த வாறேது வான்பயிர்செய்
தெள்ளிமையா லன்றோ சிவசிவா—உள்ளுமிடத்
[2]தேரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு.

குறிப்பு: பயிர் செய்யுங்கால் அதனைக் காத்தல் யாவற்றினும் சிறந்ததாதலின் அது கருதி வள்ளி தினைக்கொல்லையைக் காத்திருந்தா ளென்றபடி. கட்டபின்-களையெடுத்த பிறகு. (கoச)

நல்குரவு

105. மாமணியாற் காசிபன்போய் மன்விடந்தீ ரான்வறுமைத்
தீமையினான் மீண்டான் சிவசிவா—வாமுன்
[3]அறன்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

குறிப்பு: பரீக்ஷித்து என்னும் அரசனைத் தீண்ட எண்ணியிருந்த தக்ககனென்னும் நாகம், அம்மன்னனை நாகம் கடித்தால் மாற்றுவேனென்றிருந்த காசிபனென்னும் மறையவன் ஒருவனுக்கு மணிகளை ஈந்து அவ்வாறு செய்யாமல் வாளா போகும்படி செய்தனனென்பது இங்கே குறித்த வரலாறு; பாகவதம், பரீக்ஷித்து வீடுபெற்ற அத்தியாயம் பார்க்க. அம்மறையோன் வறுமைத் தன்மையினால், மணியைப் பெற்று, மன்னனை நினையாமற் சென்றான்; அங்ஙனம் சென்றதற்குக் காரணம் வறுமையே யென்றபடி. மன்-பரீக்ஷித்து மன்னன். (கoரு)

---

1. குறள், 1026. 2. குறள், 1038.
3. குறள், 1047.

இரவு

106. தருமகுண மாவலிபாற் றானமெனச் சேர்ந்தான்
திருமகி ணன்றன் சிவசிவா—[1]பரிவின்
[2]இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

துறிப்பு: திரு மகிணன் - திருமால். இது வாமனவதார வரலாறு; கம்பராமாயணம், வேள்விப்படலம் முதலியவற்றால் உணரலாகும். (௧0௬)

இரவச்சம்

107. ஒன்றுதவ வேட முடன்சரா சந்தன்முனம்
சென்றிரந்தார் மன்னர் சிவசிவா—என்றும்
[3]கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்.

துறிப்பு: கண்ணபிரான், வீமன், அருச்சுனன் என்னும் மூவரும் அந்தணர்களைப் போலச் சென்று சராசந்தனிடம் யாசித்தாரென்றும், அவன் அவர்களை இன்னாரென்று உடலடையாளங்களால் அறிந்து உசாவிச் சமர் புரிந்தானென்றும் பாரதம் கூறும்; வில்லிபுத்தூரார் பாரதம், இராசசூயச் சருக்கம் பார்க்க. சராசந்தனிடம் போர செய்தலை இரக்கச் சென்றவர் அதனை இழிவென்று கருதி வேறு வேடத்திற் போயினரென்பது இவ்வாசிரியர் கருத்துப்போலும். (௧0௭)

கயமை

108. வாரிவழி தாரா வருண னடைக்கலமாய்ச்
சேரவழி செய்தான் சிவசிவா—ஆருமிதம்
[4]சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

துறிப்பு: கடல்மீது அணைகட்டுதற்குக் கடலரசனை வழிவேண்டி இராமபிரான் எழுநாள் தவங்கிடந்தும் அவன் வாராமையின் சீற்றங்கொண்டு அம்பினாலெய்து வருவித்தானென்பது வரலாறு; கம்பராமாயணம், வருணனை வழிவேண்டு படலத்திற் காண்க. (௧0௮)

காமத்துப்பால்

தகையணங்குறுத்தல்

109. ஆர்ந்தசுர ரானா ரமுதணங்கைக் கண்டுமகிழ்
சேர்ந்தசுர ரானார் சிவசிவா—சார்ந்ததனை
[5]உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

---

1. இங்கே தளை பிறழ்ந்தது. 2. குறள், 1054.
3. குறள், 1061. 4. குறள், 1078.
5. குறள், 1090.

குறிப்பு: தகை அணங்கு உறுத்தல் - தலைவியின் வனப்பு, தலைவனுக்கு வருத்தத்தை உண்டாக்குதல். மோகினியைக் கண்டு மயங்கி அசுரர்கள் அமுதம் உண்ணுதலையும் மறந்தனரென்பது வரலாறு. கண்டமாத்திரத்தே மயங்குதற்கு மோகினிமாட்டுச் சென்ற காமமே காரணமாயிற் றாதலின் இவ்வரலாறு இங்கே உதாரணமாயிற்று; இதனைப் பாகவதம் முதலிய நூல்களிற் காணலாம். (க0கூ)

குறிப்பறிதல்

110. பைந்தொடியுஞ் சுந்தரரும் பார்த்தகுறிப் பாலன்றோ
சிந்தையுமொன் றானார் சிவசிவா—தந்தமது
[1]கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

குறிப்பு: தலைவன் தலைவி குறிப்பினையும், தலைவி தலைவன் குறிப்பினையும் அறிதல் இங்கே 'குறிப்பறிதல்' எனப்பட்டது. பைந்தொடி - பரவை நாச்சியார். அந்நாச்சியாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒருவரையொருவர் பார்த்து அன்பு பூண்டனரென்பது வரலாறு; இதனைப் பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணத்தால் அறியலாகும். (கக0)

புணர்ச்சி மகிழ்தல்

111. பார்த்தன் சுபத்திரைதன் பார்வையினான் மெய்வெதுப்பும்
தீத்தனைக் கொண்டான் சிவசிவா—மாத்திரைநாம்
[2]நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றா ளிவள்.

குறிப்பு: பார்த்தன் - அருச்சுனன். தலைவன், அருச்சுனன் வரலாற்றை மேற்கோளாக்கிக் கூறும் கூற்றாக அமைந்தது இச்செய்யுள். மெய்வெதுப்பும் தீ - காமத்தீ. சுபத்திரையின்மேல் காமுற்று அருச்சுனன் துறவுவேடம் பூண்டு சென்று அவளை மணந்த வரலாறு இங்கே குறிக்கப்பெற்ற .

"புடவி யெங்கணும் புதையவான் பொழிதரு புனலால்
அடவி யாரழ லவியவு மவிந்தில தையோ
தடவி வாடைமெய் கொளுத்திடத் தனஞ்சயற் கணங்கின்
விடவி லோசனக் கடைதரு விரகவெங் கனலே"
(வி. பா. அருச்சுனன்றீர்த்த. 60)

என்பதில் சுபத்திரையின் பார்வையால் மெய்வெதுப்புந் தீயைப் பார்த்தன் கொண்ட செய்தி கூறப்படுதல் காண்க. (ககக)

நலம்புனைந்துரைத்தல்

112. நந்து சசிமுகத்தை நாண்மதியென் றேநகுடன்
சிந்தைமகிழ் கொண்டான் சிவசிவா—முந்தும்

1. குறள், 1100. 2. குறள், 1104.

[1]அறவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறவுண்டோ மாதர் முகத்து.

குறிப்பு: நலம்புனைந்துரைத்தல் - தலைவன் தலைவியின் நலத்தைப் பல படியாகப் பாராட்டிக் கூறுதல். நகுடனென்பவன் யாகபலத்தால் இந்திர பதவி எய்திய காலத்தில் இந்திராணியின் நலம் நுகரச் சென்றானென்பது பழைய வரலாறு. (ககஉ)

காதற் சிறப்புரைத்தல்

113. காதற் குணம்விருத்த காசிவிப சித்துரைத்த
சேதித் திறமே சிவசிவா—நீதிச்சொல்
[2]உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

குறிப்பு: விபசித்து என்பவர் தம்முடைய மனைவி முதலியோரை இழந்து விருத்தாசலத்தில் வந்து வழிபட்டுப் பேறுபெற்றார். அவர் இடையிலே தேவமகளிரைக் கண்டு தம் வரலாறுரைக்கும்போது தம்மனைவியை இழந்தமை குறித்து வருந்தினார். அப்பொழுது அவர்,

"குணத்தினா லழகாலென் குணங்களறிந் தினிதூட்டும்
வணத்தினா லறிவாலென் மனையாளுக் கிணைகாணேன்
பிணத்தைநே ராயிருந்தேன் பேய்கண்மிரு கங்களுக்கும்
இணக்கமொரு பெண்ணுளதா லென்போலும் பாவிகளார்"
(விருத்தாசல. விபசித்துச். 16.)

என்று வருந்திக் கூறியதாக விருத்தாசலபுராணம் கூறும். விருத்தகாசி - விருத்தாசலம். சேதித்திறமே காதற்குணம் என்க. (கககூ)

நாணுத் துறவுரைத்தல்

114. சேர விரைந்துவந்துஞ் சீதை யிராமனுளம்
தேர விருந்தாள் சிவசிவா—பாரிற்
[3]கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். (ககச)

அலரறிவுறுத்தல்

115. இந்துநுதன் மாயைவிர கெண்ணி விலாசிசொலச்
சிந்தைமகிழ் கொண்டாள் சிவசிவா—புந்தி
[4]களித்தொறூஉங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

குறிப்பு: மாயை யென்பவள் அல்லமன்பாற் காதல் பூண்டிருப்ப அவளையாற்றுதற்கு ஒருபாயத்தை அவள் தோழியாகிய விலாசியென்பவள்

---

1. குறள், 1117. 2. குறள், 1125.
3. குறள், 1137. 4. குறள், 1145.

கூற, மாயை அதற்கு உடம்பட்டு மகிழ்ந்தாளென்றபடி. இவ்வரலாறு பிரபுலிங்கலீலையிற் காணப்படும். (கக௫)

பிரிவாற்றுமை

116. கோதைவரி விற்றடக்கைக் கொண்டல்பிரி வாற்றுமற்
சீதைவனம் போனாள் சிவசிவா—ஓதுமிடத்
[1]தின்னா தினனில்லூர் வாழ்த லதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு.

குறிப்பு: கொண்டல் - இராமபிரான். சீதை இராமரது பிரிவை ஆற்றுமல் அவருடன் வனம் சென்றாளென்பது இராமாயண வரலாறு. (கக௬)

படர் மேலிந்திரங்கல்

117. மாறனொரு நாட்பிரிவின் மங்கையர்க ணீடிரவைச்
சீறியுரை செய்தார் சிவசிவா—கூறிக்
[2]கொடியார் கொடுமையிற் றங்கொடிய விந்நாள்
நெடிய கழியு மிரா.

குறிப்பு: படர்மெலிந்திரங்கல் - தலைவி தான் உருகுகின்ற துன்பத்தை நினைந்து அந்நினைவால் மெலிந்து இரங்குதல். மால்தன் - கண்ணபிரானுடைய. கண்ணபிரான் ஒருமுறை கோபியரைப் பிரிந்துசெல்ல, அதனால் அவர்கள் மிக வருந்தினரென்பது பாகவத வரலாறு. மாறன், பாண்டியனின், ஆசிரியர்குறித்த வரலாறு இன்னதென இப்பொழுது விளங்கவில்லை. (ககஎ)

கண் விதுப்பழிதல்

118. நாடரிய கண்ணே நளனை விழித்தகற்றித்
தேடியழு லென்னே சிவசிவா—ஓடிக்
[3]கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.

குறிப்பு: கண்விதுப்பு அழிதல் - கண்கள் தலைமகனைக் காணும் விரைவினால் வருந்துதல்; விதுப்பு - விரைதல். இச்செய்யுள் தமயந்தி நளனைக் கனவிற் கண்டு, விழித்தபின் காணாளாகி வருந்திக்கூறும் கூற்றாக அமைந்துள்ளது. (கக௮)

பசப்புறு பருவரல்

119. மாரன்மகன் மஞ்சமுடன் வாராமுன் வாணன்மகள்
சேருநினை வாலே சிவசிவா—சார்வாற்
[4]பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

---

1. குறள், 1158.
2. குறள், 1169.
3. குறள், 1173.
4. குறள், 1188.

குறிப்பு: பசப்புறுபருவரல் - பசலையுற்றதனாலாய வருத்தம். பசலை - பிரிவின்கண் வரும் நிறவேறுபாடு. வாணாசுரன் மகளாகிய உஷையென்பவள் பிரத்தியும்நன் மகனாகிய அநிருத்தனைக் கனவிலே கண்டு அளவளாவிப் பின் அவனை மஞ்சமுடன் கவர்ந்துவரச் செய்தாளென்பது பாகவத வரலாறு. பிரத்தியும்நன் காமனது அவதாரமாதலின் அவனை மாரனென்றார். நினைவாலே சேருதல் - உள்ளப்புணர்ச்சி பெறுதல். (கக௯)

தனிப்படர் மிகுதி

120. முல்லைமட வார்கண்ணா முன்னின் றொருமொழியாற்
செல்லறவி ரென்றார் சிவசிவா—சொல்லின்
[1]நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

குறிப்பு: தனிப்படர்மிகுதி - தனியாகிய துன்பமிகுதி. கண்ணன் ஒருமுறை கோபியர்களைவிட்டுத் திடீரெனப் பிரிந்தான். அவனைக் காணாத கோபியர், "நீ எம்முன்னே தோன்றி ஒரு மொழியேனும் கூறி எம் துன்பத்தைத் தவிர்" என்று வேண்டினாரென்பது இங்கே குறித்த வரலாறு. இதனைப் பாகவதத்திற் காண்க. முல்லைமடவார் - முல்லைநிலத்துப் பெண்களாகிய கோபியர். செல்லல் - துன்பம். (க௨0)

நினைந்தவர் புலம்பல்

121. சந்தனுவுங் கங்கை தனைப்படத்தி லேயெழுதிச்
சிந்தையல மந்தான் சிவசிவா—தந்தமனத்
[2]துள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

குறிப்பு: சந்தனுவென்னும் அரசன் கங்கையைக்கண்டு காமுற்ற செய்தியைப் பாரதத்திற் காணலாம். அவன் கங்கையைப் படத்திலெழுதிப் பார்த்தமை,

"அன்றுதொட் டிவனு மகன்றபூங் கொடியை
அழகுற வெழுதிமுன் வைத்தும்
ஒன்றுபட் டுவமைப் பொருள்களாற் கண்டும்
உரைத்தவை யெடுத்தெடுத் துரைத்தும்
மன்றலிற் றலைநாள் விழைவொடு மணந்த
மடந்தையர் வதனமு நோக்கான்
என்றினிக் கிடைப்ப தென்றுளம் வருந்தி
எண்ணுநா ளெல்லையாண் டிருந்தான்"

(வி. பா. குருகுலச். 79)

என்பதனால் தெரியவரும். (க௨க)

---

1. குறள், 1199. 2. குறள், 1201.

கனவுநிலை யுரைத்தல்

122. நித்திரையி லுற்றணைந்தா னேய னிரத்னவல்லி
சித்திரரே கைக்குச் சிவசிவா—ஒத்துரைக்கத்
[1]துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தா ராவர் விரைந்து.

குறிப்பு: இரத்தினவலி யென்பவள் ஒருத்தி சிவபெருமானுக்குரிய பல மூர்த்தங்களுள் இரத்தினேசனென்னும் மூர்த்தியைப் பூசித்து அவ்விறைவன் திருவருளால் இரத்தினசூடனென்னும் நாக அரசன் துயிலும்போது வந்து அணையப் பெற்றாள். துயிலெழுந்த பின் அவளுடைய மெய்ம்மெலிவு முதலியவற்றைக் கண்ட தோழியர் மூவர், பல ஆடவருடைய படத்தை எழுதிக் காட்டினர். அம்மூவருள் ஒருத்தியாகிய சித்திரரேகை எழுதிய படங்களுள் இரத்தினசூடன் படமும் இருந்தது; ஆதலின் அவன்தான் இரத்தினவலியாற் காமுறப்பெற்றவன் என்பதை அப்படத்தின் வாயிலாக யாவரும் அறிந்தனர். இவ்வரலாறு காசிகாண்டம், இரத்தினேசன் கதை யுரைத்த அத்தியாயத்திற் காணப்படுவது. இரத்னவல்லி சித்திரரேகைக்கு ஒத்துரைக்க நேயன் அணைந்தானென்று கூட்டிப் பொருள் செய்க. நேயன் - இரத்தினசூடன். (கஉஉ)

பொழுது கண்டிரங்கல்

123. வாடிக் கணவனுறு வல்லிரவிற் பிங்கலையும்
தேடிமன நொந்தாள் சிவசிவா—ஓடிப்
[2]பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

குறிப்புரை: பிங்கலையென்பாள் இன்னளென்பது இப்பொழுது விளங்கவில்லை. (கஉங)

உறுப்பு நலனழிதல்

124. வைதாள் விசயன் மருவா துருப்பசியென்
செய்வா ளயர்ந்தாள் சிவசிவா—மெய்யாக்
[3]கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

குறிப்பு: தேவலோகத்துக்குச் சென்றிருந்த அருச்சுனனோடு ஊர்வசி அளவளாவ விரும்பியபொழுது அவன் மறுத்தான்; அதனால் அவள் அவனைப் பேடியாகும்படி சபித்தனளென்பது பாரத வரலாறு. இதனை வில்லி புத்தூரார் பாரதம், நிவாதகவசர் காலகேயர் வதைச்சருக்கத்திற் காணலாம். வைதாள் - சபித்தாள். (கஉச)

---

1. குறள், 1218. 2. குறள், 1230.
3. குறள், 1235.

நெஞ்சோடு கிளத்தல்

125. வண்ண வுருக்குமிணி மாயன் மணம்புணர்தல்
திண்ணமென வுற்றாள் சிவசிவா—உண்ணினைவிற்
[1]செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றா லுறாஅ தவர்.

குறிப்பு: உருக்குமிணி, கண்ணபிரான் தன்னை எங்ஙனமேனும் மணம்புரிவானென்ற உறுதியோடிருந்தாளென்பது பாகவத வரலாறு. (கஉரு)

நிறை யழிதல்

126. அன்றவனத் தண்ண லருகே நிறையழிந்தார்
சென்றமுனி மாதர் சிவசிவா—ஒன்ற
[2]நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

குறிப்பு: வனம் - தாருகாவனம். அண்ணல் - சிவபிரான். (கஉசு)

அவர்வயின் விதும்பல்

127. மன்னுமுன்கே ளென்னவுஞ்சீ மந்தனிதே றாமலுளம்
சின்னமுற லென்னோ சிவசிவா—உன்னின்
[3]ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

குறிப்பு: விதும்பல் - விரைதல். சீமந்தனியென்பவள் தன் கணவனை இழந்து சோமவார விரதபலத்தால் மீண்டும் பெற்றாளென்பது பிரமோத்தர காண்டத்திற் கண்ட வரலாறு. மன்னும் - உயிரோடு நிலைபெறுவான். கேள் - கணவன். (கஉஎ)

குறிப்பறிவுறுத்தல்

128. குன்றிற் சுமதி குறிப்பாற் றருமகுத்தன்
சென்றுமயல் கொண்டான் சிவசிவா—என்றும்
[4]முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

குறிப்பு: தருமகுத்தனென்னும் அரசகுமாரன் பிரதோஷ பூசைபுரிந்த பலத்தால் சுமதியென்னும் கந்தருவமகளை ஒருகுன்றின்மேற் கண்டு காமுற்று மணந்தானென்பது, பிரமோத்தர காண்டத்தில், பிரதோஷ பூசை மகிமை அத்தியாயத்திற் காணப்படும் வரலாறு. (கஉஅ)

---

1. குறள், 1245. 2. ௸, 1260.
3. ௸, 1269. 4. ௸, 1274.

புணர்ச்சி விதும்பல்

129. மன்ன னகலிகையைநீள் வஞ்சனைநீங் காமனுடற்
சின்னமுற லென்னோ சிவசிவா—என்னவவற்
[1]காணுங்காற் காணேன் றவறாய காணுக்காற்
காணேன் றவறல் லவை.

குறிப்பு: மன்னன் - இந்திரன். அகலியை வரலாறு ராமாயணம் முத லியவற்றால் உணரப்படும். (கஉகூ)

நெஞ்சோடு புலத்தல்

130. கன்றால் விளவெறிந்த கண்ணனுட னெம்மைவிட்டுச்
சென்றாயே நெஞ்சே சிவசிவா—லொன்றாவித்
[2]துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

குறிப்பு: கண்ணபிரானைப் பிரிந்த கோபியர் தம் நெஞ்சை நோக்கிக் கூறிய கூற்றாக அமைந்தது இது. கன்றால் விளவெறிந்த வரலாறு பாகவதத் திற் காணப்படும். (கஙo)

புலவி

131. சத்திய பாமைமலர் தந்திலனென் றாடவுடன்
சித்தமகிழ் வித்தான் சிவசிவா—நித்தமுணற்
[3]குப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.

குறிப்பு: சத்தியபாமை தனக்குத் தேவலோகத்திலுள்ள பாரிசாதமலர் வேண்டுமென்று கண்ணன்பால் ஊட அவன் அவ்விருட்சத்தையே கொணர்ந்து நட்டானென்பது பாகவத வரலாறு. (கஙக)

புலவி நுணுக்கம்

132. இப்பிறப்பி லேப்பிரியே னென்றநள னோடேல்
செப்பவரி தன்றே சிவசிவா—அப்படியே
[4]இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

குறிப்பு: ஊடல் - தமயந்தி கொண்ட ஊடல். (கஙஉ)

---

1. குறள், 1286.
2. ஷை, 1299.
3. ஷை, 1302.
4. ஷை, 1315.

ஊடலுவகை

133. மான்மகள்பா லூடிமர மானான் மழகளிற்றின்
தேனனையாள் காந்தன் சிவசிவா—ஏனெனினங்
[1]கூடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

குறிப்பு: மான்மகள் - வள்ளி. மழகளிற்றின் தேனனையாள் - தேவயானை. காந்தன் - முருகக்கடவுள். முருகக்கடவுள் வேங்கைமரமாக நின்ற வரலாற்றைக் குறித்தபடி. (கஙரு)

சிவ சிவ வெண்பா முற்றுப்பெற்றது.

---

1. குறள், 1330.